# தென்மொழி

## வழி பிறி துண்டோ?

மொழிநலம் உணரார்; மக்கள்
    முழுநலங் கருதார்; தீய
பழி மிகத் துணிவார்; ஈட்டம்
    பதுக்குவார்; உரையால் ஏய்ப்பார்;
அழிவழக் கிடுவார்; இன்னோர்
    அமைச்சரென் றமர்வா ராகில்
வழி பிறி துண்டோ? நாடு
    வளம்பெறல் குதிரைக் கொம்பே!




மேழம் (சித்திரை)
தி. பி. 1996


ரூ 0
50 காசு


தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்




'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | சித்திரை தி.பி. 1996 (1965 ஏப்ரல்) | ஓலை 3

# இருமொழியா? மும்மொழியா?

'மொழி கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள உதவும் ஒரு கருவியே, இதற்காக இத்தகைய போராட்டமா? அரசியல் குழப்பமா?' என்று தலைவர்கள் சிலரும், ஆட்சியிலமர்ந்திருப்பார் ஒரு சிலரும் சிற்சில கால் நடுநிலையோடு பேசுவதாகக் கருதிக் கொண்டு அரற்றித் திரிகின்றனர். இதைத்தான் நாமும் கேட்கின்றோம்; ஆனால் சிறிது பொருள்படும்படி கேட்கின்றோம். கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள உதவும் ஒரு கருவியாகவே மொழியைக் கருதிக் கொள்வோம்: அதற்காக ஏன் இத்தனை வரவேற்பும்; ஆர்ப்பாட்டங்களும்; சட்ட வரைவுகளும்; விலங்குத்தனமான ஆட்சிக் கடுபிடிகளும்? இவ்விடத்தில்தான் அவர்களும் விளங்கிக்கொள்ள விரும்பாத ஓர் உண்மை பொதிந்து கிடக்கின்றது. அஃது இது: மொழி தொடக்கத்தில் கருத்துகளைப் பறிமாறிக்கொள்ள உதவும். அதன்பின் கருத்தை அடிமைப் படுத்தும். கருத்தடிமை உணர்வுமாற்றத்தை உண்டாக்கும். இந்த உணர்வு மாற்றம் வாழ்வையே மாற்றியமைக்கும். இந்த உண்மையை எந்த மொழிமேலும் பொருத்திப் பார்க்கலாம். ஆங்கில மொழி முதலில் கருத்தை அடிமைகொண்டது. அதன் பின் உணர்வை மாற்றியது. பின் வாழ்வையே மாற்றிவிட்டது.

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

ஆனால் ஆங்கிலத்தால் மாற்றப்பெற்ற வாழ்வு ஓரளவு அறிவியல் வாழ்வாக அமைந்துவிட்டதால், அவ்வாழ்வு மாற்றம் விரும்பப் படுவதாகி மேலும் மேலும் வேண்டப்படுவதாகவும் அமைந்துவிட்டது. இவ்வாங்கில மொழி பிற மொழிகள் போலன்றி உலகம் முழுவதும் இணைத்துக் கொண்டு ஊடுருவி நிற்கும் ஒரு பெருந் தொடர்பு மொழியாகும் ஆங்கில மொழி ஆங்காங்குள்ள பிற மொழிகளால் தன்னையும் வளர்த்துக் கொண்டு, தன்னால் பிற மொழிகளையும் வளர்த்து வருவதாகும். ஒரு மொழியில் குவிந்து கிடக்கும் அறிவுச் செல்வங்களை வாரிச் சுமந்து கொண்டு, உலகின்கண் உள்ள பல மொழிகளுக்கும் அதனைப் பகுத்துக் கொடுத்து விலைபோக்கும் ஒரு பெரு வாணிக மொழி ஆங்கிலமாகும் ஆரியத்தால் கட்டுண்டு கிடந்த தமிழரின் அடிமைத்தளையை அறுத்துத், தம்மை மறந்து கிடந்த அவர்களுக்குத் தம்மையும் காட்டி, உலகையும் உணர்த்தியது ஆங்கிலமே! மிகுந்த இரக்க உணர்வாலும், ஈகை உள்ளத்தாலும் தமிழர் தம் பகைவர்களையும் பாராட்டத் தொடங்கிய அடக்க நிலையினை விலக்கி, உலகில் நாம் அடைய வேண்டிய அருமை பெருமைகளை உணர்த்தியது ஆங்கிலமே எனின் மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆங்கில மொழியின் கருத்து மாற்றமும், உணர்வு மாற்றமும், வாழ்வியல் மாற்றமும் தமிழரால் என்றும் வரவேற்கத் தக்கனவாகும். மேலும் நடை, உடை, நாகரிகங்களால் வேறுபட்டுக் கிடப்பினும், தமிழரும் ஆங்கிலரும் மனத்தாலும், அறிவாலும், வாழ்வாலும் பொருந்தியவராவர். தமிழைக் கற்ற சிறிது காலத்திற்குள் தமிழராகவே மாறிவிட்ட ஆங்கிலேயர் உளர். தமிழர்தம் வாழ்வியல் உண்மைகளையும் அவர்தம் பெருமைகளையும் வியந்து பாராட்டிய ஆங்கிலேயர் அவரைப் போலவே வாழ்ந்தும் காட்டினர். அரும்பெரும் தமிழ் நூல்களை எழுதியதோடன்றி நம் மொழிக்கென மொழி நூற்களும் எழுதித் தமிழ் மொழியின் அளப்பரிய பெருமையையும் விளக்கரிய ஆற்றலையும் வெளிப்படுத்தி உலகுணருமாறு செய்தனர்

இத்தகைய தமிழ் ஆங்கில இணைப்பு, தமிழர்க்குள்ள ஒருசில சிறந்த நுண்ணியல்புகளைப் போக்கிவிட்டதேனும், அதனால் பெற்ற இழப்பினைப் பார்க்கினும் அதன்வழிப் பெற்ற ஊதியமே தமிழுக்கும் தமிழர்க்கும் மிகுதியாகும். இனித் தமிழாலும் ஆங்கிலம் பெற்ற ஊதியமும் உண்டு. இவ்வாறான மொழித் தொடர்பு போல் ஏன் இந்திமொழியும் அமையக்கூடாது என்று இங்குள்ள தமிழர் ஒருசிலரும், வடவர் மிகப் பலரும் விடாப்பிடியாகக் கேட்டுச் செயல்படுத்தியும் வருகின்றனர் அவர் செயல் புலியைப் பார்த்துப் பூனையும் சூடு போட்டுக் கொண்ட கதையாக முடியுமேயன்றி, எள்ளத்துணையும் பயன் விளைக்காது என்று தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்க. அவ்வாறு கூறுவ

தற்குக் காரணங்கள் இவை: இந்திமொழிக்கு ஆங்கிலத்தில் உள்ளதைப் போன்ற சொல்வளம் இல்லை. தமிழில் உள்ளதைப் போன்ற சொல்வளத்தை எக்காலத்தும் பெற முடியாது. அதற்கென முயற்சி செய்யினும் ஒரு நிலையடைய நூற்றுக் கணக்கான ஆண்டுகள் செல்லும். அதற்குள் தமிழும் பல்லாயிரக் கணக்கான புதிய சொற்களைப் படைத்துக் கொள்ளும். ஒரு பொருளில் இன்னொரு பொருள் ஊடுருவ வேண்டுமாயின், ஊடுருவப் பெறும் பொருளைவிட ஊடுருவிச் செல்லும் பொருள் வலிவாக இருத்தல் வேண்டும். மரத்தில் கத்தி பாயும் இரும்பினுள் மரம் பாயாது. அதுபோல் ஆழ்ந்து, அகன்று, பரந்து, விரிந்த நுண்மையான ஒலியியல்பும் சொல்லியல்பும், பொருளியல்பும் வாய்ந்து, திண்மையாக நிற்கும் தமிழ் மொழியிலும், அதனைப் பயிலும் தமிழர்களிடையிலும் ஒரு மொழி ஊடுருவி இடம் பிடிக்க வேண்டுமாயின், அது தமிழை விட ஒரு வகையிலாகிலும் சிறப்பாகவும் வலிவாகவும் இருத்தல் வேண்டும். பெருந்தொகையினர் அறிந்துள்ள மொழியாகவே இந்தி இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அதன் காரணமாகவே அது பிறமொழிகளில் சிறப்பாகத் தமிழிலும் தமிழரிடையிலும் ஊடுருவுந் தகையது என்று கூறிவிட முடியாது. இந்தியா முழுவதிலும் உள்ள பறவைகளில் காகமே எண்ணிக்கையில் மிகுந்துள்ளது என்ற காரணம் பற்றி, அதுதான் இந்தியாவிலுள்ள பறவைகளுள் சிறந்த பறவையென்றும், அழகான பறவையென்றும், அதைத்தான் எல்லாருடைய வீடுகளிலும் வளர்க்க வேண்டுமென்றும் கூறுவது எத்தனை மடமையோ. அத்தனை மடமையாகும் இந்தி பெரும்பான்மையோரால் பேசப் பெறுவது; அதனால் அதுதான் தேசீய மொழி; ஆகையால் அதனை எல்லாரும் படித்துத்தான் தீரவேண்டும்' என்பதும்.

'மொழி வெறும் கருத்துகளைப் பறிமாறிக் கொள்ள உதவும் கருவி' என்பதே உண்மையானால், நாம் கருத்துகளைப் பரிமாறி கொள்ளுவதற்காக ஏன் வேற்று மொழியைப் படித்தல் வேண்டும் 'நம் கருத்துகள் மட்டும் போதாவே; பிற மொழியிலுள்ள கருத்துகளையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டாவா' எனின், இந்தி கருத்துகள் பொதிந்த களஞ்சியமா என்ன? தமிழ் மொழியில் இல்லாத சிறப்பு இந்தியில் என்ன இருக்கின்றது? 'அஃதவ்வாறன்று; இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் ஒரு மூலையில் இருப்பவர் இன்னொரு மூலையில்போய் வாழ நேரிடுமாகையாலும் இப் பெருநிலப் பரப்பில் உள்ள மக்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையோடியங்குவது இன்றியமையாதது ஆகையாலும் அவர் தமக்குள் ஒரு பொது மொழி கட்டாயம் வேண்டும்' என்பார்களாயின், அதற்கு இந்திதான் தகுதி வாய்ந்தது என்பதை மெய்ப்பித்தது யார்? அத்தகைய அடிப்படை ஒற்றுமைக்குத் தகுதி வாய்ந்ததான ஓர் உயர்தனிச் செம்மொழியாந் தமிழைப்

பார்க்கினும் வேறு ஒரு சிறந்த மொழியுண்டோ? இனி, பல் வகைச் சிறப்பும் பெற்ற தமிழே அத்தகைய ஒற்றுமையை உண்டாக்கப் பயன்படுத்தப் பெறவில்லையாயின், ஒன்றுக்கும் உதவாக்கரையான இந்தி என்ன ஒற்றுமையை உண்டாக்கி விடப் போகின்றது? அது நுழைக்கப் பெறும் பொழுதே இருக்கின்ற ஒற்றுமையும் கலகலத்துப் போயிருக்கின்றதெனில், அஃது இன்னும் மேலும் மேலும் ஆட்சி செலுத்தத் தொடங்குமானால் எத்தகைய இடர்ப்பாடுகள் வந்து நேரும் என்பதை அரசினர் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். பலருள்ளும் ஒற்றுமை நிலைநிறுத்துவான் வேண்டி ஒரு நடுவர் அமர்த்தப் பெற்றால், அப்பலரினும் அந்நடுவர் அறிவானும், உரையானும், உளத்தானும், செயலானும் சிறந்தாராக இருத்தல் வேண்டுமேயல்லாது, ஏதுங்கெட்ட ஒரு பேதையாக இருந்துவிடல் கூடாது. அவ்வாறிருப்பின் அப் பேதையும் மீளான்; அவர்களும் மனம் பொருந்தி ஒற்றுமையுரார்.

இனிச் சொல்வள மட்டுமின்றி இந்தி மொழி! கருத்து வளமும், நூல் வளமும், அமைப்புச் செப்பமும் அற்றதாகும். தன் பசி தீரான் பிறர் பசியடக்கான் என்பதுபோலத் தானே பல வகையிலும் முன்னேற வேண்டியிருக்க, பிற மொழிகளுக்கும் அம் மொழிகளைப் பேசும் மக்களுக்கும் நிறைவளிக்காத இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தலைமையேற்க எவ்வகையானும் தகுந்தது இல்லை. திறமையுள்ளவர்கள் பலரும் இருக்க ஏதும் அறியாத மூடனை அரசனாக அமர்த்தினால் மக்கள் ஒப்புவரோ? அவ்வாறு ஒவ்வாத மக்களிடையே, ''இல்லை; இவன் வெறுமனே இருக்கட்டும்; ஆள்வது நாங்களல்லவா?'' என்று சிலர் நொண்டிச் சாக்குச் சொல்லி வருகின்றனர். எதற்காக வெறுமனே பெயர்க்காக ஏதுமில்லாத ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கல் வேண்டும்? எதற்குக் கோடிக் கணக்கில் வரிப் பணத்தைச் செலவிட ல்வேண்டும்? நோஞ்சானைப் பொதிமாடாகப் பருக்கவைக்க முயல்வதுபோல், இந்திமொழிக்குப் பலவகையிலும் ஊட்டச்சாரமேற்றி வருகின்றனர். அதற்குப் பத்தவத்சலம் போன்ற மாநில அமைச்சர்கள் மருந்தரைத்துக் கொடுக்கின்றனர். இதனைப் பலவகையாலும் சிறப்புறும்படி செய்து, பிறகு உலாவிட முயன்று வருகின்றனர். இவர்தம் அறியாமையால் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணி எவ்வளவு தடைப்படுகின்றது? நாட்டை வளப்படுத்த வேண்டிய செயல் எவ்வளவு காத்துக் கிடக்கின்றது? பயிருக்கு இறைக்காத நீரை நச்சுச் செடிக்கு வார்ப்பதுபோல், இந்தியின் பொருட்டு எவ்வளவு பணம் பாழாக்கப் படுகின்றது! இவர்தம் முயற்சிக் குறைவால் வளக்குறைவு ஏற்பட, அதனைச் சரிகட்ட எந்தெந்த நாடுகளிடையே போய் பல்லைக்கெஞ்சி மடிவிரிக்கவேண்டியுள்ளது.

இவற்றைக் கொஞ்சமாகிலும் ஆளுநர் உணர்ந்ததாகத் தெரிய வில்லை.

நம் நாட்டிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களும் அரசியல் நாற்காலியின் கால்களை ஆளுக்கொன்றாகப் பிடித்துக் கொள்ள முயற்சி செய்கின்றனரே யன்றி, உண்மையாக மக்களைப்பற்றிக் கவலைப் படுவாராகத் தெரியவில்லை. நாடோ ஏறத்தாழ மூந்நூறு ஆண்டுகள் அடிமையில் உழன்று வளமிழந்த நாடு. மக்களோ, கண்விழிக்கா முன்பே கட்டவிழ்த்து விடப்பெற்றுத் தட்டுத் தடு மாறும் போக்கிலிகள். அரசோ, தன் ஏறிய ஆட்சிக் கட்டில் பிறர் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக, விரைவு விரைவாகக் கண்களை மூடிக்கொண்டு வழிமுறைப் பட்டயம் எழுதிக் கொண்டுள்ளது. இங்குள்ள அமைச்சர்களோ, அரசு எழுதும் உரிமைப்பட்டயத்தில் தங்கள் பெயர்களும் அழியாமல் பொறிக்கப் பெறல் வேண்டும் என்பதில் அக்கறைகொண்டு மக்களை மறந்த பதவிப் பித்தர்கள். இங்குள்ள கட்சிகளோ திசைக்கொன்றாகப் பிணித்த குதிரைகள் போல, மக்களைப் பல வழிகளிலும் இழுத்து முட்டுப்பாடுற்றுச் சோர்வுற வைக்கும் வேட்டைக்காரர்கள். இந்நிலையில் தமிழ் தன்னையும் காத்துக் கொண்டு தன் மக்களையும் காக்க வேண்டியுள்ளது. இப்புகை மண்டிய சூழ்நிலையில் வகை வேண்டிக் கிடக்கும் தமிழர்களைக் கைகூப்பி வேண்டிக்கொள்வது இது: தமிழர்களே! ஒன்றுபடுங்கள்; கண்விழியாது உளஞ்செத்த தமிழர்களைக் கட்டியிழுத்துச் செல்ல விரும்பும் தலைவர்களே! ஒன்றுபடுங்கள். காட்டாட்சி நடத்தும் இவ் வரசினரின் தீமையான போக்குகளை ஒன்றுசேர்ந்து கண்டியுங்கள். வடவரின் காலடியில் சிக்குண்டு கிடக்கும் தமிழக மக்களை மீட்க வேண்டியாவது ஒன்றுசேருங் கள். 'இந்தியே ஆட்சிமொழி' என்று அறம்பேணுது கூறும் மொழிச் சிக்கலை அறவே தடுத்து நிறுத்துங்கள். இற்றைச் சூழ் நிலையில் ஆட்சிமொழி வேண்டும் என்பதும், அதற்கு இந்தியே தகுதி என்றுரைப்பதும் தேவையற்ற போக்குகள் என்று கண் டித்து வழக்காடுங்கள். தமிழர்க்கு தமிழே ஆட்சி மொழி. தமிழ் அதற்குத்தகுதியில்லையாயின் அதைத்தகுதியுடையதாக்குங்கள். ஒன்றுமில்லாது நேற்றுப் பிறந்த இந்தி மொழியை இந்தியா முழு வதும் ஆட்சி மொழியாக்கப் பலவொருகப் பாடுபடுகையில், பெரும்பாலும் நிறைவுற்ற தமிழ் மொழியை மாநில அளவிலாவது முழுமையாக ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்குவது கடினமன்று புலவர்களெல்லாரும் ஒன்று கூடிப் பிறமொழிகளிலுள்ள கலைச்சொற்களையெல்லாம் மொழி பெயர்த்து மக்களுக்குத் தரட்டும் தமிழும் ஆங்கிலமும் பயிலும் இரு மொழிக்கொள்கையே தமிழர்கள் கொள்ளத்தக்கது. தலைக்கொரு கொள்கையாகக்கூறித் தமிழர்களைத் தடுமாற்றத்துக்குள்ளாக்கும் கட்சித் தலைவர்களைப் பற்றிக் கவலைப்படல் வேண்டா. தமிழின்

சிறப்பு வெளிநாட்டாராலும் போற்றிப் புரக்கப்பட வேண்டுவ தாயின் தமிழன் ஆங்கிலத்தும் திறம் பெறல் மிகமிக இன்றி யமையாததாகும்.

ஆங்கிலம் கற்காத தமிழன் தமிழின் பெருமையையும் உணர்ந்தவனாகான். ஆங்கிலம் விலக்கத் தக்கதன்று. விரும்பிக் பேணிக் கொள்ளத்தக்கது. ஆங்கிலத்தை அகற்றின் அவ் விடத்தில் இந்திதான் அமர்த்தப்பெறும் என்பதுறுதி. ஆகலின் இந்தியை எவ்வகையாலும் எவ்வுருவிலும் தமிழ் நாட்டெல்லை யைத் தாண்டி வரவொட்டல் கூடாது. இந்தி பயிற்றுவிக்கும் வகுப்பறைகளை விட்டுத் தமிழ் மாணவர்கள் வெளியேறுதல் வேண்டும். இந்தி பயிற்றுவிக்கும் தமிழ ஆசிரிய ஆசிரியைகள் அதனைப் பயிற்றுவித்தலை விட்டுவிட்டு வேறு தொழில் நாடிப் போதல் வேண்டும். 'இந்தி படித்தால்தான் வேலை வாய்ப்புகள்' என்றால் கைத்தொழில் கற்றுக் கொள்ளுங்கள். இந்தி ஆங்கிலம் போலன்றித் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் ஊறுவிளைப்பது; தமிழ்ப் பண்பாட்டையே மாற்றுவது; தமிழர்களையே அடிமைப் படுத்துவது. இந்தி கற்கக் கற்கத் தமிழறிவு குறையும்; வள மற்றுச் சரியும் ஆங்கிலம் அறவே அகற்றப்படுதல் வேண்டும் என்று கூறுகின்ற கட்சித் தலைவர்களுக்காக இரங்குங்கள். அந்தோ, அவர்கள் ஆங்கிலத்தையும் நன்கு உணராதவர். தமிழையும் நன்கு கல்லாதவர். இந்தித் திணிப்பு நாளுக்கு நாள் வலிவடைந்து வருவதற்குக் காரணம் அதன் சிறப்பன்று. அதற் கிருக்கும் அரசியல் செல்வாக்கே. இந்தியும் தமிழும் எதிரெதி ரானவை. ஆங்கிலமும் தமிழும் இணைப்பு வாய்ந்தவை. நினை வில் வைத்துக் கொள்ளுங்கள்; நாம் போராடுவது தமிழ் ஆட்சிக்கும், ஆங்கில நீட்சிக்கும், இந்தி வீழ்ச்சிக்குமாகும்!

–பெருஞ்சித்திரன்.

---

## மாணவர்களே தமிழை வளப்படுத்துங்கள்!

தமிழ் மொழியைச் சரிவரப் பேணாமையாலேயே, இந்தி போன்ற பிறமொழிகளின் வல்லாட்சியை இத்துணை வலிவோடு எதிர்த்துத் தடுக்கவேண்டியுள்ளது. மாணவர்கள் தமிழில் போதிய அக்கறை காட்டியிருப்பின் அரசினர் இந்தித் திணிப்பைக் கனவிலும் கருதியிரார். ஆகையால் மாணவர்களே, தமிழை வளப்படுத்துங்கள்! கலை, வாழ்க்கை அரசியல், பொருளியல் உளவியல், உடலியல் மாந்தவியல் மருந்தியல், இயலியல் இயங்கியல், மண்ணியல், விண்ணியல், மொழியியல், நாட்டியல், குமுகவியல், வரலாற்றியல், முதலிய பல்துறைகளிலும் சிறந் தோளிரும் பிறமொழி நூற்களைத் தமிழில் வடித்துத் தாருங்கள்; கலைச் சொற்களைத் தமிழாக்குங்கள். எதிர்காலத் தமிழும் தமிழரும், தமிழகமும் இன்றைய மாணவர்தம் அரும் பெரும் முயற்சிகளாலேயே சிறப்புறல் வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.

# போலித் தமிழ்த் தொண்டர்!

## துரை-மாணிக்கம்

அரும்பைந் தமிழ்க்கொரு தொண்டரென் றார்ப்பார்;
அழிபகைவர்
இரும்பைக் குழம்பெனக் காய்ச்சிமே லூற்றினும் ஏற்பமென்பார்;
துரும்பைப் புரட்டினும் தொண்டெனப் பேசியே
தோள்கலிப்பார்;
குரும்பையர்; வெற்றுக் குடுக்கையர்; சொல்லால் குழைபவரே!

முன்னிவை செய்தனம்; பின்னிவை செய்குவம்;
முத்தமிழ்த்தாய்
தன்னிறை வாகிட ஆவியு டல்பொருள் தந்தமென்பார்;
சொன்னிறை வல்லால் வினைநிறை வல்லார்; சோர்ந்தனரால்
எந்நிலை யார்வந் துரைக்கினும் ஏலார்; எழுகிலரே!

மாற்றுவர் சொன்னசொல்; உண்மையின் சான்றோர்
மனங்கசியத்
தூற்றுவர் வேற்றுப் புலத்திடை! ஒன்றைத் துணிந்துசெயின்
ஏற்றுவர் வெற்றிப் புகழ்க்கொடி; ஏமாற் றுறுந்தமிழர்
போற்றுவ ராயின் புதுநடை போடுவர்; பொக்கவரே!

தாமுந் துணிகிலார்; தம்மின் துணிந்தவர் தம்வினையை
ஆமென் றுடன்பட் டயலயல் போகி அவைதமக்கே
ஏமம் புரிபவர் யாமென் றுரைத்தே அகமகிழ்வார்;
வாமம் புரிதமிழ்த் தாயினுக் கன்னார் வளர்களையே!

ஏயும் பொருள்கணக் கிட்டெழு நூறு முறைநினைப்பார்;
ஆயும் பொருளும் முடிவுந் தெரிகிலார்; ஆய்ந்தவர்க்கோர்
ஈயும் நிலைவரின் காசும் ஈகிலார்; ஈந்தவற்றை
மாயும் பொழுதினும் தாம்நினை வூட்டி மகிழுவரே!

பற்றொன் றிலர்போல் பலபடப் பேசுவர்; பாழ்ம்பொருட்கே
எற்றென் றிராப்பகல் எண்ணிப் புலம்புவர்; ஏதிலர்பால்
கற்றொன் றறிந்தவர் போலுரை யாற்றிக் களிப்புறுவர்!
நெற்றொன் றிடைமறைந் துண்மை கரக்குமோ நெற்பதரே!

'கட்டுடை பாரோம்; களிபொருள் தேரோம்' எனவுரைப்பார்;
வட்டுடை யோர்முழம் சாலுமென் பார்;தனி வாய்த்திடிலோ
பட்டுடை யென்னினும் கட்டிக் களிப்பர்; படுந்துயர்க்கே
நெட்டுயிர்ப் போடுவர்; ஈகமென் றஃதை நிகழ்த்துவரே!

படைத்திடு சொல்வினை யாவினும் முந்திப் பணிதொடங்கின்
இடைத்துணி போல இடையிடை யேநெகிழ் வார்;உரையால்
மிடைத்தருள் சாற்றி அணைக்கினும் மேன்மேல் மிடிதருவார்;
கடைத்தவர் செய்கை; இனையரால் என்றுங் கழியிடும்பே!

வேலியர் யாம்,தமிழ்ப் பைம்பயிர்க் கென்றே விதந்துரைப்பார்;
கூலியென் னென்று கணக்கிடு வார்;ஒரு கொள்குறையின்
காலியர் சிற்சில வோர்தமைக் கூட்டிக் கலாம்விளைப்பார்;
போலியர்; செந்தமிழ்ப் பொய்மையர் அன்னவர் போக்கறிமே!

உணரின் செயலில்லை; செய்யின் உரையிலை ஓர்க;உளம்
புணரின் தொடர்பிலை; தோன்றின் முடிவில்லை; போலிவினை
இணரின் பூத்த இலைபோல் கலித்தே எழுந்தலைக்கும்
புணரி வியன்கரை போலதாம்; மெய்வினை பூ;நடுவே! ○

## நம் மொழிக் கொள்கை!

1) இந்தியா பல்வேறு இனமும் மொழிகளும் பண்பாடும் கொண்ட நாடாகையால், இதனை மொழியடிப்படையில் ஒன்றுபடுத்த நினைப்பது அறியாமையாகும்.

2) இந்திய ஒற்றுமைக்கு மொழியடிப்படை பயன்தராதாகையால் ஆட்சி மொழி என்ற ஒன்று தேவையே இல்லை.

3) மாநில மொழிகளே அவ்வம் மாநிலங்களின் ஆட்சி மொழிகளாகும்.

4) மாநிலங்கட்கான இணைப்பு மொழியாக ஆங்கிலத்தையே பயன்படுத்தல் வேண்டும்

5) இரு மொழிக் கொள்கையே (தாய் மொழியும் ஆங்கிலமும்) எல்லா மாநிலங்கட்கும் ஏற்றது.

6) மொழிப் பாடங்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் இருப்பதுடன் பிற பாடங்கள் அனைத்தும் தாய் மொழி வழியே கற்பிக்கப் பெறுதல் வேண்டும்.

7) இத்தகைய நிலைக்கு எல்லா இந்தியத்தேசிய மொழிகளும் உயர்த்தப் பெறல் வேண்டும்.

8) இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் சட்டத்தை அடியோடு நீக்குதல் வேண்டும்.

9) இக் கொள்கைகள் நிறைவேற்றப்படாமற் போகுமிடத்துத் தமிழகம் தனியே பிரிக்கப்பெறுதல் வேண்டும்.

# வேறென்ன சொல்வது?

இந்தி யெதிர்ப்புப் போராட்டத்தைப் பக்தவத்சலம் மிகவும் திறமையாகச் சமாளித்தார்.

—திரு. சாத்திரி.

தேவையானால் அவரைச் சீனர்களுக்கு முன் நின்று போரிடவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர் கிளர்ச்சிகள் வன்முறைச் செயல்கள் ஆகியவற்றோடு எங்களுக்கு ஒட்டும் இல்லை; உறவும் இல்லை. —திரு. அண்ணாதுரை

உள்ளம் ஒட்டாத பேச்சு! திரு. அண்ணாதுரைக்குப் பக்தவத்சலத்திடம் அவ்வளவு அச்சமா...?

பக்தவத்சலம் நீடூழி வாழ வேண்டும் என்று தமிழகமெங்கணும் கோவில்களில் வழிபாடு நடத்தப் பெற்றது. —செய்தி.

அவ் வழிபாடுகளில் வெடிகுண்டுக் கற்பூரம் ஏற்றி வேட்டெஃக வத்திகளைக் கொளுத்தியிருப்பார்களோ?

இந்தி மொழிக் கிளர்ச்சியை இனிப் பெரியவர்களிடம் விட்டுவிட்டு மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லல் வேண்டும்.

-திரு. அண்ணாதுரை.

போராட்டம் முழுவதையும் அவர்களே நடத்திவிட்டால் எங்கட்கு வேறு வேலை...?

இந்தி ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க, எரி நெய்யும் தீப்பெட்டியும், கத்தியையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று என் கழகத்தொண்டர்களுக்கு நான் கட்டளையிட்ட பின்தான் போராட்டம் அஞ்சி அடங்கிவிட்டது.

—பெரியார் ஈ. வெ. இரா.

செத்த பாம்பை அடிக்கின்ற பகுத்தறிவாளர்...!

இந்தியால் தமிழுக்குக் கேடு; வீடுகளில் கூட, தமிழ் பேச இடமிராது என்ற தப்பெண்ணம் தமிழர்களிடைப் பரவியதாலேயே தமிழர்கள் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். —திரு. சாத்திரி.

ஏன், நீங்களும் 'தமிழுக்கு இந்தியால் நன்மை; வீடுகளில் எல்லாம் தமிழ் பேச இடமிருக்கும்' என்ற நல்லெண்ணத்தை விடாமல் பறைசாற்றுவதுதானே!

பதவிக்காகப் பார்ப்பான் காலில் விழத் தமிழர்களில் ஒரு கூட்டம் அணியமாகிவிட்டதால் இத்தகைய (இந்திஎதிர்ப்புச்) செய்கைகள் வளர்ந்துகொண்டே போகின்றன...!
-விடுதலை.

இந்திப் பார்ப்பானைவிடத் தமிழ்ப் பார்ப்பான் எவ்வளவோ மேலான வன்...!

ஒருவரைக் 'குண்டர்' என்று அறிவித்து அவரை 20 ஆண்டு கட்கு நாட்டிலிருந்து வெளியேற்ற அதிகாரம் அளிக்கும் மேற்குவங்கப பழைய சட்டத்தின் படி (copy) ஒன்றினைத் தமிழக அரசு கேட்டுப் பெற்று ஆய்ந்து வருகின்றது.
–செய்தி.

எதற்காக இச் சட்டமெல்லாம், 'நாங்கள் சொல்வதே சட்டம்'என்று ஓரே சட்டம் இயற்றிக்கொள்வது தானே!

''பேராயக் கட்சியினரே வர வர அரசினரைக் குறைகூறத்தொடங்கி விட்டனரே! இது பெருந் தவறு''
-பேராயக் கட்சி அமைச்சர் களின் வருத்தம்.

குற்றங் குறை இருந்தாலும் அவர்கள் மூடியல்லவோ மறைத்தல் வேண்டும்..!

இந்திய அரசினர் வாங்கியுள்ள மொத்தக் கடன்கள் உரு 7483 கோடி!
அண்டை நாடுகளின் முன் னேற்றத்துக்காக இந்தியா அடுத்த ஆண்டு உருபா 16 கோடி பண உதவி வழங்கும்!
-ஒரே நாள் செய்திகள்.

செலவை விட வரவு மிகுதி! ஊதியம், 7467 கோடி உருபா. இந்தியப் பொருளியல் கொள்கை வாழ்க!

கக்கன் காட்டு யானைகளிட மிருந்து தப்பினர்! _செய்தி.

ஆனால், காட்டுமிராண்டிகளின் கையில் சிக்கினர்...!

கடந்த ஆண்டில் தமிழகத்தில் நடந்த வேட்டெஃகச் சூடுபற்றிய உசாவுதல்களின் முடிவுகளைச்சட்ட மன்றத்தின் முன் அறிவிக்க பக்த வத்சலம் மறுத்தார். _செய்தி.

ஒரு வேளை இறைவன் திருமன் றத்தில் கூறி (பாவ) மன்னிப்புக் கேட்க இருக்கின்றாரோ என் னவோ..?

அரசினர் பல நடவடிக்கைகள் எடுத்த பிறகும், திருட்டுத்தனமாக சர்க்கரை விற்பனை நடந்துகொண்டு தான் இருந்தது...! இஃது உண் மையே...!
_திரு. சி. சுப்பிரமணியம்.

என்னைப் பொறுத்தவரை மிகவும் உண்மையே!

"வியட்நாமில் அமெரிக்கர் நச்சுப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியது நாகரிகத்துக்கும் மாந்தப் பண்பாட்டுக்கும் பொருந்தி வராத கொடுஞ் செயல். இதனை நாங்கள் கண்டிக்கின்றோம்."

–இந்தியப் பாராளுமன்றத்தில் பேச்சு!

தன் மல நாற்றம் தனக்குத் தெரியாது!

கேரளத்தில், அரசினரால் சிறை பிடிக்கத் தேடப்பட்டு வந்த பொதுவுடைமைக்காரர் ஒருவர், அதிகாரிகள் கண்களில் மண்ணைத் தூவி, வெளிப்படையாகவே தில்லிக்கு வந்து, சட்டமன்றத்துள்ளும் நுழைந்து தம் ஊதியத்தையும் பெற்றுக் கொண்டு, வெளிப்படையாகவே திரும்பிச் சென்றார்!... –செய்தி.

வழி நெடுக ஓட்டைகள்..!

கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்களின் **எண்ணிக்கை மிகுதியாவதைத் தடுப்பதற்காக** கல்லூரி நுழைவுத் தேர்வில் தகுதி மதிப்பெண்கள் மிகுதியாக்கப்பெறும் –திரு. பக்தவத்சலம்.

சட்டமன்றத்தில் நுழைவதற்கு மட்டும் இத்தகைய நடவடிக்கை எடுக்கக்கூடாது...பக்தவத்சலத்திற்காக.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்க, அளவுக்குமீறிய வன்முறை பயன்படுத்தப்படவில்லை.

–பக்தவத்சலம்.

இறந்தவர் எண்ணிக்கையே இதையுணர்த்தவில்லையா?

அரிசியில் கலப்படம் செய்யச்சிறு கற்களை உருவாக்குவதற்காக ஆந்திராவில் ஆலைகளே வேலை செய்கின்றன! –செய்தி.

இந்த முறையைப் பக்தவத்சலம் இங்கும் பயன்படுத்தலாமே..!

இந்தி எதிர்ப்பு மாணவர் கிளர்ச்சியை எதிர்க் கட்சிக்காரர்களே தூண்டிவிட்டனர்!

–பே. கா. சட்டமன்ற உறுப்பினர்கள்.

நாங்கள் காவலர்களைத் தூண்டிவிட்டது அதனால்தான்.

இந்தியை எதிர்த்துத் தீக்குளித்ததாகக் கூறப்படுபவர்களுள் பலர் நோய் தாங்க முடியாமலும், குடும்பப் பூசல் காரணமாகவுமே இறந்தனர் என்று தெரியவருகின்றது....!

பக்தவத்சலம் ஆராய்ச்சி.

பாறை (!) நெஞ்சு!

மயிர் வினைஞர்கள் நூல் வெளியீட்டுக் கூட்டத்தில் பர். மு. வ., பர். சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். –செய்தி.

இலவசமாக முடிவெட்டிக் கொண்டு வந்திருப்பார்களோ...!

தமிழக அமைச்சரவைமேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம்.....! நடுவண் அமைச்சரவையின்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம்...!

–செய்திகள்.

பனங்காட்டு நரிகள் சலசலப்புக்கு அஞ்சுவதில்லை..!

இந்தியாவில் **குடியாட்சி முறை வேரூன்றிவிட்டது!** அதைப் பாது காக்க வேண்டியது நம் கடமை...!

–திரு. சாத்திரி.

பித்தலாட்டக்காரனின் கனவு..!

ஓசையேயில்லாமல் ஓடும் புது வகை இயங்கிகள் மேற்கு செருமனியில் உருவாகி வருகின்றன.

–செய்தி.

உழைப்பாளிகளின் கனவு..!

துன்பக்கடலைக் கடக்கக் கம்பன் எனும் தோணி நமக்குப் பயன்படுகின்றது. –கம்பர் மாநாட்டில் திரு. மகராசன் பேச்சு.

சோம்பேறியின் கனவு..!

மதுரையில் சங்கராச்சாரியார் முன்னிலையில் "சதசண்டி யக்ஞம்"! இந்தியா முழுவதற்கும் அதனால் நலம் பிறக்கும் என்று சங்கராச்சாரி கூறினார்..! –செய்தி.

ஏமாற்றுக்காரனின் கனவு..!

கண் மருத்துவத்துக்காக **குடியரசுத் தலைவருக்கு** சென்னைக் கோவில் புனிதப் படையல்கள் (பிரசாதங்கள்) கொடுக்கப்பட்டன. கொண்டு சென்றவர் **நடுவண் துணை அமைச்சர்** அசர் நாவிசு!

–செய்தி.

கோவில் கருவறையில் இருக்க வேண்டியவர்கள்..!

சென்னைப் பல்கலைக் கழகக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது. அரசினரின் நிலைப்பாடற்ற கொள்கையே காரணம்...!

-பர். இலக்குமணசாமி.

யாரை நொந்து கொள்கின்றார்..!

முன்னிதழ்த் தொடர்ச்சி.

# பேரா. தெ. பொ. மீ. தமிழுக்கதிகாரியா ?

## மொழிப் பெரும் புலவர்
## ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

13. ''கீழைத் தீவுகளிலிருந்து பல நறுமணப் பொருள்கள் நம் நாட்டில் வந்து, நம் மக்கள் மனத்தையும் மூக்கையும் கவர்ந்தன. தக்கோலி, அருமணவன் முதலியவை அந்த நறுமணப் பொருள்கல் ஒருசில இவை, தாம் விளையும் இடத்தின் பெயரையே தம் பெயராகக் கொண்டவை என்று அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டுகிறார். இவற்றை எப்படி ஒழித்துத் தள்ளுவது?''

கீழைத் தீவுகளிலிருந்து நறுமணப் பொருள்கள் நம் நாட்டிற்கு வலிய வரவில்லை, நம் நாட்டு வணிகரே அங்குச் சென்று அப்பொருள்களைக் கொணர்ந்தனர்.

''முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை'' என்று, கி. மு. 7–ஆம் நூற்றாண்டினதான தொல்காப்பியம் பண்டைத் தமிழ்க் கடல்வாணிகரைக் குறிக்கின்றது. குமரிக்கண்டத்து வடிம்பலம்ப நின்ற பாண்டியன், சாலித் (சாவகம்) தீவிற்குச் சென்று அதைக் கைப்பற்றியதிலிருந்து, அல்லது அதற்கு முன்பிருந்தே கீழைநாட்டு வாணிகத் தொடர்பு நம் நாட்டிற்கு இருந்து வந்திருக்கின்றது. அகிலின் வகைகளை, ''அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட பல்வகைத்தாகிய தொகுதியும்'' என்றே அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். இதற்கு, ''இங்குக் கூறப்படும் பெயர்கள் இக்காலத்து வழங்காமையாற் புலப்படவில்லை.'' என்று பர். உ. வே. சா. அடிக்குறிப்பு வரைந்திருக்கின்றார்.

அருமணம் அல்லது அருமணவன் என்பது ஒரு தீவுப்பெயராகத் தெரிகின்றது. அஃது அரிய மணப்பொருள்கள் விளைவது என்று பொருள்படும் தமிழ்ப் பெயராகவும் இருக்கலாம்.
முதுபண்டைக் காலத்தில் கிழக்கத்துத் தீவுகளையும் நாடுகளையும் தமிழரசர் கைப்பற்றியிருந்ததால், அவற்றுட் சில இன்னும் தமிழ்ப் பெயர்களையே தாங்கி நிற்றலைக் காண்க.

எ. டு. மதுரை-மதுரா, மலையம்-மலாயா, பொருநை போர்நியோ.

சாலி என்பது யவ என்று வடமொழியில் மொழி பெயர்க்கப் பட்டுப் பின்பு சாவா என்று வழங்கி வருகின்றது.

சுமதுரை (சுமதுரா-சுமாத்ரா) என்பது, சு என்னும் வட மொழி முன்னொட்டுப் பெற்றது.

அகில் என்பது பழஞ் சேர நாடாகிய மலையாள நாட்டிலும் விளைகின்றது. அது வெள்ளகில். அதன் பிற வகைகளே கீழ் நாட்டினின்று வந்தவை. அருமணம் என்னும் தீவினின்று வந்த யானை அருமணவன் எனப்பட்டதால், தமிழ் நாட்டில் யானை யில்லை என்பது பெறப்படாது. இது பிறவற்றிற்கும் ஒக்கும்.

அகில் என்னும் சொல் முள்ளுள்ளது என்னும் பொருளது. அக்கு = முள், அகில். அக்கு + இல் = அக்கில் — அகில்.

“ கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் ” என்றார் விளம்பி நாகனார். கள் = முள். கள்ளி = முள்ளுள்ளது.

அகில் தமிழ் நாட்டினின்று மேனாடுகட்கு ஏற்றுமதியானதி னால், மேனாடுகளிலும் அதன் தமிழ்ப் பெயரே திரிந்து வழங்கி வருகின்றது.

அகலிம் (aha im) என்பது எபிரேயம். அகலோக்கோன் (agallochon) என்பது கிரேக்கம்; அகலோக்கா (agallocha) என்பது இலத்தீனம்.

அகில் என்பதே மலையாளமும். அகலோ (agallo) என்பது மலாயம். அகரு (agaru) என்பது சமற்கிருதம். எல்லாவற்றிலும் பிற்பட்டது சமற்கிருதம். ஆயினும் அச் சமற்கிருதச் சொல்லி னின்று தமிழ்ச் சொல் வந்ததாக, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சொற்களஞ்சியம் காட்டியிருப்பது, ஆரிய ஏமாற்றுத் தன்மையையும் தமிழர் ஏமாறுந் தன்மையையும், எத்துணை விளக்கமாகக் காட்டுகின்ற தென்பதை எண்ணிக் காண்க.

தக்கோலம் என்பது, வால்மிளகு, திப்பிலி, பாகடை (தாம்பூலம்), சிறுநாவல், பெருநாவல் என்னும் ஐம்பொருள் களையே உணர்த்தும். ஆகையால், தக்கோலி என்பது உவமை அல்லது தன்மை பற்றியதாகவுமிருக்கலாம். காரகில் என்பது வெள்ளகில் என்பதற்கு எதிராகையால் தன்மை பற்றியதே. கிடாரவன் என்பது கிடாரத்தினின்று வந்ததாக இருக்கலாம்.

இக்காலத்தில் அருமணவன், தக்கோலி, என்னும் பொருளு மில்லை; சொல் வழக்குமில்லை. இவை தாமாக ஒழிந்துபோயின.

ஆயினும், "இவற்றை எப்படி ஒழித்துத் தள்ளுவது?" என்று நம் தலைமைத்தமிழ்ப்பேராசிரியர் கவன்று பெரிதும் இடர்ப்படுகின்றார் ஒருகால். அப்பொருள்கள் அவர் இல்லத்தில் இடத்தையடைத்துக் கொண்டுள்ளனபோலும்!

14. "நாம் நம்முடைய பண்பாட்டை அங்கெல்லாம் பரப்பினோம் என்பதற்கு நிலையான சின்னங்களாக, அங்கிருந்து வந்த சொற்கள் இன்றும் விளங்குகின்றன."

நாம் நம் பண்பாட்டை அங்குப் பரப்பியிருந்தால், நம் சொற்கள் அங்குச் சென்றிருக்குமேயொழிய, அங்கிருந்து சொற்கள் இங்கு வந்திரா. வந்திருப்பின், நம் பண்பாடின்மையைக் காட்டுமேயன்றிப் பண்பாட்டைக் காட்டா.

15. "நாம் மிகமிக விரும்பிச் சுவைக்கும் முருங்கைக் காய்ச் சாம்பாரில் விளங்கும் 'முருங்கை" சிங்களவர்கள் நமக்குக் கொடுத்த அன்பின் காணிக்கை."

முருங்கை தொன்றுதொட்டுத் தமிழரால் உண்ணப்பட்டு அல்லது தின்னப்பட்டு வரும் தமிழ்நாட்டுக்காயே; ஆதலால், முருங்கைமரம் தமிழ்நாட்டுமரமே.

முருங்குதல் (தன்வினை) = 1. முறிதல்.
"கூம்பு முதன் முருங்க" (மதுரைக்காஞ்சி, 377)

2. அழிதல்.

"அமருளேற்றார் முரண்முருங்க"
(புறப்பொருள்வெண்பாமாலை, 1, 7)

முருக்குதல் (பிறவினை) = 1. முறித்தல்.
"காப்புடைய வெழுமுருக்கி" (புறம். 14.)

2, அழித்தல்.

"விறல்வேல் மன்னர் மன்னெயில் முருக்கி"
(சிறுபாணாற்றுப்படை, 247).

3. கொல்லுதல், (திவாகரம்).

முருங்கு என்னும் சொல் முரி என்னும் சொல்லொடு தொடர்புள்ளது. முரிதல் = ஒடிதல், கெடுதல்.

முருங்கைமரம் அல்லது கிளை எளிதாய் ஒடியும் மரம். முருங்குவது முருங்கை.

முருங்கைக் காய்போற் காய்ப்பதும் முள்ளுள்ளதுமான முள்முருங்கை மரம், முருக்கு எனப்பட்டது. இது வலித்துத் திரிந்த திரிச்சொல்.

"முருக்குத் தாழ்பெழுலிய நெருப்புறழடைகரை"
(பதிற்றுப்பத்து, 23, 26)

முருக்கமலர் செந்நிறமாயிருப்பதால் எரிமலர் எனப்படும்.

"எரிமலர்ப் பவளச் செவ்வாய்" (சிந்தாமணி 662)

முருக்கு என்பது முருங்கு என்றும் நிற்கும். புத்தமித்திரன் என்னும் பித்தமித்திரன் பிதற்றிய வீர சோழியத்திற்கு உரை கண்ட பெருந்தேவனார், "முருங்கா வென்னுஞ் சிங்களச் சொல் முருங்கையென வந்தவாறுங் கொள்க" என்று 11-ஆம் நூற்றுண்டிற் கூறிய வுரையை, வரலாறு, மொழி நூல் முதலிய நூலறிவும் ஆராய்ச்சியும் மிக்க இக்காலத்திற்கொண்டு கூறுவது எத்துணைப் பேதைமையும் அடிமைத்தனமும் ஆகும்!

கங்கைக்கரை நாட்டைச்சேர்ந்த விசயன் என்னும் இளவரசன், கி மு. 543-இல் ஒரு படையொடு வந்து இலங்கையில் இறங்கிச் சிங்கள இனத்தைத் தோற்றுவித்தான் என்பது பழைய வரலாறு. அதனுல், இலங்கையும் அதன் மொழியும் சிங்களம் எனப்பட்டன.

பெருந்தேவனுர் "முருங்காவென்னும் சிங்களச் சொல்" என்று இடத்தின்மேல் மட்டும் ஏற்றிக் கூறியிருப்பவும், நம் பேராசிரியர் "சிங்களவர்கள் நமக்குக் கொடுத்த அன்பின் காணிக்கை" என்று அவ்வினத்தார் மீதே ஏற்றிக்கூறிவிட்டனர். விசயன் கங்கைக்கரை நாட்டினின்று வந்தபொழுதே முருங்கை மரத்தையும் உடன் கொண்டுவந்தான் என்பது அவர் கருத்துப்போலும்!

"முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்"
"முருங்கை பருத்து முட்டுக்கால் ஆகுமா?"
"முருக்கம்பூ சிவந்ததினுல் முடிப்பார் உண்டா?"

என்பவை தொன்று தொட்டு வழங்கி வரும் பழமொழிகள். முருங்கைப் பட்டை, முருங்கைப்பிசின் ஆகியவை பிள்ளை மருத்துவத்திற் பெயர் பெற்ற மருந்துகள். முருங்கைக் காயும் முருங்கைக் கீரையும் தமிழர் தொன்று தொட்டு உண்டு வரும் உணவு வகைகள்.

முருங்கை என்னும் சொல், மலையாளத்தில் முரிஞ்ஞு என்றும், தெலுங்கில் முனக என்றும், சமற்கிருதத்தில் முருங்கீ

என்றும், திரிந்து வழங்குகின்றது. ஐகார வீற்றுத் தமிழ்ச் சொற்கள் பொதுவாய் ஆரிய மொழிகளில் ஆகார வீறாய் நிற்கும். அம்முறைப்படி, ஆரியச்சார்பான சிங்களத்திலும், முருங்கை என்பது முருங்கா எனத்திரிந்தது. சமற்கிருதச் சொல் 'வேத' ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்தபின் கடன்கொண்டதால், முருங்கீ என்னும் வடிவு கொண்டது. உண்மை இங்ஙனம் இருக்கவும், முருங்கீ என்னும் சமற்கிருதச் சொல்லே சிங்கள மொழியில் முருங்கா எனத் திரிந்ததென்றும், பின்பு அது தமிழில் முருங்கை எனப் புகுந்ததென்றும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியில், பிராமணரான மு. இராகவையங்காரும் கோடரிக் காம்பான வையாபுரியும் கூடித் தலைகீழாய்க் குறித்திருப்பதை, ஆயிரக் கணக்காய்ச் சம்பளம் வாங்கிக் கொண்டு தமிழைப் பேணாத பேடித் தமிழ்ப் பேராசிரியர் கவனிப்பாரா?

முருங்கை, முருக்கு என்னும் இரு பெயரும் தொன்று தொட்டு இரு வகை வழக்கிலும் வழங்கி வரும் தமிழ்ச் சொற்களாகும். முருக்கைப் புனமுருக்கு, புனமுருங்கை என்பதுமுண்டு.

முதலிரு கழக நூல்களனைத்தும் கடைக் கழக நூல்களிற் பலவற்றொடு இறந்துபட்டமையால், இன்று சில பழந் தமிழ்ச் சொற்கட்கு இலக்கியச் சான்று காட்ட இடமில்லை. தொல்காப்பியம் இலக்கண நூலேயன்றி அகர முதலியன்று. இதைப் பலர் உணர்வதில்லை.

16 ''சீனர்களோடும் நமக்குத் தொடர்பு உண்டு படகு வகையைச் சேர்ந்த சம்பான் என்ற சொல்லும். பெரிய மண் கலத்தைக் குறிக்கும் ''காங்கு'' என்ற சொல்லும், ''பீங்கான்'' என்ற சொல்லும், நாம் விரும்பும் சீனப் பட்டைப்போலச் சீன நாட்டிலிருந்து வந்தவையே ஆம்.''

குமரிக் கண்டத் தமிழர் நீர்வழியும் நிலவழியும் உலக முழுதும் சுற்றினவர் அல்லாக்கால், வடவையைக் கண்டிருக்க முடியாது; ஞாலத்திற்கும் உலகம் என்று பெயரிட்டிருக்க முடியாது.

உலகில் முதன் முதல் நீர்வழிச் செல்லக் கலம் புனைந்தவரும், கடலைக் கடந்தவரும், தமிழரே. நாவாய் என்ற தமிழ்ச் சொல்லே navis என்றும், படகு என்ற தமிழ்ச் சொல்லே barca, அல்லது barqa என்றும் இலத்தீனில் திரிந்துள்ளன. Navy, bark, harqe என்ற ஆங்கிலச் சொற்கள் இலத்தீனினின்றும் திரிந்தவை. கோதியத்தில் skip என்றும், மூதாங்கிலத்தில் scip என்றும், மூதுயர் செருமானியத்தில் scif என்றும், ஆங்கிலத்தில் ship என்றும், வழங்குவதும் கப்பல் என்னும் தென் சொல்லின் சிதைவே.

கப்பலும் நாவாயுமல்லாத சிறுகலங்கள், பரிசல், ஓடம், அம்பி, பஃறி, திமில், தோணி, படகு முதலியனவாகப் பல வகைய.

சம்பான் என்பது (E. Sampan) ஒரு வகைச் சிறிய சீனப் படகு. அது பஃறி, திமில், தோணி, படகு என்பவற்றுள் ஒன்றிற்குச் சமமாகும். அது முப்பலகையாற் செய்யப்பட்டதினால் அப் பெயர் பெற்றது. Chinese San-pan. san = மூன்று, pan = பலகை. ஆதலால், சம்பான் என்ற சொல்லே தமிழுக்குத் தேவையில்லை. மொழியுணர்ச்சியுள்ளவர் மண்ணெண்ணெய், மிதி வண்டி என்று தூய தமிழ்ச் சொற்கள் வழங்கவும் மொழியுணர்ச்சியில்லார் கெரோசின் ஆயில், சைக்கிள் என்று ஆங்கிலச் சொற்களையே வழங்குவது போன்றதே, சம்பான் என்னும் சீனச் சொல்லை வேண்டாது வழங்குவதும் என்க. அதைப் படகு என்றே சொல்லலாம். சீனச்சொல்லை வழங்குவது தமிழுக்குக் கேடேயன்றி ஆக்கமன்று.

காங்கு என்னும் சீனச்சொற்கு நேரானது வளந்து என்பது யாழ்ப்பாண அகர முதலியையும் சென்னைப் ப. க க. அகர முதலியையும் பார்க்க.

பானை யொத்த கலங்களுள்; மிகச் சிறியது சுண்டான்; அதிற் பெரியது முட்டி; அதிற் பெரியது பானை; அதிற் பெரியது மிடா; அதிற் பெரியது வளந்து. அதுவே கலங்கிற்குச் சமமானது.

மிகப் பெரிய தவலையை மிடாத்தவலை என்பர்.

பீங்கான் என்பது சீன நாட்டினின்று வந்த ஒரு வகைச் சுடுமட்கலமாகும். பீங்கான் என்னும் சொல் பிங்கான் (pingan) என்னும் பாரசீகச் சொல்லின் திரிபாக, சென்னைப் ப. க. க. அகர முதலியிற் குறிக்கப்பட்டுளது.

தமிழ் நாட்டுச் சுடுமட் கலங்களுள், சிவந்தவற்றைச் செஞ்சுள்ளையென்றும், கரியவற்றைக் கருஞ்சுள்ளையென்றும், சொல்வது மரபு. பீங்கான் கலங்கள் பெரும்பாலும் வெண்ணிறமாயிருப்பதால், அவற்றை வெண்சுள்ளை என்னலாம்; அக் கலங்களைச் சுள்ளாங்கலம் என்னலாம் சுடப்பட்ட கலம் என்பது அதன் பொருள். வெண்கலம் என்பது செய்பொருளாகு பெயராய் முறி என்னும் கருவியைக் குறிப்பது போன்றே, சுள்ளாங் கலம் என்பதும் செய்பொருளாகு பெயராய்ப் பீங்கான் கருவியைக் குறிப்பது பொருத்தமானதே.

இனி, இற்றை நூல்களிற் பீங்கானைக் குறிக்கும் சொல்லின்மையால், பண்டை நூல்களிலும் இருந்திராது என்ற முடிவிற்கு வரமுடியாது.




## திருவள்ளுவன்.

ஆசிரியர்: **சோ. சதாசிவம்.**

இன்ப வாழ்வுப் பதிப்பகம். இரத்தின சபாபதிபுரம்.
கோயம்புத்தூர்-2. விலை. உருபா. 6.

திருவள்ளுவரைப் பற்றி ஒரு நூல் எழுதுவதாயின் அது தான் நுதலப்புகும் பொருளின் பெருமிதத்துக்கும் உயர்வுக்கும் ஈடுசிறக்கத் தக்க பெருமிதமும் உயர்வும் கொண்ட பயன்மிக்க ஆராய்ச்சி நூலாக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அந் நோக்கத்துடன் இந் நூலை அணுகும்பொழுது ஏமாற்றமே அடைகின்றோம். ஆசிரியர் தந்திருப்பது அவர்தம் ஆர்வத்தை மட்டுமே நிறைவு செய்ய எழுந்தாற் போன்றதொரு வெற்றுப் புகழ்மாலை. எந்தவோர் ஆராய்வுக்கும் முகனிலையாகக் கூட இதனைக் கொள்ளல் சாலாது. "திருவள்ளுவனை இப் பரந்த உலகில் இதுவரை வேறு எந்த அறிஞனும் வேறு எந்த ஆசிரியனையும் பெருமைப் படுத்தாத அளவிற்குப் பெருமைப் படுத்தி" யுள்ளதாக ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இஃதொன்றே இந்நூல் ஒரு மிகையுணர்வு நூல் என்பதற்குப் போதிய சான்றாகும். 273 பக்கங்களையுடைய இந் நூலில் ஏறத்தாழ முக்காற்பகுதி எதற்கும், எவருக்கும் பயன்படாத வெறும் புகழ் உரைகளே. திருவள்ளுவரைப் போல் பேரறிஞர் உலகில் தோன்றியதே இல்லை என்றும், திருக்குறளுக் கிணையான நூல் வேறெதுவும் இல்லை என்றும் மீண்டும் மீண்டும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மணிலா (Manilla) என்னும் பிலிப்பைன் தீவுக் கணத் தலை நகரினின்று இறக்குமதியான கடலை வகையை, நிலக்கடலை வேர்க்கடலை, கடலைக்காய் என்று தனித் தமிழ்ப் பெயரால் வழங்குவதே தமிழ் நாட்டுப் பெருவழக்கு. ஆங்கிலேயரும் நிலக்கடலை என்னும் சொல்லையே Groundnut என்று மொழி பெயர்த்துள்ளனர். ஆயினும், மணிலாக் கொட்டை என்ற பெயரையே சென்னைப் ப. க. க. அகர முதலி அளவையாகக் கொண்டுள்ளது. இதனால், தூய தமிழ்ச் சொற்களை இயன்ற வரை மறைத்து, அயற் சொற்களை வழங்குவதையே குறிக் கோளாகக் கொண்டுள்ள ஒரு வகுப்பாருண்மையை அறியலாம் மணிலாக் கொட்டை என்பது இன்று மல்லாக் கொட்டை என்று மருவி வழங்குகின்றது.

(தொடரும்)

கூறப் பெற்றுள்ளது. ஒரு முறை கூறினூற் போதுமே! ஆசிரியர் கூற வந்துள்ள கருத்துகளை ஏறத்தாழ 75 பக்கங்கட்குள் அடக்கியிருக்க லாம். சுமை குறைந்திருக்கும்.

மனு, கௌடிலியன், பிளேட்டோ, ஆகியோருடன் திருவள்ளுவர் அடிப்படையிலேயே வேறுபட்டு உயர்ந்து நிற்பதை ஆசிரியர் ஓரளவு பொருத்தமாக விளக்கியுள்ளார். ஆயினும் கருத்துகள் நேருக்கு நேர் மோதவில்லை ஆசிரியர் தம் உள்ளத்துள்புகுந்து உருமாறி வருகின்றன. இஃது ஆராய்வின் முழு வலிமையையும் காட்ட உகந்ததாயில்லை. மற்றும், மேற்கூறிய அறிஞர்தம் கருத்துகளை ஆசிரியர் எடுத்தாள்கை யில் அவற்றுக்குரிய மதிப்பீடதினையும் கொடுக்கத் தவறிவிடுகின்ருர். எடுத்துக்காட்டாக, "பகவத்கீதையில் மாந்த இனம் இன்பமாக வாழத் தேவையான அறிவுரைகள் எதுவுமே இல்லை" என ஒரேயடியாகக் கூறியிருப்பது நடுவுநிலையின்மையினையே காட்டுகின்றது. புத்தனின் கொள்கைகளை ஆசிரியர் அணுகியுள்ள முறையும் பொருந்துமாறில்லை. "புத்தன் கருத்தின்படி அனைவரும் பற்றற்ற நிலையடைந்தால் மாந்த இனமே பூண்டற்றுப் போம்" என்றும், "புத்தன் கருத்து அறிவிற்கு ஒவ்வாதது மட்டுமன்று, இயற்கைக்கு மாறுபட்டதும், மாந்தப் பண்பாட் டுக்கே புறம்பானதுமாகும்"என்றும் உரைத்திருப்பதைப் பொது அறிவுக் குத் தானும் ஏற்புடைத்தாகக் கொள்ள வியலவில்லை. நிலையாமைக் கொள்கையில் வள்ளுவருக்கும் புத்தருக்கும் முரண்பாடு காண்பது இருவரையுமே ஆசிரியர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது.

திருவள்ளுவர் ஒரு மெய்யுணர்வாளர் என ஆசிரியர் கூறுகின்ருர். இது புதிய கருத்தன்று. ஆனல் மெய்யுணர்வு என்ற சொல்லுக்கு ஆசிரியர் கொள்ளும் பொருள்தான் வேடிக்கையாக விருக்கின்றது. மெய்யுணர்வும், பொருள் முதல் கொள்கையும் (Materialism) நேருக்கு நேர் மாறுனவை. ஆசிரியரோ, பொருள் முதற் கொள்கையே மெய்யுணர்வுஎனப் பிறழவுணர்ந்து, அப்பிழையின் அடிப்படையிலேயே வள்ளுவரை மெய்யுணர்வாளர் என அழைக்கின்ருர். இஃது இரட்டைப் பிழை. வாழ்வாங்கு வாழ்தல் என்பது இவ்வுலகில் நனிதோய்ந்து இன் பம் காண்பதுதான் என்பது வள்ளுவர் கருத்து என்ருல், அதுவே வள்ளு வரின் மெய்யுணர்வுக் கொள்கை என்ருல், 'நிலையாமை', 'துறவு', மெய்யுணர்தல்' 'அவா அறுத்தல்' எனும் திருக்குறள் அதிகாரங்கட்கு, இவ்வாசிரியர் என்ன பொருள் காண்கின்ருரோ அறியோம். புடவியின் படைப்பியல்பு பற்றியும், புடவியயக்கத்துக்குக் காரணமாக நிற்கும் பேராற்றல் பற்றியும் நம் சிற்றறிவினுக் கெட்டாத பல உண்மைகள் மறைந்து கிடப்பவும், அவற்றின் 'மெய்'யை "உணர்தல் வேண்டும் எனும் வேட்கையால் தூண்டப்பெருமல் அவைபற்றிக் கூற வருவாரை யும் மறுத்துநின்று, ஐம்புலன் நுகர்ச்சிக்குட்பட்ட இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி மட்டுமே எண்ணிக்கிடப்பதும் வாழ்வதும் எப்படி மெய்யுணர்வாகும்? இதுபோன்று ஆசிரியர் கருத்தில் பல முரண்பாடு கள் உள. கூறியது கூறல், மிகைப்படக் கூறல், தெளியாமை, அறிவுடன் இயைந்து நடவாத உணர்வு இவையும் நூல் எடுபடாமைக்குக் கார ணங்கள். ஆயினும் ஆசிரியரின் தமிழ் உணர்வும் வள்ளுவர்பால் அவர்க் கிருக்கும் அன்பும், ஈடுபாடும் பாராட்டுக்குரியன. நூல் முழுவதும் வெளிப்பட்டு நிற்பன அவையே!

**—கல்லாடன்.**

# கழகத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம்

புலவர். தி. நா. அறிவுஒளி.

ஆங்கில இலக்கியத்தின் அகவை ஆயிரம் ஆண்டுகட்குள் அடங்கியதே. கி பி 670-ஆம் ஆண்டு தொட்டுத்தான் ஆங்கில இலக்கிய வரலாறு தொடங்குகிறது. அஃதாவது தமிழிலக்கிய வரலாற்றில் தேவார காலத்திற்குச் சற்று பின்னேயிருந்துதான் ஆங்கில இலக்கியத் தோற்றம் முதன் முதலாக மலரத் தொடங்குகிறது. ஆயின் இச் சிறு பழமையையே மிகப் பெரிதாக ஆங்கிலப் புலவரும் மக்களும் மதித்துப் பெருமையடைகின்றனர். தம் மொழியின் பழமையையும், வளமார்ந்த இலக்கிய மரபின் கால் வழியினர் என்ற பெருமையையும் செம்மாந்து போற்றியுரைத்துப் பெருமிதமுறுகின்றனர்.[1]

தமிழிலக்கியத்தின் பழமைக்கோ பெருமைக்கோ எல்லையே காட்டவியலாதே! தமிழிலக்கணத்துக்கே எல்லையிட முடியாதெனின் இலக்கியத்துக்கு எங்கே அளவிடுவது? நம் கற்பனையே திகைத்து மயங்கும் அளவுக்குத் தொன்மையும் வன்மையும் ஆற்றலுமுடைய தமிழிலக்கிய நெடுமரபு குறித்துத் தமிழர் எத்துணைச் செம்மாந்து பெருமையடைதல் வேண்டும்! உலக மொழிகளின் இலக்கிய மரபுகளுக்கெல்லாம் நனிபழைய முன்னை மரபும தாய்மை மரபும் தமிழ் மரபேயாம். வளமார் இலக்கிய வேர்மரபு தமிழுக்குரியது வடமொழியில் இலக்கியம் தோன்றுவதற்கு முன்னரே தமிழில் பண்பட்ட இலக்கிய-இலக்கண வளமும், முனைத்த முத்தமிழமைதியும் வளர்ந்து கிளைத்துத் தாய்மைப் பண்போடு திகழ்ந்திருந்தது. கழக இலக்கியங்கள் போலவோ, அதன் இலக்கியத் தனித்தன்மை போலவோ, மொழி மரபுபோலவோ, உணர்வு வளம்போலவோ. தமிழுக்கே உரிய உள்ளுறைப் பொருள், இறைச்சிப் பொருள் போலவோ,

---

1) "Every English man and woman has good reason to be proud of the work done by their forefathers in prose and poetry. Every one who can write a good book or a good song may say to himself, 'I belong to a noble company, which has been teaching and delighting the world for more than 1000 years and that is a fact in which, those who write and those who read English literature ought to feel a noble pride.

( Stop ford. A. Brooke M. A.
English Literature A.D. 670 to 1832 )

முதல்-கரு-உரிப்பொருளமைதி போலவோ உயர்தனிச் செம்மை சால் மரபு வேறு எங்கும் காணமுடியவில்லை. தமிழிலக்கியப் பரப்பிலேயேகூட, கழக இலக்கியத்தை நிகர்க்கும் படைப் பாக்கம் பிற்காலத் தமிழிலக்கியங்களுள் இல்லை என்பதையும் குறிப்பிடவே வேண்டும்.

[2] 'எவனும் ஆழ்ந்த மெய்யுணர்வாளனாக ஆகாமல் சீரிய பாவாணனாக ஆகவியலாது' எனக் கோலரிட்சு என்ற புலவர் கூறிய கூற்று அறியத்தக்கது. கழக இலக்கியப் பாக்கள் நுண்ணிய மெய்யுணர்வு வளம் பழுநியமைந்த திறம் இன்னுங்கூடத் தெள்ளிதின் ஆராய்ந்து தெளியப்படவில்லை தமிழரின வரலாற்று முதனூலாகவும், தமிழர் பண்பாட்டு வரலாற்றின் வேர்க் கருவூலமாகவும் திகழ்வன கழக இலக்கியப் புதையல்களே! [3] தமிழே மிகமிக உயரிய பண்பட்ட மொழியாம்; அஃதுஈடிணையற்ற-தமிழ் நாட்டுக்கே உரிய-செழுமை சான்ற இயற்கைத் தனித் தமிழிலக்கியங்களைத் தனக்குரித்தாகக் கொண்டுள்ளது' என்ற அறிஞர் மாக்சுமுல்லரின் உரை மெய்யுரையேயாம்! இவர் கூட ஓரளவுதான் தெளிவு கொண்டு இக் கூற்றுரைத்தார். மாக்சுமுல்லரையும் வடமொழித் திரையே பெரிதும் மறைத்தது. அதைக் கடந்து கழகத் தமிழ் இலக்கிய வளத்தை இக்கால அறிஞர்களே ஓரளவு ஆய்கின்றனர் எனலாம். ஆயினும், பிற்கால இலக்கியங்களுக்காக நிகழ்த்தப்பெறும் விழா ஆர்ப்பாட்டங்களும், விளம்பர முழக்கங்களும், விரிவுரை-பேருரை பரப்புகளும் கழகப் பேரிலக்கியங்களுக்கு இன்னும் வாய்க்கவில்லை. இக்காலத் தமிழிலக்கியங்களைக் கொண்டு தமிழினம் இனி முன்னேறுவது கூடுமோ, கூடாதோ நாமறியோம். ஆயின், கழகத் தமிழிலக்கியமொன்றே தமிழினத்தையும், தமிழ் நாட்டையும் தமிழ்ப் பண்பாட்டையும் உரிமை வாழ்விலும் உயர்ந்த வள வாழ்வில் ஆட்படுத்தும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

காதல் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் உலக இலக்கியத்தில் சேக்சுபியரின் படைப்புகளும், [1] நிசாமியின் படைப்பான

---

2) "Tamil is the most highly Cultivated language and posses the richest stores of indigenous literature"
— Maxmuller.

3) "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher"
— Coleridge

1) நிசாமி என்ற பாரசீகப் பாவலனின் முழுப்பெயர் நிசாம்-உதீன் அபுமுகம்மது இளியசு பின் யூசுப்' (Nizam-Uddin

இலா—மச்னுவின் பெயரும் பலருக்குத் தோன்றுகிறது. உண்மையில் உண்மைக் காதலுணர்வை உணர்த்துவதில் கழக இலக்கிய ஐந்திணைப் படைப்புகளுக்கிணையாக வேறு எதுவும் நிற்பதரிது என்பதை உலகின் முன்னுணர்த்த விழைகிறேன். உடல் தழுவி, வாழ்வின் நிகழ்ச்சிச் சூழல் தழுவிப் படைக்கப் பட்ட கற்பனைக் காதற் கதைகள்-பாக்கள் எட்ட முடியாத உணர்வுச்சியை, உணர்வாழத்தை—அறிவகல நீளத்தை—ஆற்ற லார்வத்தை-வாழ்வியலுண்மையை-கழகக் காதல் இலக்கியம் எட்டிப் பொலிகிறது. இங்கு வெறும் கனவுப் பிதற்றல்களோ, கற்பனை மாயமோ கிடையாது துயர முடிவால் கற்போரை நம்பிக்கை யிழக்கச் செய்வதோ, வெறுப்புணர்வுக்கு ஆட்படுத் துவதோ கிடையாது காமவெறி மிகுவிக்கும் வெறியூட்டுவிழா வாகவும் கழகக் காதலிலச்கியமில்லை. நெறிபுரக்கும் அருட் காதலியக்கமாகக் கழக இலக்கியக் காதல் வாழ்வு தமிழரை— உலகினரை-வாழ்விக்கிறது! காதல் பொய் என்னும் மருட்சியும் காதலே எல்லாம் என்னும் மாயக் காட்சியும் பொய்படும் தமிழிலக்கிய அறநெறி அறிவாண்மையைக் கழகக்காதலிலக் கியம் அறிவுறுத்துவது உலக இலக்கியப் பரப்பில் வியத்தகு இலக்கியப் புதுமையும், ஆற்றலுமாம்.

காலத்தின் சுவடு பதிந்த— புறத்துறையிலக்கியங்கூட, இன் றைய புலமைக் கண்ணோக்குல் நடைமுறைப் போராட்ட உலகுக்குரிய உருவகக் காட்சியாக ஏற்கக்கூடியதாக அமைந்த நுட்ப ஒட்பத் திறன் வியக்கக் கூடியதாகும். இவ்வகையிலும் புறப் பொருளிலக்கியங்களின் உயிராற்றல் உலகிலக்கியங்க ளிடை ஒப்பற்ற தனிப் பேரொளி வீசுவதே அதன் பொன்று வாழ்வின் புதுமைப் பொலிவைக் காட்டப் போதியதாகும்.

கழக இலக்கிய மறுமலர்ச்சி இயக்கம் தமிழக முழுதுமட்டு மின்றி—மொழி—நாடு என்ற எல்லை கடந்த—உலக முழுதும் பரப்பப்பட வேண்டும். அஃது இன்றைய விழிப்புற்ற தமிழியக் கத்தின் உலகளாவிய புரட்சித் தொண்டாக அமையும். ஊர்கள் தோறும் கழக இலக்கிய விழாக்களும், சிறப்புத் திருவிழாக்களும் அமைத்துத் தமிழிலக்கிய அறிவு—உணர்வ நுட்ப ஒட்ப விருந்தை விழுமிய முத்தமிழ்ப் புலவர்களால் முழக்கஞ் செய்தல் மிகமிக இன்றியமையாத பணியாகும். 'பேரறிவின் மூத்த தலை

Abu Mohamed Ilyes bin yusuf) என்பதாகும் இவரின் முதற் பாவியம் 'குசுரூவும் சிரினும்' ஆகும். (Khosran and shirin) 'இலா—மச்னு' அவரின் இரண்டாம் பாவியமாகும் இவர் அரசவைப் பாவலராக விளங்கினர். இரு சிற்றூரின் வருவாய் இவருக்குப் பரிசிலாக அரசால் அளிக்கப்பட்டது. இவர் காலம் கி. பி. 1140—1202 ஆகும்.

# ஏவல் வினை விகுதி "உம்/ம்"

வித்துவான் மோ. இசரயேல் எம். ஏ., டிப் (செருமன்)
தமிழ் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

தற்காலப் பேச்சுத் தமிழில் வாரும், உண்ணும், செய்யும் போன்ற சொற்கள் உயர்வு ஒருமை (honorific singular) ஏவலாக வழங்குகின்றன. இவற்றோடு பன்மை விகுதியாகிய 'கள்' சேர்த்து வாருங்கள், உண்ணுங்கள், செய்யுங்கள் என்று பேசுவதும் இன்றைய இலக்கியத் தமிழில் எழுதுவதும் வழக்கமாகி விட்டது. வாரும், உண்ணும் போன்ற ஏவல் வழக்குகள் பலரால் கொச்சை வழக்குகள் எனக் கருதப்பெறுகின்றன. ஆனால், பண்டைய இலக்கியங்களை ஆயின் இத்தகைய வழக்குகள் பண்டை இலக்கிய வழக்கின்கண் இடம் பெற்றுள்ளன என்பதைக் கண்டு மகிழலாம். இலங்கைத் தமிழில், தமிழ் நாட்டில் தற்கால வழக்கில் இல்லாத பல பண்டைத் தமிழ் இலக்கிய வழக்குகளும் சொற்களும் பேச்சு வழக்கில் இன்றும் பயிலுகின்றமையைக் காணுதல் இயலும். இவற்றுள் "உம்" விகுதி பெற்ற ஏவல் ஒன்றாகும். தமிழ் நாட்டில் வாரும், உண்ணும் என்பன போன்றவை சிறு வழக்கினவே. "கள்" விகுதி இணைத்து வழங்குதலே மிகுதி. ஆனால் இலங்கையில் வாரும், உண்ணும் போன்ற வழக்குகளே மிகுதி.

இலக்கண நூற்கள்: தொல்காப்பியத்தில் ஏவல் வினை தனிப்பட்ட முறையில் விளக்கப்பெறவில்லை. தொல்காப்பியனார் ஏவல் வினை வழக்கை உணர்ந்து ஏற்றுக் கொண்டு இருப்பினும் (தொ. எழு. 210, 224) அதனை முன்னிலை வினையுள்ளே அடக்கியுள்ளார் சிலர் வியங்கோளினுள் அடக்கி உள்ளார் எனக் கருதுகின்றனர், ஆனால் வியங்கோளைத் தன்மை முன்னிலையில் மன்னாது (தொ. சொல். 226) என்று வரையறுத்துக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மகன், எச்சரிக்கையே' என விக்தர் கியூகோ முழங்கினான். [2] 'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' (குறள்: 435) என வள்ளுவ அந்தணன் ஆணை நல்கினன். ஆகலின் இளந்தமிழர், ஊர்தோறும், தெருத்தோறும், சந்தி தோறும், பொதியில் தோறும், வீடு தோறும் கழகத் தமிழிலக்கியவிழாவும், குறள்-தொல்காப்பியத் திருவிழாக்களும் இன்னே செய்ய முனைதல் வேண்டும்! இளந் தமிழ்க் குடியினரே! தமிழ் விழாக் காண்மின்! எழுமின்! ○

---

2) "Caution is the eldest child of wisdom"–Victor Hugo.

கூறிய அவரே, முன்னிலையில் வழங்கும் ஏவலை எவ்வாறு அதனுள் அடக்குதல் இயலும்? எனவே அன்னார் கருத்து பொருந்தாமை அறிக. தொல்காப்பியனார் முன்னிலைப் பன்மை விகுதிகளில் ''மின்'' என ஒன்று குறிப்பிட்டுள்ளார்

(தொ. சொல். 224)

எ–டு கேண்மின்
கேள் —ம்—இன்
கேள்—உம்—இன்

''உம்'' அல்லது அதன் உகரம் கெட்ட வடிவாகிய ''ம்'' என்பதை முன்னிலை விகுதியாகவோ அல்லது ஏவல் விகுதியாகவோ தொல்காப்பியனார் குறிப்பிடவில்லை. நன்னூலார் ஏவல் வினைகளை ஓரளவுக்கு விளக்கிக் கூறி உள்ளார். முன்னிலைப் பன்மை விகுதிகளைக் கூறுங்கால் ''மின் அவற்றேவல்'' (நன். 337) எனக் கூறி இருத்தலும், தொல்காப்பியனார் எச்சவியலில் வைத்துள்ள ஏவலைக் குறிக்கும் நூற்பாவை வினையியலில் முன்னிலை ஒருமை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும், முன்னிலைப் பன்மை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும் இடையில் (நன் 336) வைத்திருத்தலும் இதற்குச் சான்றுகளாம். இக்கட்டுரையின்கண் யாம் விளக்கப்புகுவது பண்டைத் தமிழில் வழங்கிய ''உம்/ம்'' விகுதி பெற்ற ஏவல் வினைகளையே யாம்.

1. மின்: (தொ சொல் 224; நன். 337) தொல்காப்பியனார் இதனை முன்னிலைப் பன்மை என்று மட்டும் குறித்திருக்க, நன்னூலார் முன்னிலைப் பன்மையில் ஏவல் என்கிறார்.

எ–டு சேர்மின் (புறம், 9); தமின் (புறம், 152)
சேர் + உம் + இன்
சேரும் + இன்
சேர்ம் + இன்
சேருமின்

இவண் உம்மின் உகரம் கெட்டு ''ம்'' முன்னிலைப் பன்மை ஏவலில் வழங்குகின்றது என்பது தெளிவு பர். சுப்பிரமணியம் (சாத்திரி) அவர்கள் செய்மின் அல்லது செய்மே என்பதினின்று தான் செய்யும் வந்திருக்கலாம் (செய்மின் செய்மே > செய்ம் > செய்யும்) எனக் கருதுதல் [1] அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

1) Dr. P S. Subrahmanya Sastri, History of Grammatical Theories in Tamil (1934), P. 179.

2. மியா: தொல். எழு. 224, சொல். 274; நன். 440) "மியா" முன்னிலை அசைச் சொல் எனத் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் கூறுவதினின்று "மியா" முன்னிலையில் மட்டுந் தான் வழங்குகின்றது என்பது தெளிவு.

எ–டு கேண்மியா, சென்மியா
கேள் + உம் + யா
கேளும் + யா
கேண்ம் + யா
கேண்மியா

இங்கு "ம்" முன்னிலை ஏவலில் வழங்குகின்றது. இச்சொற்கள் வழக்கில் ஒருமையில் வழங்கினும், பன்மையே; உயர்வு ஒருமையில் வழங்குவதாகும்.

3. மோ: (தொல். சொல். 274; நன். 440) இதனைத் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் முன்னிலை அசைச்சொல் என்றே குறிக்கின்றனர். ஆனால் உரையாசிரியர்கள் இதற்குக் கொடுக்கும் எடுத்துக் காட்டுகளும், கழக இலக்கியங்களில் இதன் வழக்குகளும் இஃது ஏவலுடன் தொடர்புடையது என்பதைத் தெளிவாக்குகின்றன.

எ–டு மொழிமோ (குறு. 2.) உரைமோ (ஐங் 66.), உள்ளுமோ (புறம், 48)

மொழி + உம் + ஓ
மொழியும் + ஓ
மொழிம் + ஓ
மொழிமோ

"உள்ளுமோ" என்னும் சொல்லில் "உம்" முன்னிலை ஏவல் விகுதியாக அமைந்திருப்பதும், மற்றவற்றில் உகரம் கெட்டு "ம்" அதே பொருளை உணர்த்தி நிற்பதும் கவனித்தற்குரித்து.

4. ஏ: (தொல்.சொல். 451; நன். 336) தொல்காப்பியனார்,

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே (சொல். 451)

என்கிறார். இதே நூற்பாவை நன்னூலார் அப்படியே எடுத்தாளுகின்றார். ஆனால் தொல்காப்பியனார் இதனை எச்சவியலில் அமைத்திருக்க, நன்னூலார் வினையியலுள் முன்னிலை ஒருமை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும் பன்மை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும் இடையே அமைத்துள்ளார். ஏகாரம் முன்னிலையில் வரும் என்பதை இலக்கண நூலாரே ஒப்புக் கொள்ளுகின்

றனர். ஏகாரம் முன்னிலையில் வருவதற்கு உரையாசிரியர் தரும் எடுத்துக் காட்டுகளும் கழக இலக்கியப் பிற சான்றுகளும் அஃது ஏவல் வினைகளுடன் இணைந்து வருகின்றது என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

எ-டு  செய்ம்மே (புறம், 46), களைமே (புறம், 145)
பிரிமே (ஐங். 306), மொழிமே (குறு. 51)
செய் + உம் + ஏ
செய்யும் + ஏ
செய்ம்மே.

இங்கும் "உம்" மின் உகரம் கெட்ட "ம்" முன்னிலை ஏவலை உணர்த்தி நிற்கின்றது. மியா, மோ, ஏ என்பனவற்றை ஈறுகளாகக் கொண்ட சொற்கள் ஒருமைப் பொருளைத் தரினும் அவை உயர்வு ஒருமையேயாம்.

இவண் பிரித்துத் தரப்பட்ட இன் (< என் < ஏன்), யா, ஓ, ஏ என்பன அசைநிலைகள் எனக் கொள்ளப் படுதல் பொருந்தும். அவற்றைப் பண்டைக்கால வினாக்குறிகள் என்று கருதுவதும் தவறாகாது. பர். மு. வரதராசனார் அவர்கள் கருத்துப்படி கேட்போரின் கருத்தைக் கவர்வதற்காக வினாக்களைச் சேர்த்து ஏவற்சொற்களை அமைத்துக் கொள்ளுதல் இயல்பாம். மேலும் "தொடக்கத்தில் வினாப் பொருளை உணர்த்தி வந்த 'என்' என்ற சொல் காலப்போக்கில் தன் பொருளும் உரிமையும் இழந்து ஏவற்பன்மை அமைப்பதற்குத் துணைசெய்யும் இடைச் சொல்லாக மாறி இருத்தல் கூடும்" என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார் [2]. அன்றேல் அவைதாம் இணைந்துள்ள ஏவல் வினைகளின் கட்டளைத் தன்மையைக் குறைத்து, ஏவலை அன்போடு தெரிவிக்கப் பயன்பட்டன என்று கருதுதலும் பொருந்தும். அஃது அவ்வாறாயினும் மேற்கொடுக்கப்பட்ட வினைகளில் முன்னிலை ஏவல் குறித்து நிற்பது "உம் / ம்" ஆகும் என்பது உறுதி. திராவிட மொழியியல் அறிஞர் யூலி பிளாக் அவர்களும் "ம்" பண்டைத் தமிழில் ஏவலை உணர்த்திற்று எனக் குறிப்பிடுகிறார் [3]

சொற்களைப் பண்டைக் காலத்தில் இலக்கண நூலார் தவறாகப் பிரித்தமையால்தான் இந்த உண்மைகள் வெளிப்படாமற் போயின. பெரும்பாலும் உகரம்கெட்ட மகரவடிவே ஏவற்பன்மை ஈறாக வழங்கி இருக்கின்றது. மேலும் இலக்

2) டாக்டர். மு. வரதராசன், மொழியியற் கட்டுரைகள் (1954) பக். 249

3) Tules Block, The Grammatical Struchure of Dravidian Languages (1954), P. 58

கண நூலார் கூறும் வடிவங்களில் (forms) எல்லாம் ஏவல் விகுதியோடு அசைநிலை இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் கழக இலக்கியங்களில் அசைநிலை இணைக்கப்படாமல் வழங்கிய பல எடுத்துக் காட்டுகளும் உள.

எ-டு கொண்ம் (புறம், 152) கொள்—ம்
செய்ம் (புறம். 48) செய்—ம்
வம் (புறம், 180) வா—ம்
களைம் (புறம், 145) களை—ம்

எடுத்துக்காட்டுகளில் முன்னிரண்டில் உகரவுயிரும் பின்னிரண்டில் உகரவுயிரும் அதனைச் சார்ந்த மெய்யும் கெட்டு உள்ளன. கழக இலக்கியங்களில் மிகப் பிற்பட்டதாகக் கருதப் படும் பரிபாடல் என்னும் நூலில் ''வாரும்'' (பரி. 14) என்னும் ஓர் ஏவல்வினை அமைந்துள்ளது. கழக இலக்கியங்களில் காணும் இவை போன்ற சொற்கள் யாவும் பண்டைக்கால ஏவற்பன்மை விகுதி ''உம் / ம்'' என்பதைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இவ்விகுதியை ஏவலில் அல்லது முன்னிலையில் வழங்கும் எனத் தொல்காப்பியனார் குறிப்பிடவில்லை. ஒருவேளை தொல்காப்பியனார் காலத்தில் கொண்ம், செய்ம், வம், களைம் போன்ற அசைநிலை ஏற்காத சொற்கள் ஏவலில் வழங்க வில்லையோ? அவர் காலத்தில் அசைநிலையுடன் இணைந்த ஏவல்கள் மட்டும்தாம் வழங்கினவோ? அவற்றையும் அவர் தவறாகப் பிரித்து விட்டனரோ என்று ஐயுற இடமுண்டு. அங்ஙனமாயின், கி. பி 12-ம் நூற்றாண்டினரான நன்னூலார் ஏன் அதைக் கூறாது விடுத்தார்? அவர் கழக நூற்களைப் பார்த்திருக்கக் கூடுமே! எனினும் காரணம் தெளிவாக அறிய இயலவில்லை.

காலப்போக்கில் ஏவற்பன்மை ''உம் / ம்'' விகுதியுடன் அசைநிலை பெற்றும் பெறாமலும் வழங்கிய ஏவற்பன்மை வினைகள் காலப்போக்கில் உயர்வு ஒருமையைக் குறிக்கத் தொடங்கின. உகரம் கெட்டு மகரமே நின்று ஏவலை உணர்த்தும் நிலை மாறி ''உம்'' முழுவடிவில் நின்று ஏவலை உணர்த்தும் நிலை பெருவழக்காகி விட்டது. அசைநிலைகள் இணைக்கப்பட்டு வழங்குதல் நாளடைவில் குறைந்துபோயின. ''உம்'' உயர்வு ஒருமையில் வழங்கவே, காலப்போக்கில் தொல்காப்பியனார் அஃறிணைப் பெயர் பன்மை விகுதியாகக் குறித்துள்ள ''கள்'' (தொல். சொல். 169, 171) உயர்திணையில் ஆட்சிபெற்று, உயர்வு ஒருமை விகுதியுடன் இணைக்கப்பட்டும் பன்மை ஏவல் வினைகளை ஆக்குகின்றது. எனவே செய்ம், வம் போன்ற கழக இலக்கிய வழக்குகள் செய்யும், வாரும் என மாறிப் பின்னர் செய்யுங்கள், வாருங்கள் என அமைந்து ஏவற்பன்மை வினைகளாகச் செயலாற்றுகின்றன.

*




## இந்தி எதிர்ப்பு:

நாடிழந்தாய்; மான உணர்விழந்தாய்; பண்பிழந்தாய்;
பீடிழந்தாய்; ஆண்மைப் பெயரிழந்தாய்; -கேடுகெட்டாய்;
இன்றுன்றன் சொத்தாய் இருக்கும் தமிழையும்
கொன்றழிக்க எண்ணினையோ கூறு.

தாயான செந்தமிழ் தாய்நாட்டை ஆளாமல்
நாயான இந்தி நமையாள -ஆமாறு
கொண்டுவந்தார் சட்டத்தைக் கண்டபின்னும் தூங்குகின்றாய்;
உண்டோகொல் மான உணர்வு.

**- அர. தங்கராசன், பாலச்சேரிக்காடு.**

பொங்கியெழும் தமிழுணர்வைத் தடைபோடற்குப்
புல்லியர்கள் முயன்றாலும் முடியுமோதான்?
மங்காத மாத்தமிழைக் கெடுக்க எண்ணின்
மானமுள்ள மறத்தமிழர் பொறுப்பாரோதாம்?
செங்குருதி உகுத்தேனும் மொழியைக்காக்கச்
செயல்மறவர் கொதித்தெழுந்தே பொருதல்அன்றி
இங்கென்றும் இந்தமொழிக் கிடங்கொடுக்க
இசைந்திடுவார் எனுமெண்ணம் இனியும் வேண்டா!

**-அரங்கநாதன், கடலூர்-1.**

கற்கண்டாம் நற்றமிழும் கருகிப் போனால்
கவினழிவாய் நன்னெஞ்சே! கயமைச் சொல்லைக்
கற்றிங்கு வாழ்தலினும் சாதல் மேன்மை!
கருதிடுவாய்; உண்மைக்கூற் றீதே காண்பாய்!
பற்றுடனே முந்துறுவாய்; போர்மறத்தால்
புல்லியரைக் கொன்றொழித்துப் புகழே பூண்பாய்!
வெற்றியெங்கள் உரிமையெனப் பறைமுழக்கி
வேறோடே இந்திதன்னை வீழ்த்து! வீழ்த்து!!

**-க. எழிலன், இலால்குடி.**

கொஞ்சம் கொஞ்ச மாகவே
கழுத்தை நெறிக்க லாயினார்!
பிஞ்சு நெஞ்சை வாட்டியே
பித்துப் பிடிக்க வைத்தனர்!

நெஞ்சைத் திறந்து நில்லடா!
நேர்மை வாழ்வில் கொள்ளடா!
நஞ்சு கொண்ட இந்தியின்
நட்பை வெட்டி வீழ்த்தடா!

**—க. பூங்குன்றன், அன்பில்.**

தமிழ்அழிவே தம்வாழ்க்கை எனவடவர் கொக்கரித்துத்
தாக்கக் கண்டும்
தமிழ்ப்பகைவர் கூட்டங்கள் தமிழகத்துள் தலைவிரித்தே
ஆடக் கண்டும்
தமிழழிக்கும் தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சன்
என்ற பின்னும்
'தமிழன் நான்!' எனச்சொல்லித் திரிகின்றீர் வெட்கமில்லை!
தமிழரா நீர்?

வான்குரங்கு மொழியாலே வாணிகத்தை நடத்துகின்ற
வழக்கமிங்கே
ஏனென்று வாணிகர்கள் எழல்வேண்டும்; வழக்குரைஞர்
அறமன் றத்தைத்
தேன்தமிழில் நடத்துமெனத் தீர்ப்புரைத்துப் பேய்மொழியைப்
பிளத்தல் வேண்டும்;
கான் மொழியைத் திணிப்போர்மேல் காவலரே குண்டுமழை
பொழிதல்வேண்டும்;

அலுவலினர் இந்தியினில் அறிக்கைவரின் அடியோடே
எரித்தல்வேண்டும்;
பலர்கூடும் சட்டமன்றில் பைந்தமிழில் சொற்போரைப்
பாய்ச்சல் வேண்டும்;
புலிபோலத் தில்லியிலும் தமிழுறுப்பார் பொற்றமிழை
முழக்கல் வேண்டும்;
இல்லையென்றால் தமிழ்நாட்டை எரித்துவிட்டே எல்லாரும்
இறத்தல் வேண்டும்.

**—'கோ', பணையபுரம்.**

**ஆரியம் மலிந்த தாலோ?**
**அறவழி முறிந்த தாலோ?**
**சீரிய தமிழர் ஒன்றாய்ச்**
**செயல்படா திருந்த தாலோ?**
**கூரிய வாளும் வேலும்**
**கொடும்படை பிறவும் தாங்கி**
**வேரறப் பகையை வீழ்த்தும்**
**வெம்புலி மறம் படைத்தோர்**

துச்சமாய் உனைம தித்தே
தூங்கிய தாலோ? இல்லை
எச்சிலை நாயென் றுன்னை
எண்ணி,உள் நுழைவா யென்னும்
அச்சமே சிறிது மின்றி
அமைதியா யிருந்த தாலோ?
''எச்சிலே தமிழ் கெடுக்க''
இந்தியே ஏன்நு ழைந்தாய்?

பி. காசிநாதன், சென்னை-43

நேற்றுப் பிறந்ததாம்
இன்று வளர்வதாம்-உனைச்
சேற்று மொழிஇந்தி,
செந்தமிழ் ஆளுவதோ?-அட,
தூற்றும் வடவரின்
தொல்லைகள் இங்குநாம்
மாற்று வதென்றேடா?-தமிழ்
மலர்ந்திடல் என்றேடா?

மட்ட மிகுஞ்செயல்
வன்புடை இந்தித்தேள்
கொட்ட வருகுவதோ?-தமிழ்
கொல்ல வருகுவதோ?
திட்டம் இன்னுமென்ன?
தீட்டிய வாளொடு
கொட்டம் அடக்கிட-ஒன்றுய்க்
கூடுவ தென்றேடா?

– மா. செல்வராசன், சென்னை-30

வீங்குதடா என்தோள் விலங்கு மொழிஎதிர்த்தே
ஓங்குதடா நெஞ்சில் தமிழ்உணர்வு-தீங்குதரும்
இந்திப்போர் வந்ததடா, ஏ,தமிழா! தூங்காதே
முந்திப்பாய் போர்க்களத்தின் முன்!

கூட்டுமொழி இந்திமொழி கொஞ்சுதமிழ்க் கீடாமோ?
வாட்டுமொழி நற்றமிழ்க்கே வேட்டுமொழி-பாட்டுமொழி
பைந்தமிழை ஓட்டுமொழி பார்தமிழா! சேட்டுமொழி
செந்தமிழைக் காப்பதற்கே சேர்!

–ஆ இராசமாணிக்கம், சென்னை-21

பூத்தநறு மலர்த்தோட்டம் புழுதி போர்த்த,
பொங்கியெழும் புயற்காற்று போந்தாற் போலே
கோத்தமுத்து மணிமாலை குலைந்து வீழக்
கொடுங்கோலன் அறுத்தெறிந்த கொடுமை போலே
யாத்ததமிழ் இலக்கியங்கள் தீய்ந்து வேக
எங்கணுமே எரிநெருப்பு மூண்டாற் போலே
பார்த்தாயா பைந்தமிழா நின்பொன் னாட்டிற்
பாழுமிந்தி சூழவந்து நின்ற தேடா!

நடுவீட்டில் குடிகொண்ட நச்சுப் பாம்பாய்,
நற்பயிரின் பொற்பழிக்கும் தீய நோயாய்த்,
தடநீர்ச்செந் தாமரையைச் சிதைக்கும் மாடாய்த்
தவழ்புறவைச் சாகடிக்குங் கழுகாய்; வண்ணப்
படமீதிற் பற்றுகின்ற பூச்சி யாய்; மாம்
பழத்துக்குட் கொழுத்துவரும் கரிய வண்டாய்ச்
சுடுகாட்டு மறைவாணர் சொல்லாம் இந்தி
தொட்டதடா சுட்டதடா தமிழர் நாட்டை!

ஆழ்கடலாய் எரிமலையாய் அமைந்த வர்நாம்;
அகஞ்செருக்கும் அரசினரோ அடிமை யாளர்;
'வாழ்க'வென வடமொழியை வாழ்த்தித் தென்பால்
மக்கட்குத் தூக்குமரம் வழங்கு கின்றார்;
'வீழ்க இந்தி வல்லாண்மை எனநா மெல்லாம்
வீறுகொளல் வெடிக்காத வெற்று வேட்டா?
'சூழ்க'வென ஏவிவிட்டார் இந்தி! தோழா!
தோள்புடைத்துச் சூள்எடுத்துத் துடித்து வாராய்!

- நா. இளங்கோவன், சித்தர்காடு.

## தமிழுணர்வு:

இளமைக்குள் சுரக்கின்ற
எழில்தூண்டும் நினைவெல்லாம்
வளமைக்குள் பாய்வதற்குள் சாய்ந்திட்டார்-தமிழ்
வாழளவும் புகழ்க்கூரை வேய்ந்திட்டார்!
களங்காண மனமில்லை
கசடர்முன் அறமில்லை
உளஞ்சோர்ந்து தீப்பாய்ந்தே இறந்திட்டார்-நம்
ஒவ்வொருவர் மனக்கதவும் திறந்திட்டார்!

பொழுதுக்குப் பொழுதிங்குப்
புதுச்சட்டம்! கரும்பின்பம்
கழுதைக்குத் தெரியுமோ தமிழ்த்தம்பி-அவர்
கரிந்ததெலாம் தமிழ்காக்க உனைநம்பி

உழுகின்ற வயலுக்கும்
உழைக்கின்ற உடலுக்கும்
பழுதென்றால் சீர்செய்ய வழியுண்டு-உயிர்ப்
பைந்தமிழ்க்கே பழுதென்றால் மொழியுண்டோ?

பொன்னறுத்த கைகளை நாம்
புல்லறுக்க வைப்பதுண்டோ
தென்னவர்தம் குலவிளக்கே நில்லப்பா-உன்
தோள்வலிமை துவண்டதுவோ சொல்லப்பா

தன்னுணர்வு கெட்டவர்க்கும்
தமிழுணர்வை ஊட்டிவிடத்
தன்னுயிரை விட்டவரை எண்ணப்பா-இனித்
தமிழ்நாட்டில் உன்கடமை என்னப்பா?

–காரை. கோ. பாரதி.

இமயம்கொள் தமிழ்மறத்தை அறியான் யாரே?
எந்தமிழில் புறத்திணையைக் கல்லான் அன்றே!
அமிழ்தினிய தமிழ்இசையை அறியான் யாரே?
அயலிசையிங் குயர்வென்னும் புல்லன் அன்றே!
தமிழ்நாடு தனிநாடென்(று) அறியான் யாரே?
தமிழகத்தின் வரலாற்றைக் கல்லான் அன்றே!
தமிழ்மொழிக்கு முதல்எதிரி உலகில் யாரே?
தமிழ்மொழியில் பிறமொழியைக் கலப்போன் அன்றே!

-இராச. உத்தமன், சென்னை-9.

தன்மான உணர்வின்றித் தடித்த நெஞ்சும்,
தாய்மொழியை விற்றடைந்த பதவி தானும்,
இன்பென்றே பகைநத்தும் இழிந்த பண்பும்
இறந்துபடும் நாளிற்றான் நமக்கு வாழ்வு.

பொருட்குவையைப் பெற்றாலே போது மென்று
பொய்யுரைக்கும் ஏடுகளைப் பொசுக்கு தற்கு
மருள் நீங்கி எல்லாரும் முனையும் நாளே
மலர்த்தமிழ்க்கும் நாட்டுக்கும் நமக்கும் வாழ்வு.

உரிமைச் செம் பயிருக்கு வேலி போலும்,
ஒப்பற்ற தமிழுக்குக் காவல் போலும்
நரி யெண்ணம் கொண்டோரே இன்றும் உள்ளார்!
நடலையரை ஒழித்தால்தான் நமக்கு வாழ்வு.

– சி. விநாயகமூர்த்தி.

மோதும் முகிலிடை மூழ்கி யெழுந்தொளி
முந்தும் முழுநிலவில்—எழில்
சிந்தும் இயற்கையினில்—மனம்
ஓதுபல் லெண்ணத்தை வண்ணத்தில் ஓவிய
ஒப்பனை செய்யலுற்றேன்—அதில்
உள்ளம் மலர்ச்சியுற்றேன்.

துள்ளி முழவொலித் தூற்று மருவியைத்
தூய்மல ரின்னிதழை—அதில்
தூங்கு சுரும்பினையே—குழம்
பள்ளித் திரையினில் பன்னிறத் தாலுருப்
புத்துயிர் பெற்றிடவே—எழில்
முத்திரை யாக்கிவிட்டேன்.

ஓடையும், சோலையும், ஓங்குயர் குன்றமும்,
ஒண்மலர் வண்ணங்களும்—கனி
உண்ணும் பறவைகளும்—நீர்
ஆடிடும் பெண்டிரும் ஆழ்கடல் சூழலும்
அண்டின தீட்டி விட்டே—நிழல்
நண்ணினேன் ஒய்வுறவே.

செந்தமிழ்த் தாயின் சிறப்பினைப் பற்றியோர்
செந்தமிழ் ஆய்புலவன்—தேன்
சிந்தும் இசைவடித்தான்—அச்
சிந்தினை ஒட்டியே சீருடன் ஓவியம்
செய்திடக் கூடுவனோ?—அவள்
செம்மையைக் கூட்டுவனோ?

—பெருவை-சதாசிவம், பள்ளிநேலியனூர்.

இன்பத்தின் பிறப்பிடமே தமிழென் பேன்யான்;
இன்னமிழ்தின் தீஞ்சுவையே தமிழென் பேன்யான்;
துன்பத்தின் வேரறுக்கும் தமிழென் பேன்யான்;
தூயகலைப் பெட்டகமே தமிழென் பேன்யான்;
அன்புமணங் கமழ்மலரே தமிழென பேன்யான்;
அறிவொளியை வீசுசுடர் தமிழென் பேன்யான்;
தென்பொதிகைத் தென்றலொடு சேர்ந்து லாவித்
திக்கெட்டும் புகழ்சேர்க்குந் தமிழென் பேன்யான்.

காட்டினிலும் புழையினிலும் மக்கள் வாழ்ந்த
காலத்தே அழியாத இலக்கி யங்கள்
ஏட்டினிலே வடித்தளித்த பெருமை யோடே
இப்பாரில் அறம்பொருளோ டின்பந் தன்னைக்

கூட்டியுமே நாகரிகத் தலைமை பெற்றுக்
குன்றுமல் தமிழிருந்த பெருமை கூறக்
கேட்டிடுவார் செவியினிலே தேனும் பாயும்;
கிளத்திடுவார் நாவினிலே அமுதும் ஊறும்.

தமிழுக்கு வாழ்வென்றல் நாமும் வாழ்வோம்.
தமிழுக்குக் கேடென்றல் என்றுந் தாளோம்.
தமிழுக்குப் பகையென்றல் நமக்கும் அஃதே;
தமிழுக்கே உறவென்றல் மகிழ்ந்தே ஏற்போம்.
தமிழ் வாழ உடல்பொருளோ டாவி யெல்லாந்
தந்திடுவோம் என்றிங்கே எழுந்து நிற்போம்
தமிழைவிடத் தமிழ் நாட்டார் தமக்கு மேலாய்த்
தடம்புவியில் யாதுண்டோ ? ஒன்றும் இல்லை

– புலவர். மா. இராமசாமி திருச்சுழி.

## பொது:

ஆற்றங் கரை ஓரம் – எழில்
அவிழ்ந்த மலர்ச் சோலை
காற்று வந்து வீசக் – கன்னி
கனியும் தமிழில் பாடி
வீற்றி ருந்தாள் அங்கே – வான்
விட்டு வந்த நிலவாய்!
ஊற்றுப் புனலின் ஓடை – அவள்
ஓடிப் பாடும் காடை!

தோற்றம் மயிலின் சாயல் – குழல்
துவளும் மயிலின் தோகை
நேற்று வந்து சென்றுள் - என்
நினைவை அள்ளிச் சென்றுள்.
காற்றில் ஆடும் தளிராய்; – அவள்
கன்னல் தந்த சாறுய்;
மாற்று யர்ந்த பெண்ணுள் – என்
மனதில் மனதைச் சேர்த்தாள்.

– சோ. அர. எழிலன், கோவை 4.

மாநிலத்தோர் மாண்புக்கோர் எடுத்துக் காட்டாய்
மாணுக்கர் மதிப்புடனே நடத்தல் வேண்டும்!
தீநெறியைத் திரட்டுப்பால் போலக் கூறும்
தீங்குடையோர் சொல்,செயலை மறுத்தல் வேண்டும்!
தூநெறியைக் கைக்கொண்ட மாணவர்கள்
தோமின்றித் தொல்லுலகில் துலங்கலாகும்!
நாநெறியின் கல்விகற்றுத் தேர்ந்தோ ரெல்லாம்
நானிலத்தைப் புரப்பதனை நன்கு காணீர்!

–'புதுவை அமலன்'-புதுச்சேரி-1.

# அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு

தொடர் 7.

முன்னுரை (தொடர்ச்சி)

குற்றுயிரும் சிற்றறிவும் வாய்க்கப்பெற்ற பல்லாயிரக் கணக்கான உயிர்களுள் மாந்த உயிரும் ஓர் உயிர் வகையாகும். அம் மாந்த உயிர் பிற உயிர்களைப் பார்க்கினும் சிறந்தும் செவ்விதாயும் இக்கால் விளங்குதல் போலவே தொடக்கக் காலத்தும் இவ்வாறே தோன்றியிருக்கும் என்று கருதுதற்கு அறிவியல் மட்டுமன்றி உணர்வியலும் இடம் தராது.—என்னை? அறிவியல் என்பதும் உணர்வியல் என்பதும் ஒன்றுபட்டனவாகாவோ எனின்; ஆகா. அறிவியல் என்பது மேலறிவாம் பருப்பொருள் உண்மை சாற்றும் இயல் என்றும், உணர்வியல் என்பது உள்ளறிவாம் நுண்பொருள் உண்மை சாற்றும் இயல் என்றும் விளங்கிக் கொள்க. அவ்வாறு தொடக்கக் காலத்து வேறுபட்டுத் தோன்றிப், பல்லூழிக் காலங்களாக மாறுபட்டு வரும் இம் மாந்த உயிர் பிற உயிர்களினும் உயர்ந்து விளங்குதல், அது தன்னைக் கொண்டு வந்த வழி முறைகளாலும், தான் கண்டு வந்த தெரி முறைகளாலும், தான் மேன்மேலும் தன்னைச் செலுத்துவான் வேண்டித் தேர்ந்தெடுக்கும் அறிமுறைகளாலுமே என்க. இத்தகைய போக்கு நிலைகளுக்கான உற்றறிவும் உள்ளுணர்வும் தொடக்கக்காலத்திலேயே இம்மாந்த உயிர்கட்கிருந்தவோ, எனின்; இருந்ததில்லை. பின் அவை கைவரப் பெற்றதற்குக் காலமே கருவியாக அமைந்ததோ எனின்; அதுவுமன்று. பின் அக் கருப்பொருள்தான் என்னையோ எனின், அவ்வுயிர்களின் மேனிலை வளர்ச்சிக்கான கருப்பொருள் அவ்வுயிர்களின் அடிநிலை அமைப்பே என்று அறிக. அத்தகைய அடிநிலை அமைப்பு மாந்த உயிர்போல் இயங்கும் எல்லா வகை உயிர்களுக்கும் ஒன்று போலவே அமைந்து கிடப்பதோ எனின்; ஆம் என்க. என்னை? உயிர்களின் அடிநிலையாந் தன்மை எல்லாப் படிநிலை உயிர்களினும் ஒன்றேயென்றும், அவற்றின் போகு நிலையே அவ்வவற்றின் உய்வு நிலைக்கும் உந்து நிலைக்கும் தக அமைகின்றது என்றும் அறிக. இனி, உயிர்களின் அடிநிலையாந் தன்மை ஒன்றுதல் போலவே, அவற்றின் முடிநிலையாந் தன்மையும் ஒன்றுதுமோ எனின்; அவ்வாறே என்க.



இனி, இவ்வாறு உயிர்களின் அடியும் முடியும் ஒத்து இடையிடைப்பட்டதே அவ்வவற்றின் வாழ்வாம் என்க.(இவ்விடத்து, இதுவரை உயிர்கள் என்று பேசப் பெற்றதும், இக்கால் பேசப் பெறுவதும் உயிர்கள் சார்ந்த இயக்க உடலங்களையே என்றும், உடலம் தவிர்ந்த உயிர் ஒன்று உளதாம் என்று எண்பிக்கப் பெறும் வரை, அதன் கொள்பொருளும் அதுவே என்றும் நினைவில் வைத்துக்கொள்க.) எனவே உயிர்களின் தோற்ற ஒடுக்கங்களாக அமைந்த அடிமுடிகளின் இடையுட்பட்ட வாழ்வு எந்நோக்கம் பற்றி அமைந்திருத்தல் வேண்டும் என ஆய்ந்தறிகின்ற நிலைக்குமுன், அஃது எப்படி அமைந்துள்ளது என்று அறிதல், தன்னறிவும், தன் முனைப்பும் கொண்ட உயிர்களின் போகு நிலைக்கு ஓர் இன்றியமையாமை அன்றோ? வாழ்வு என்று கூறின மட்டில் எல்லா வகை உயிர்களுக்கும் இயல்பாயமைந்த உண்ணல், உறுதல், உறங்கல் முதலிய செயல்களேயாம் என்று எல்லாரும் எளிதின் பொருள் உரைப்பர். இத்தகைய செயல்களே வாழ்வாகா. இவை வாழ்வு என்ற ஓர் இயக்கத்தினை நுகரும் ஆறே அன்றி, வாழ்வை அறிந்த தன்மை ஆகாது. என்னை; சுவையும் நலமும் கலந்த கனியொன்றினை—நாம் சுவைப்பதும், அதனைப் பற்றி அறிந்து கொள்வதும் வேறும் ஆதல்போல என்க வாழ்வைச் சுவைப்பதே வாழ்வின் நோக்க. மாக இருப்பின், இவ்வுலகத்தின்கண் உறையும் பல்லாயிரங் கோடி நுண்ணுயிர்கட்கும், அவற்றிற்கெல்லாம் மேலாந்தன்மை பெற்ற மாந்தர்கட்கும் வேற்றுமை என்னை? ஒவ்வோர் உயிரும் அவை வேண்டியே தான் தான் இயங்கவும், எதிரவும் அறிந்திருக்கையில், அவற்றை மட்டும் அறிந்து கொள்ளுதலே மாந்தனின் வாழ்வுப் பயனாக இருக்குமானால், அம்மாந்தன் பால் அமைந்த மூளைப் பெருக்கத்திற்கும், உணர்வுப் பெருக்கத்திற்கும் என்ன பயன்? அவையின்றி யியங்கும் பிற புழுவிற்கும் பூச்சிகளுக்கும் கூட சுவை காண்டலே வாழ்வாகும் என்பதுண்மையின் இவன்றன் சிறப்புத்தான் என்னை? இவன சிறப்பு இவன் நுகர்ந்தால் போதுமென்றமையாமல், இவன் போலவே இயங்கும் மாந்தர்க்கும் பிற உயிர்கட்கும் ஈத்து மகிழ்தலே ஆகும் எனின், அவ் வீத்துமகிழ்தல் இவனின் கீழ்ப்பட்ட சிற்றுயிர்களிடத்தும் காணப்படுகின்ற தொன்றே ஆகையால், அஃது ஒன்றின் பொருட்டே இவன் சிறப்பது யாங்கன்?

பின், நாகரிக முதிர்வால் பொதுவாக உண்டலென்றமையாமல் நல்லன தேடி யுண்டலும், பொதுவாக உடுத்தல் என்றமையாமல் சிறந்தன நெய்துஉடுத்தலும், பொதுவாக உற்றலென்றமையாமல் பொருந்துவன தேடி உறுதலும், பொதுவாக உறங்குதலென்றமையாமல் மெத்தன நாடி உறங்குதலுமே சிறப்பென அமையாதோ எனின்; ஆகாதென்க. என்னை?

# அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு

தொடர் 7.

## முன்னுரை (தொடர்ச்சி)

குற்றுயிரும் சிற்றறிவும் வாய்க்கப்பெற்ற பல்லாயிரக் கணக்கான உயிர்களுள் மாந்த உயிரும் ஓர் உயிர் வகையாகும். அம் மாந்த உயிர் பிற உயிர்களைப் பார்க்கினும் சிறந்தும் செவ்விதாயும் இக்கால் விளங்குதல் போலவே தொடக்கக் காலத்தும் இவ்வாறே தோன்றியிருக்கும் என்று கருதுதற்கு அறிவியல் மட்டுமன்றி உணர்வியலும் இடம் தராது.–என்னை? அறிவியல் என்பதும் உணர்வியல் என்பதும் ஒன்றுபட்டனவாகாவோ எனின்; ஆகா. அறிவியல் என்பது மேலறிவாம் பருப்பொருள் உண்மை சாற்றும் இயல் என்றும், உணர்வியல் என்பது உள்ளறிவாம் நுண்பொருள் உண்மை சாற்றும் இயல் என்றும் விளங்கிக் கொள்க. அவ்வாறு தொடக்கக் காலத்து வேறுபட்டுத் தோன்றிப், பல்லூழிக் காலங்களாக மாறுபட்டு வரும் இம் மாந்த உயிர் பிற உயிர்களினும் உயர்ந்து விளங்குதல், அது தன்னைக் கொண்டு வந்த வழி முறைகளாலும், தான் கண்டு வந்த தெரிமுறைகளாலும், தான் மேன்மேலும் தன்னைச் செலுத்துவான் வேண்டித் தேர்ந்தெடுக்கும் அறிமுறைகளாலுமே என்க. இத்தகைய போக்கு நிலைகளுக்கான உற்றறிவும் உள்ளுணர்வும் தொடக்கக்காலத்திலேயே இம்மாந்த உயிர்கட்கிருந்தவோ, எனின்;




இருந்ததில்லை. பின் அவை கைவரப் பெற்றதற்குக் காலமே கருவியாக அமைந்ததோ எனின்; அதுவுமன்று. பின் அக் கருப்பொருள்தான் என்னையோ எனின், அவ்வுயிர்களின் மேனிலை வளர்ச்சிக்கான கருப்பொருள் அவ்வுயிர்களின் அடிநிலை அமைப்பே என்று அறிக. அத்தகைய அடிநிலை அமைப்பு மாந்த உயிர்போல் இயங்கும் எல்லா வகை உயிர்களுக்கும் ஒன்று போலவே அமைந்து கிடப்பதோ எனின்; ஆம் என்க. என்னை? உயிர்களின் அடிநிலையாந் தன்மை எல்லாப் படிநிலை உயிர்களினும் ஒன்றேயென்றும், அவற்றின் போகு நிலையே அவ்வவற்றின் உய்வு நிலைக்கும் உந்து நிலைக்கும் தக அமைகின்றது என்றும் அறிக. இனி, உயிர்களின் அடிநிலையாந் தன்மை ஒன்ருதல் போலவே, அவற்றின் முடிநிலையாந் தன்மையும் ஒன்ருதுமோ எனின்; அவ்வாறே என்க.

இனி, இவ்வாறு உயிர்களின் அடியும் முடியும் ஒத்து இடையிடைப்பட்டதே அவ்வவற்றின் வாழ்வாம் என்க.( இவ்விடத்து, இதுவரை உயிர்கள் என்று பேசப் பெற்றதும், இக்கால் பேசப் பெறுவதும் உயிர்கள் சார்ந்த இயக்க உடலங்களையே என்றும், உடலம் தவிர்ந்த உயிர் ஒன்று உளதாம் என்று எண்பிக்கப் பெறும் வரை, அதன் கொள்பொருளும் அதுவே என்றும் நினைவில் வைத்துக்கொள்க ) எனவே உயிர்களின் தோற்ற ஒடுக்கங்களாக அமைந்த அடிமுடிகளின் இடையுட்பட்ட வாழ்வு எந் நோக்கம் பற்றி அமைந்திருத்தல் வேண்டும் என ஆய்ந்தறிகின்ற நிலைக்குமுன், அஃது எப்படி அமைந்துள்ளது என்று அறிதல், தன்னறிவும், தன் முனைப்பும் கொண்ட உயிர்களின் போகு நிலைக்கு ஓர் இன்றியமையாமை அன்றோ? வாழ்வு என்று கூறின மட்டில் எல்லா வகை உயிர்களுக்கும் இயல்பாயமைந்த உண்ணல், உறுதல், உறங்கல் முதலிய செயல்களேயாம் என்று எல்லாரும் எளிதின் பொருள் உரைப்பர். இத்தகைய செயல்களே வாழ்வாகா. இவை வாழ்வு என்ற ஓர் இயக்கத்தினை நுகரும் ஆறே அன்றி, வாழ்வை அறிந்த தன்மை ஆகாது. என்னை; சுவையும் நலமும் கலந்த கனியொன்றினை – நாம் சுவைப்பதும், அதனைப் பற்றி அறிந்து கொள்வதும் வேறும் ஆதல்போல என்க வாழ்வைச் சுவைப்பதே வாழ்வின் நோக்க மாக இருப்பின், இவ்வுலகத்தின்கண் உறையும் பல்லாயிரங் கோடி நுண்ணுயிர்கட்கும், அவற்றிற்கெல்லாம் மேலாந்தன்மை பெற்ற மாந்தர்கட்கும் வேற்றுமை என்னை? ஒவ்வோர் உயிரும் அவை வேண்டியே தான் தான் இயங்கவும், எதிரவும் அறிந்திருக்கையில், அவற்றை மட்டும் அறிந்து கொள்ளுதலே மாந்தனின் வாழ்வுப் பயனாக இருக்குமானால், அம்மாந்தன் பால் அமைந்த மூளைப் பெருக்கத்திற்கும், உணர்வுப் பெருக்கத்திற்கும் என்ன பயன்? அவையின்றி யியங்கும் பிற புழுவிற்கும் பூச்சிகளுக்கும் கூட சுவை காண்டலே வாழ்வாகும் என்பதுண்மையின் இவன்றன் சிறப்புத்தான் என்னை? இவன சிறப்பு இவன் நுகர்ந்தால் போதுமென்றமையாமல், இவன் போலவே இயங்கும் மாந்தர்க்கும் பிற உயிர்கட்கும் ஈத்து மகிழ்தலே ஆகும் எனின், அவ் வீத்துமகிழ்தல் இவனின் கீழ்ப்பட்ட சிற்றுயிர்களிடத்தும் காணப்படுகின்ற தொன்றே ஆகையால், அஃது ஒன்றின் பொருட்டே இவன் சிறப்பது யாங்கன்?

பின், நாகரிக முதிர்வால் பொதுவாக உண்டலென்றமையாமல் நல்லன தேடி யுண்டலும், பொதுவாக உடுத்தல் என்றமையாமல் சிறந்தன நெய்துஉடுத்தலும், பொதுவாக உற்றலென்றமையாமல் பொருந்துவன தேடி உறுதலும், பொதுவாக உறங்குதலென்றமையாமல் மெத்தன நாடி உறங்குதலுமே சிறப்பென அமையாதோ எனின்; ஆகாதென்க. என்னை?

நல்லன தேடி யுண்டலாலும், சிறந்தனவாக்கி உடுத்தலாலும், பொருந்துவன தேடி உறுதலாலும், மெத்தன நாடி உறங்குத லாலும் வினையும் பயன்களில் வேறுபாடு காண்பதற்கில்லை யென் றறிக. சிற்றுயிர்களுள்ளும் கொழுவியன தேடி உண்ணும் உயிர் களும், தம் இனிதாந் தன்மைக்கு ஏற்றன தேடிப் பிணையும் உயிர்களும், இலை, தழை, பஞ்சு சார்ந்த மெத்தென் கூடுகளில் அடையும் உயிர்களும் உளவாதல் பற்றி அவையே சிறப்பா மென்றுகா? இவனின் கீழ்ப்பட்ட உயிர்கள்தம் மேனியின் தோலினை மறைக்க, இவன் உடுக்கும் உடையின் பயனையும் அழகையும் விட அவற்றிற்கு இயல்பாயமைந்த மென்மயிர்ப் போர்வையும் கண்டு நாணுக. இனி, இவ்வூனுடற் சிறப்பியல் களெல்லாம் கருதி இவன்றன்னைத் தருக்கிக் கொள்வானுயின், அச்சிற்றுயிர்களுள் இவனும் ஒன்று போலவே கருதப்படுவான் அன்றி, அவற்றினும் மேலோனுகக் கருதப்படான். பின் இம் மாந்த உயிர்க்குத்தான் அமைந்த – அமைய வேண்டிய தனிச் சிறப்பு யாதோ எனின்; கூறுவாம்.

சிறந்தது என்பது காலமும், இடமும், வினையும் – கடந்த தன்மையுடையது என்னை? முற்காலத்துச் சிறந்த வில்லும், வாளும் இக்காலத்துச் சிறந்தன அல்ல என்று கருதப்பெறுகின்ற மையால், அவை காலத்தால் சிறவாப் பொருள்களாம். பனிமிகுந்த இடத்துள் வாழும் மாந்தர் சிறப்பென்றுடுக்கும் கம்பள உடை, வெப்பந்தாக்கும் நிலநடுக்கோட்டில் வாழும் மாந்த ரான் சிறப்பில்லது என்று ஒதுக்கப்பெறுமாகலின், அஃது இடத் தால் சிறவாப் பொருளாம் மலையேறித் தேன் எடுக்கும் ஒருவ னின் வினையாற்றல் அலையேறி மீன் மடுக்கும் ஒருவனின் வினைக்குப் பயன்படாதாகலின் அது வினையால் சிறவாப் பொரு ளாம். இனி, இத்தகைய கால, இட, வினை மழுக்க மில்லாத சிறப்பையே சிறப்பாக அறிவுடைமையும் உணர்வுடைமையும் கருதுமாகலின் அச் சிறப்பு என்ன வெனக் கண்டறிதல் வேண் டும். அச்சிறந்த ஒன்றினை இன்னதென்றறிவுறுத்துவதும், அச் சிறந்த ஒன்றினுக்கு வழி காட்டுவதும், அச்சிறந்த ஒன்றிஞல் பயன் விளைவித்தலுமே இந்நூற்குப் பயனும் என்றறிக இனி, அவ்வாறு சிறந்ததை 'ஒன்று' என்று குறிப்பானேன்; 'பல' என்று குறித்தல் ஆகாதோ எனின்; அதற்கும் காரணம் காட்டுவோம்.

உயிர்களெல்லாம் அடிமுடி யொன்றித் தோன்றியவென்று முன்னர் கூறப்பெற்றது. அவ்வடியும், முடியும், தோற்றமும், ஒடுக்கமுமே என்றும் பன்னப் பெற்றது. அத் தோற்றமும் ஒடுக்கமும் ஒன்றித் தோன்றும் அவ்வுயிர்கட்கு இன்பும் துன்பும் ஒன்றே. இன்பு என்பது அவ்வுயிர்களின் மேலாந்தன்மைக்கு விரிவாகவும், துன்பு என்பது அவ்வுயிர்களின் கீழாந்தன்மைக்கு

ஒடுக்கமாகவும் கொள்ளப் பெறும் என்னை? ஓர் உயிர் இன்புற இன்புற அதன் படிநிலைகளில் வளர்ந்து போகும். ஓர் உயிர் துன்புறத் துன்புற அதன் படிநிலைகளில் தாழ்ந்து போகும். ஓர் இன்பம் எய்திய பின்னர் பிறிதோர் இன்பத்தின் தோற்றத்திற்கு அவ்வுயிர் உந்தித் தள்ளப் பெறுகின்றது. ஓர் உயிர் துன்பம் எய்துங்கால் அஃது உள்ளுணர்வாலும் அறிவாலும் ஒடுக்கப் பெற்று, அதன் அடி நிலையில் உந்திக் கீழ்நோக்கி வீழ்த்தப் பெறுகின்றது என்னை? நீரில் மிதப்பான் ஒருவன் நீந்துவதே தனக்கு இன்பமெனக் கருதி உந்துவானாகில் நீரின்மேல் நிற்றல் மட்டுமன்றி முன்னேறி விரைவதும், நீந்துவதே தனக்குத் துன்ப மெனக் கொண்டு உந்தாமல் கிடப்பானாகில், நீரின் மேற்பரப்பில் தாழ்ந்து போதல் மட்டுமன்றி, மூழ்கி யழிந்துபோவதும் போலாம் என்க. உயிர்களுக்கு இன்பே முடியும், துன்பே அடியுமாகக் கருதப்பெறும். ஆகவின், உயிர்கள் தம் முயற்சியில் இன்பு நோக்கிப் போதலே முடிநோக்கிப் போதல் என்றும், துன்பு நோக்கிப் போதலே அடிநோக்கித் தாழ்தல் என்றும் ஆகும். இனி, இவ்வின்பும் துன்பும் என்ன என்பதும், அவையாகிய இரண்டாந்தன்மை உயிர்களுக்கு ஏன் வருதல் வேண்டும் என் பதும், அவற்றால் அவ்வுயிர்கள் பெறும்பயன் யாதாம் என்பதும், இவற்றுள் நாம் கொள்ள வேண்டுவதென்பது எஃதென்பதும் நூலுள் விளக்கப்பெறும். இனி இவ்விரண்டுக்கும் பொதுவா யமைந்த வாழ்வில், சிறப்பெனக் கருதப்பெறுவது ஒன்றே என்று கூறியது ஏனென விளக்குவோம்.

இன்பும் துன்புமே உயிர்களின் விளக்கமும் ஒடுக்கமுமாகும் என்று குறித்தோம். அவ்வின்பு துன்புள் சிறந்தது எதுவோ எனின், இரண்டும் பொருந்திய, இரண்டும் அற்ற, இரண்டுக்கும் வேறுபாடு உணரப்பெறாத ஒரு நிலையே ஆம் என்க. என்னை? இரண்டு விழிகளும் ஒரு பொருளையே நோக்கி அசைவதும், நிற்பதும் ஆக இயங்குதல்போல், இவ்விருதன்மைகளும் சிறந்த ஒரு பொருளையே நோக்கி அசைவதும் நிற்பதுமாக இயங்கு கின்றன. இவ்விரண்டும் பொருந்தி ஒன்றினுள் ஒன்று ஒன்றி வேறுபாடற்ற நிலையில் நாம் உணரப்பெறும் பொருள், இரு விழிக்குப் புலனாகும் ஒரு தோற்றம் போல 'ஒன்றே' அல்லாமல் இரண்டாகவோ பலவாகவோ இருத்தல் இயலாது. அவ்வா றிருப்பின் உயிர்களின் இயக்கமும் பலவாறாகச் சிதைக்கப் பெற்று, இயற்கையிலும் ஓர் ஒழுங்கின்றி அமையும். ஒரு வட் டத்தை மிகவும் சிறியதாக-ஒரு புள்ளி அளவாக வரைந்தாலும், மிகவும் பெரியதாக-வான அளவாக வரைந்தாலும் அதன் விளிம்பின் வளைவு ஒரு கோணத்தை நோக்கியே ஓடுவதுபோல் இன்பும் துன்பும் இடைப்பட்ட வாழ்க்கை ஒரு கோணத்தை நோக்கியே வரையப்பெற்றிருத்தல் வேண்டும். அக் கோணத் தையே நோக்கி வரையப்பெற்ற அவ் வாழ்க்கைக் கோட்டின்

உண்மையும் ஒன்றே! போக்கும் ஒன்றே! பல்லாயிரங் கோடி உயிர்களும் தம்தம் தோற்ற, உருவ, ஊர்தல் நிலைகளில் வேறுபட்டிருப்பினும் அவற்றின் இன்புந் துன்பும் ஒன்றே; நோக்கமும் ஒன்றே அவை எய்தப் போகும் முடிவின் சிறப்பும் ஒன்றே என்றறிக அச் சிறப்பு நோக்கியே அவை இயங்குதல் வேண்டும். இனி, அச் சிறப்பு நோக்கி இயங்கிக் கொண்டிருக்கும் அவ்வுயிர்களுக்கு அச்சிறப்புப் பற்றியே விளக்கிக் கூறிக்கொண்டிருப்பது மிகையாகாதோ எனின்; ஆகாது. வானை அண்ணாந்து பார்த்துக்கொண்டு நடப்பானுக்கு, வழியிடைப்பட்ட குழியினை முன்னெதிர்ந்து வருவான் அறிவிப்பது போல், அச்சிறப்பை நோக்கியே உயிர்கள் போவதுண்மையெனினும் அவர்தம் போக்கிடைப்பட்ட சுழிவு நெளிவுகளைச் சுட்டிக்காட்டி, அவர்தம் போக்கினை மேலும் விரைந்தும் சிறந்தும் இயங்கச் செய்தல் அவ்வழிகளைப் பற்றி முன்னறிந்தார் கடனாகும்.

கண்களால் பார்த்துப் போதல் மட்டுமன்றிச் செவிகளால் கேட்டறிந்து போதலும் சிறப்பன்றோ? தொலைவில் வரும் விலங்கின் முழக்கமறியாமல், கட்புலன் ஒன்றே துணையாகச் செல்லும் செவிடன் விரைவில் அவ்விலங்கிற் கெதிர்ப்பட்டு, அதனால் துன்பமெய்துதல் இயல்பேயன்றோ? கட்பார்வையினும் செவிப் பார்வை நீடுமன்றோ? இனிச் செவிப் பார்வையினும், மூக்கால் அறியும் மோப்பப் பார்வை நீடுமன்றோ? மோப்பத்தாற் பழக்குண்ட மாந்தரும் நாய் முதலிய சிற்றுயிர்களும் தாம் விழைந்தவை நோக்கி எளிதே முன்னேக்கிப் போதல் நாமறிந்த ஒன்றன்றோ? இனி ஐம்புலன்களாலும் உணரப்பெறாத நிலையில் உள்ள செய்திகளையும், உண்மைகளையும் அறிவான் உணர்ந்து அதன்வழி நடந்து சிறப்பதும் நாம் அறிந்த ஒன்றே! இனி, அறிவானும் அறியப் பெறாத உண்மைகளை உணர்வால் அறிந்து உரைக்கவல்ல மெய்யுணர்வினர் பலர்தம் ஆற்றலைக் கேட்டும், கண்டும் இருக்கின்றமா? அல்லமா? ஆகலின் நாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் உண்மைகளுக்கு மேலாக, தனியென் அறிவு சாற்றும் உண்மைகளும், அதனினும் நுண்ணியதான உணர்வு (ஈண்டு உணர்வு என்பது உடம்பின் அறிதலான உற்றறிதல் அன்று.) சாற்றும் உண்மைகளும் எவையெவை என்று உய்த்தறிதல், இருள்நிறை வாழ்விற்கும் மருள்நிறை போக்கிற்கும் துணையாகும் என்று கருதியே இந் நூலை எழுதப் புகுந்தேன்.

இந்நூல் அளவில் விரிந்தும், தன்மையில் ஆழ்ந்தும், நிலையில் தடிந்தும் இருப்பதால், அறிவு வேட்கையும், உணர்வு முனைப்பும், அறிதற் பொறுமையும் உடையார்க்கே பயனளிகக் வல்லதாகும். இதிற் கூறப்பெற்றுள்ள உண்மைகள் சிறிய அள

வினவாகவும். பரந்துபட்ட எல்லா அறிவினையும் உள்ளடக்கி யனவாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அவை உண்மையே! என்றும் உண்மையே! என் கையிலுள்ள விளக்கின் சுடர், வானத்துக் கதிரவனின் சுடரைப் பார்க்கினும் சிறியதாகவும் ஒளி குன்றியதாகவும் இருக்கலாம். ஆனால் இச்சுடர் அவ்வானத்தின் விரிந்தகன்று புடை நிரம்பிய சுடரின் உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டே! அப் பேரகன்ற சுடரின் தன்மைகளும் இக் கையகச் சிறு சுடரின் தன்மைகள் போல்வனவே! விரிவின்றி அளவிற் சுருங்கிய இச்சிறு நூல், விரிந்து நிரம்பிய பெருநூலின் ஒரு பகுதியாகும். எனினும் இப்பகுதியைக் கூட முழுமை நிரம்பியதாக—ஓரளவு நிறைவு பெற்றதாக ஆக்கி விடத் துடிக்கின்றேன். புல்லின் நுனித்தலை பொருந்திய நுண்சிறு பனித்துளி போல்வதாயினும், வானத்தின் விரிவெல்லாம் இதில் காட்டிவிடல் வேண்டுமென்று கருதி இதனைத் தொடங்கியுள்ளேன். நிறைவற்றவர்க்கும், நிறைவுள்ளவர்க்கும் நிறைவாக இந்நூல்தோன்ற வேண்டுமென்பது என்கருத்து. அறிந்தார்க்கும் அறியாதார்க்கும் பயனுள்ளதாக இதுவிளங்க வேண்டுமென்பது என் ஆவல். ஒன்றிலிருந்து கோடிவரை நான் எண்ணி முடிக்காமல் பத்து வரையே எண்ணி முடித்திருக்கலாம். ஆனால் நான் எண்ணிய வரை பிழையில்லாமல் இருக்கின்றது என்று என்னளவில் உறுதி கொண்டே இதனை எழுதியுள்ளேன். மாந்தர்க்குப் புரியாத மறைநூல் உண்மைகள் இதில் இருப்பதாக நான் கூற முன்வரவில்லை. எளிய மாந்தர்க்கும் புரிகின்ற அரிய உண்மைகள் இதில் உண்டு. மொழி சிறிது கடினமாகப் படலாம். ஆனால் மொழியப்பெற வேண்டிய கருத்து நோக்கிச்சொற்களும் சிறிதே சேய்மையில் உள்ளனவாக இருக்கின்றன. ஆனால் அம் முயற்சி தானுமின்றி இத்தகைய அரிய உண்மைகளை உணர்த்துதலும் உணர்ந்து கொள்ளுதலும் இயலா. அந்நிலையும் நிலைத்தலை உண்டாக்காது. குறிப்பாக இதனுள், எல்லா வகை ஏற்பு மறுப்புகளுக்கும் காரண கரும முறைகளால் விளக்கம் கூற முற்பட்டுள்ளேன். நூலை விரும்பிப் படிப்பார் அவற்றை மிகவும் பொறுமையோடு பன்முறை படிக்க வேண்டிக் கொள்கின்றேன். இடையிடையில் வரும் ஐயப்பாடுகளைப் படிப்பார் ஒரு தனிச்சுவடியில் குறித்துக்கொண்டே வர வேண்டுகின்றேன் அவர் குறித்த எல்லாவற்றுக்கும் நூல் முடிவதற்குள் கட்டாயம் விடை கிடைக்கும். அவ்வாறு விடை கிடைக்காத ஐயப்பாடுகளை நூல் முடிந்தவுடன் எழுதி விடுப்பின், அவற்றைத் தொகுத்து அவற்றிற்கான விளக்கங்களை நூலின் பின்னிணைப்பாகக் கூறவிருக்கின்றேன்.

சோலையுட் புகுவார் பலருள், மலர் நாடிப் போவார் சிலர்; நிழல் தேடி அயர்வார் சிலர்; நீர் நண்ணி யருந்துவார் சிலர்; கனி விழைந்துண்பார் சிலர்; காட்சிக் கலந்து மகிழ்வார் சிலர்;

# ஒளியின் விரைவை அளந்தவர்.

ஆங்கிலத்தில்: ROBERT STROTHER.

தமிழில்: செம்பியன்.

(ஆல்பர்ட்டு மைக்கல்சன் (Albert Michelson) என்பாரின் மிகப் பெரிய ஆய்வுகள் சிலவற்றின் முடிவுகள் பொதுவான அறிவியலுக்கு அறைகூவல் விடுப்பன. ஆனால் அவை, ஐன்சுடீனின் (Einstein) சார்புக் கொள்கைக்கான (Theory of Relativity) வாயிற் கதவுகளைத் திறந்து வைத்ததினால் அணுவாற்றற்கால மக்களைக் காணும் வாய்ப்பைத் தோற்றுவித்தன.)

ஒளியானது பாய்ந்து செல்லும் விரைவு எவ்வளவு? துல்லியமாக விசும்பின் வழிச் செல்கின்ற அதனுடைய விரைவுக்கு ஏதேனும் ஊறு நேர்கின்றதா? இவ்வினாக்கள்தாம் ஆல்பர்ட்டு மைக்கல்சனை ஓயாது குடைந்து கொண்டிருந்தன. இவற்றிற்கு விடைகாணும் முயற்சியில்தான் அவர் இயல்பியற்கான (Physics) நோபல் பரிசைப் (Nobel Prize) பெற்றார். இன்றைய அணு ஊழிக் காலத்தைத் தொடங்குவதற்கான அளவீட்டு வழி முறைகளைச் செப்பனிட்டார்.

போலந்து நாட்டினின்றும் குடியேறிய வணிகரின் திருமகனும் நிவாடா (Nevada) நகரின் தனித்திறம் வாய்ந்த இளைஞரும், அறிவியலில் முனைப்புடையவருமான, மைக்கல்சன் 1873-ஆம் ஆண்டு, அன்னபொலிசு (Annapolis) கடற்படைக் கலைக்கழகத்தில் (Naval Academy) கல்விப்பட்டம் பெற்றார். அவர் சிறந்த வாள் வீச்சுக்காரராயும், 'டென்னிசு' விளையாட்டுக் காரராயும், குத்துச் சண்டையில் சிறந்தவராயும் விளங்கினார் கப்பலில் நடுத்தர அலுவலராகப் பணியாற்றிய அவர், ஒளியியல், ஒலியியல், ஓவியம் இவற்றில் முதன்மையாகவும், கணக்கியலில் இரண்டாவதாகவும், கப்பலோட்டும் கலையில் 29 பெயர்களில் 25-ஆவது ஆகவும் தேறினார். இரண்டாண்டுகள் கடல் தொழிலில் சுற்றிய பின் கலைக்கழகத்திற்குக் கற்பிப்போராக (Instructor) மீண்டும் அழைக்கப் பெற்றார். ஆங்கு, அவர் தமது கடைசி ஆண்டின் இயல்பியற்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கருத்து வேண்டித் துய்ப்பார் சிலர். இவ்வாறு பலதிறப்பட்டாரும் ஒருங்கிணைந்து அறிய வேண்டிய உண்மைகளையும் இதில் கூறிவிட முனைந்திருக்கின்றேன். உண்மைக் காரணம் பற்றி உண்மையையே விளக்க முற்பட்டுள்ளேன். அவ்வுண்மையெனும் பொருளே என்பால் துணை நிற்குமாக. இனி, நூலுட் புகுவோம்.

(தொடரும்.)

படிப்பின் பொழுது அடிப்படையான அறிவியற் சிக்கல் ஒன்றை அவிழ்ப்பதில் ஈடுபட்டார். ஒளியின் விரைவாற்றலை அளவிடு தலே அது. அது பேரார்வத்தினைத் தூண்டுவதாகவும், கவர்ச்சி யுடையதாயும், மிகக் கடினமான திட்டமாகவும் இருந்தது. அஃது அறிவியல் வரலாற்றில் புகழ்சான்ற ஆய்வுகளின் ஒன்றாக அமைந்தது.

நான்கு துணைக் கோள்கள்: ஓலசு உரோமர் (Olaus Roemer) என்பவர் 200 ஆண்டுகட்கு முன்னர் ஒளியின் விரைவை மேலோட்டமாக அளந்தார் என்பதை நூல்கள் அறி விக்கின்றன. தென்மார்க்கு நாட்டு வான நூலறிஞர், மிக ஒளியுள்ள வியாழனின் (Jupiter) துணைக்கோள்கள் (Moo ns) நான்கைப் பற்றியும் அறிய முயன்றார் விரைவாக நகரும் அத் துணைக்கோள்கள் மிகப் பெரிய அக்கோளுக்குப் பின்புறம் செல்லும் ஒவ்வொரு முறையும் ஒளி மறைப்பைப் (Eclipse) பெற்றன. அவற்றின் ஒளி மறைப்புகளும், உடனுக்குடன் நிகழ் கின்ற ஒளியுள்ள மறு தோற்றங்களும் ஒரு நொடிப் பொழுதின் பகுதிதானும் பிழையின்றிக் கணக்கிடப் பெற்றன. உரோமர் 1676-இல் வியாழனின் துணைக்கோள் ஒன்றின் ஒளிமறைப் பின் கால அளவைக் கணக்கிட்டார். அது, தாய்க் கோளை 42 மணி, 27 நிமையம் 30 நொடிப்பொழுதில் ஒரு சுற்றுமேனி சுற்றியதை அறிந்தார். ஆனால் இரவுகள் செல்லச் செல்ல அடுத்தடுத்துக் காணப் பெற்ற ஒளி மறைப்புகள் ஒன்றிற் கொன்று காலத்தாழ்த்தத்துடன் நிகழ்ந்தன. ஆறுமாத காலத் திற்கு உற்று நோக்கி யறிந்த பிறகு உரோமர், அச்சிறிய துணைக் கோளானது, 22 நிமையங்கள் காலத் தாழ்த்தத்துடன் செல்லத் தொடங்கியதாக முடிவு செய்தார். (உண்மையில் அவ ருடைய மதிப்பீடானது 5 நிமையங்கள் மிகையாக இருந்தது).

அஃதெப்படி இருக்க முடியும்? இங்குத்தான் மிகச் சிறப் பான உண்மையொன்று தெளிவாயிற்று. உரோமர் ஆயத் தொடங்கிய பொழுது வியாழனும், இந் நிலவுலகும் ஒன்றுக் கொன்று மிக நெருங்கிய தொலைவில் இருந்தன. ஆனால் உலகு வியாழனைவிட விரைவாக நகர்ந்து செல்வதாலும், அதன் பாதை (orbit) குறுகியதாகையாலும், ஆறு மாத காலத்தில் கதிரவனின் மறுபுறத்துக்குச் சுழன்று சென்றுவிட்டது. இவ்வாறு அது நாளொன்றுக்குப் பத்து இலக்கம் கற்களுக்கு மிகையான விரைவில் வியாழனிடமிருந்து விலகி வந்துவிட்டது.

உரோமர் ஓர் எண்ணற்கியலாத எண்ணத்தினால் அதிர்ச்சி யுற்றார். அரிசுடாட்டில் (Aristotle) காலத்திலிருந்தே ஒளிக்குக் கால அளவு இல்லை என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது உரோமர், ஒளியானது ஒரு குறிப்பிட்ட விரைவில் பரவுகின்றது

என்று மட்டுமன்றி, அஃதை அளவிடலும் கூடும் என்றும் உணர்ந்தார். வியாழனுடைய சிறிய துணைக் கோளிலிருந்து வரும் ஒளியானது அவருடைய தொலை நோக்காடியை அடைவதற்கு, தொடக்கத்தில் அவர் உற்று நோக்கிய பொழுதிருந்த தொலைவைவிட 1860 இலக்கம் கற்களுடைய மிகப் பெருந் தொலைவைக் கடக்க வேண்டியிருந்தது. இஃது அந்த ஒளி மறைப்புகளில், நேர்ந்த காலத்தாழ்வின் காரணத்தைத் தெளிவாக்கிற்று. அவர் செய்ய வேண்டியிருந்ததெல்லாம் அத் துணைக் கோளின் காலத் தாழ்த்த அளவை நிலவுலகும் வியாழனும் விலகியமையால் ஏற்பட்ட புதிய தொலைவால் வகுத்துக் காண்பதுதான். அதன் விடைதான் ஒளியின் விரைவாகும். அவர் கண்ட விடை தோராயமாக ஒரு நொடிக்கு 1,38,000 கற்களாகும். (இஃது உண்மையில் ஒரு நொடிக்கு 48,000 கற்கள், அல்லது 26 விழுக்காடு துல்லியக் குறைவான கணக்கேயாகும்.)

**கண்ணாடி ஒளி மின்னி:-** அறிவியல் விரிவடைய அடைய, அளவைகள் தேவைப்பட்டன. ஆகவே 1877-ஆம் ஆண்டு 'நவம்பர்' மாதத்தில் இளைஞர் மைக்கல்சன் தம் முதல் ஆய்வைத் தொடங்கினர். சில தாலர் (Dollars) செலவிலேயே மிக மிக நுண்ணமைப்புடையதும், எளியதும் ஆகிய கருவி ஒன்றை அமைத்தார். அது சிறப்பாக ஒரு விளக்கும், ஒளியைச் சுருக்கும் வில்லையையும் (Lens) 500 அடி இடைவெளிவிட்டு அமைந்த இரண்டு கண்ணாடிகளையும் கொண்டது. ஒரு கண்ணாடியானது பொருத்தப்பெற்றும், மற்றொன்று ஒரு செங்குத்தான அச்சில் ஒரு நொடியில் 130 முறை சுழலும்படியும் அமைக்கப் பெற்றிருக்கும். அவர் அமைத்த ஆய்கருவி (Apparatus) யானது இதற்கு முன்பே பிரஞ்சு இயல் நூல் வல்லுநர் சீன் ஃபகல்டு (Jean Foucault) பயன்படுத்திய ஒன்றினின்றும் செய்யப்பெற்ற அமைப்பாகும். சுழற்றப் பெறுகின்ற கண்ணாடிமீது செலுத்தப்பெறும் ஒளி, வில்லையின் வழியாக எதிரொளிர்ந்து நிலையாகப் பொருத்தப் பெற்ற கண்ணாடிமீது விழுந்து, மீண்டும் எதிரொளிர்ந்து, சுழலுகின்ற கண்ணாடிக்கே வருகின்றது. மின்னொளியானது ஒரு சுற்றுப் பயணத்தை முடிப்பதற்குள், சுற்றுகின்ற கண்ணாடியானது சற்று நகர்ந்து ஒளிச் சிதறலை இடம் பெயர்ந்து ஒரு பக்கத்தில் விழச் செய்கிறது. ஒளியின் இந்த இடப் பெயர்ச்சியின் அளவானது, நுண் கூறுகளாகப் பகுக்கப்பெற்ற அளவுக் கருவியில் ஒரு கோணமாக அளவிடப் பெறுகின்றது. இந்த எண், அளவிடப்பெற்ற ஒளிப் பாதையின் நீளம், கண்ணாடிச் சுழற்சியின் விரைவு இவை யாவும் முன்னையினும் மிக மிகத் துல்லியமாக ஒளியின் விரைவைக் கணக்கிடத் துணை நின்றன.

(தொடர்ச்சி 69-ஆம் பக்கம்)

# வையாபுரிகள்!

மா. எழில்முதல்வன், எம். ஏ.

**வையாபுரிகள் யார்?:** வாள் போன்ற பகைவருக்குக்கூட அஞ்சவேண்டியதில்லை; கேள்போல நம்மோடு தொடர்பு கொண்டிருக்கும் பகைவருக்கே மிகுதியும் அஞ்சல் வேண்டும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். ஏனெனில் முன்னவர்கள் உயிர்நிலையில் நேரடியாகப் பாயும் கணையினை ஒத்தவர்கள்; பின்னவர்களோ துயிலும் காலத்துப் புறத்திலே குத்தும் கத்தியைப் போன்றவர்கள். இத்த இரண்டாம் வகையான மாந்தர் குமுகாயத்தில் நிறைந்துவிட்டால் இனம் மாணு ஏதமே ஈண்டும் என்க. செப்பின் புணர்ச்சிபோல் நம்மோடு கூடி இருந்தாலும் அவர்கள் வினை வேறாகவும், சொல் வேறாகவும் வாழ்வதால் அவர்களால் வரும் கேடுகளே மிகுதி. இத்தகைய வையாபுரிகளே இன்று தமிழ் உலகில் பெருகிவிட்டனர். மாற்றார்க்குத் தமிழைக் காட்டிக்கொடுப்போன் மட்டுமே 'வையாபுரி' அல்லன். காட்டிக் கொடுக்கும் கயமை இல்லாவிட்டாலும், நெருக்கடி நேரும் நேரத்தில் நமக்கென்ன என்று மடிந்து கிடப்போனும், எதை எந்த நேரத்தில் நெஞ்சில் உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும் செய்ய மடிதற்று முன்வரல் வேண்டுமோ, அதை அந்த நேரத்தில் செய்யாமல் வாளா அமைவோனும், ஆளுகின்ற பதவியும், ஆள்வோரின் உதவியும் எங்கே பறிபோய் விடுமோ என்று அல்லாந்து கலங்கிக் கோழையாக வாழ்வோனும், ஏறிவந்த ஏணியையே எட்டி உதைப்பதுபோல, தமிழால் வளர்ந்த பிறகு, தன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் கரணியமாக இருந்த தமிழைப்பற்றிக் கவலையுறாமல் இருப்போனும், வையாபுரியே ஆவன். வல்லாங்கு வாழ்ந்த தமிழர் குமுகாயம் இன்று வாழ்விழந்து நிற்பதற்கு முதற் காரணம் இத்தகைய வையாபுரிகளே என்பது தேற்றம். முன்னே இருந்த வையாபுரி எதைச் செய்யக்கூடாதோ அதைச்செய்து பழியேற்றார்; இந்நாள் வையாபுரிகளோ எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் கிடப்பதால் பழி பெறுகிறார்கள். அவருக்கும் இவர்களுக்கும் இதுதான் வேறுபாடு.

பொய்மையே பேசிப் பொழுதினைச் சுருக்கும் அரசியல் வாணர்கள் ஒரு பால்; முறை செய்து காவாத அரசு ஒருபால்; மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் அற்று, இருட்டறைக்குள் கிடக்கும் சிதடனைப்போன்ற மக்கள் ஒருபால். இத்தகையோரின் நடுவேதான் தமிழ்த்தாய் தன் சீரிளமைத் திறம் சிதைந்து போகாமல் காத்துக் கொள்ள வேண்டிய அவல நிலையில் இருக்கிறாள் தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்; தமிழ் வீழ்ந்தால் தமிழனும் வீழ்வான். இது மறுக்க முடியாத உண்மை. ஆதலின்

காலத்தால் மூத்த தமிழைக் கட்டிக் காக்கும் பொறுப்பு நமக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. மொழியைக் காக்கும் முதற்பணியில் ஏனையோருக்கு இல்லாத பொறுப்பு அம் மொழிப் புலவர்கட்கே உண்டு. எனவே தமிழைக் காக்கும் கடன் தமிழால் வளர்ந்த புலவர்கட்கும்–பேராசிரியர்கட்குமே–மிகுதி ஆகும். ஆனால் இற்றை நிலை என்ன? மொழித் துறையில் வையாபுரிகளே பெருகியுள்ளனர். "தன் பெண்டு தன் பிள்ளை, சோறு, வீடு, வருவாய்' இவையுண்டு, தானுண்டென்றும் "சின்னதொரு கடுகைப்போல்" உள்ளம் கொண்ட தன்னல முனைவர்களே நிறைந்துள்ளனர். இந்நிலையை உன்ன உன்ன உள்ளம் குமுறு கிறது! உள்ளின் உள்ளம் வேகும் இந்த நிலை காண்புழி இமை தீய்ப்பன்ன கண்ணீரே விழிகளில் பெருகுகிறது!

**நம்மாழ்வார் உள்ளம்:** நெஞ்சத்து அவலம் இலராக வாழ்வது, தனி வாழ்க்கைக்குப் பொருந்தி வரும் உண்மையாக இருக்கலாம். பொது வாழ்வில் அதனைக் கடைப்பிடித்து எதைப் பற்றியுமே கவலைப்படாமல் வாழ்வது தவறாகும். எவருடைய பகைமைக்கும் ஆளாதல் கூடாது; நெடுநுகத்துப் பகல்போல நடுநின்ற நெஞ்சோடேயே வாழ்ந்துவிடல் வேண்டும் என்பதும் நல்ல எண்ணமே. அதை யாரும் மறுத்தல் முடியாது. எல்லாருக்கும் நல்லவராக நடத்தல் வேண்டும் என்பது உயர்ந்த எண்ணமாக இருந்தாலும், அதில் இடர்ப்பாடு உண்டு. சொந்த உரிமை பறிபோகும்பொழுது நல்லவராக வாழல்வேண்டும் என்பதற்காக விட்டுக்கொடுத்து வாழக்கூடாது; பகைமை வருமே என்பதற்காகப் 'போவது போகட்டும்' என்று அமைதல்கூடாது. பொதுவாழ்வில் நமக்குரிய பங்கை நாம் செலுத்தியாகவேண்டும் என்கிற கடமை ஏற்படுகிற பொழுது, நெஞ்சிற்பட்ட உண்மையைத் துணிந்து கூறல்வேண்டும். இதுபோன்ற நிலையில், சிலரது நட்பை நாமாகவே விழைந்து ஏற்றுக் கொள்வதுபோல, சிலருடைய பகைமையையும் கூடத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கு நடுங்காத நெஞ்சு தேவை. நம்மாழ்வார் என்ற புலவர் "சொன்னால் விரோதம் இது; ஆயினும் சொல்லுவேன் கேண்மினோ" என்று திருவாய் மொழியில் பாடுகிறார். நம்மாழ்வாரின் இத்தகு துணிவுள்ளம் "தமிழால் வளர்ந்தவர்" கட்கும் தேவை. எஃது எதற்கோ அஞ்சித் தமிழைப் பற்றிக் கவலைப்படாமல் இவர்கள் வாழ்ந்தார்களேயானால், உரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த வேளை, இசை மீட்டிக் கொண்டிருந்த நீரோ மன்னனைப்போல் இவர்களும் பெரும் பழிக்கு ஆளாவார்கள்.

**விலாங்குத் தன்மை:** பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டுகின்ற ஒன்றை 'விலாங்கு' என்று குறிப்பிடுவார்கள். இந்த விலாங்குத் தன்மை 'தமிழால் வளர்ந்தவர்'

களிடம் மிகுதியாகக் காணப்படுவது வருந்துதற்குரியதாகும். தமிழுக்குத் தாங்களே அதிகாரிகள் என்று நாட்டார் நம்பும் வகையில் எழுதியும் பேசியும்வரும் இவர்கள், நெருக்கடி நேரங்களில் அடித்துவைத்த கற்படிமம் ஆகிவிடுகின்றனர். மேடை கிடைக்குங்கால் நாக்கடிப்பாக வாய்ப்பறைகொட்டும் இவர்கள், உரிமை பறிபோகும் நேரத்தில் ஊமையர்களாக மாறுகின்றனர். ஆண்டுகொரு நூலேனும் அச்சேற்றிவிடல் வேண்டும் என்று துடிப்போடு எழுதும் இத்தகையார், எழுத வேண்டிய நேரத்தில் ஏதுமே தெரியாதவர்கள்போல அடங்கி விடுகின்றனர். ஏன் இந்த நிலை? ''ஈட்டியிருக்கும் புகழும் பணமும் எப்படிக் கிடைத்தன? வீதிக்கு வீதிக் கட்டிப்போட்டுக் குடிக் கூலிக்கு விட்டிருக்கிருேமே அந்த வீடுகள் எப்படிக் கிட்டின? நாம் பெற்றிருக்கிற ஏந்துகளும், வாய்ப்பும் எதன் மூலம் கிடைத்தன?'' என்று 'தமிழால் வளர்ந்தவர்கள்' எண்ணிப்பார்க்க மறுக்கின்றனர். தமிழுக்குப் பாடுபடுவதாகவும் காட்டிக் கொள்ளல் வேண்டும்; அதே நேரத்தில் மாற்றார்களிடத்தும் 'நல்ல பெயர்' வாங்கிவிடவும் வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடத்தில் ஓங்கியிருப்பதைப் பார்க்கிருேம். பயன் கருதிக் கொடை கொடுப்பாரை யாரோ ஒரு புலவர் 'அறவிலை வாணிகர்கள்'என்று கூறியதைப் போல நாமும் இப் புலவர்களை 'அறிவு விலை வாணிகர்கள்' என்று குறிப்பிடலாம். தூண்டில் வேட்டுவனுக்கு மிதவைமீதே பார்வை இருப்பதுபோல இவர்களுக்குப் பொருளிலும் புகழிலுமே 'கண்'; தமிழ்மீது அன்று. ஆகவே இத்தகைய விலாங்கு மனப்பான்மை கொண்ட புதிய வையாபுரிகளால் தமிழுக்கு விளைவது கேடே அன்றி ஆக்கம் அன்று என்க.

நடந்து காட்டல் வேண்டும்: 'தமிழால் வளர்ந்தவர்கள்' பிறருக்கு அறிவுரை கூறுவதிலேயே நாட்டம் உடையவர்களாக இருக்கிருர்கள். 'இப்படிச் செய்தல் வேண்டும்; இப்படி வாழல் வேண்டும்' என்று அறிவுரை கூறிவிட்டால் மட்டும் போதுமா? இறப்ப இழிந்த தற்குறியும் கூடப் பிறருக்கு அறிவுரை கூறத் தான் விரும்புகிருன்! இன்னும் சரியாகச் சொல்லப்போனுல் எப்பொழுதும் பிறருக்கு அறிவுரைகள் கூறிக்கொண்டே திரிதல் வேண்டும் என்ற துடிப்புடையவர்களில் பலர் அங்ஙனம் செய்வதற்குத் தகுதி இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆகவே மாந்தன் ஒருவனின் பெருமையும், உயர்வும் அவன் நல்ல கருத்துகளை எண்பொருளவாகச் சொல்கிருன் என்பதிலே மட்டும் அமைந்து விடுவதில்லை. கொள்கை அளவிலே மட்டுமின்றி நடைமுறை வாழ்விலும் எடுத்துக்காட்டாக விளங்குபவனே பிறரால் பின்பற்றப்படத் தக்கவன். காந்தியடிகள், விவேகானந்தர் முதலியோர் உலகத்தார் உள்ளத்தில் நிலையாக வாழ்வதற்கு இதுதான் காரணம். தான் மட்டும் ஏதுமே செய்யாமல், பிறருக்காக விதிகளை வகுத்துக் கூறிக் கொண்டிருப்ப

வன் ஒருவனையில் ஏமாற்றுக்காரனேயாவன். தமிழால் உயர்ந்தவர்கள்' 'தாங்கள் வையாபுரிகள் அல்லர்' என்று மக்கள் மன்றத்தில் தங்களை உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும் என்ருல், மொழியின் உரிமை பறிபோகும் இந்நேரத்தில் இவர்கள் தாம் முதலில் கிளர்ச்சியில் குதித்து வழிகாட்டல் வேண்டும். இல்லையேல் இவர்கள் எழுத்தும் பேச்சும் மக்களால் பதர் என்றே ஒதுக்கப்பட்டுவிடும்.

**அவர்கள் செய்யவில்லையா?:** ஏறத்தாழக் கால் நூற்ருண்டிற்கு முன் அண்மையில் நடந்ததே போன்ற மொழிக் கிளர்ச்சி நம் தமிழகத்தில் ஏற்பட்ட ஞான்று தமிழ்ப் புலவர்கள் என்ன செய்தனர்? மறைமலையடிகளும், திரு வி. க வும் வாளா இருந்தனரா? சிறைக்கு அஞ்சினரா? எறிகோல் அஞ்சா அரவினைப் போல எதிர்த்து நின்றனர்! 'வருவது வரட்டும்' என்று போராட்டத்திலே நேரடியாகக் குதித்தனர். **'இந்தி பொது மொழியா?'** என்ற தலைப்பில் அடிகளார் நூலும் எழுதினர். அவர்களெல்லாரும் தமிழை வளர்க்க நினைத்தவர்கள். இற்றை நாட் பேராசிரியர்கள் தமிழால் வளர நினைப்பவர்கள். வளர்க்க நினைப்பவர்கட்குப் பொறுப்பு உண்டு; அவர்கள் தாயைப்போன்றவர்கள். வளர நினைப்பவர்களுக்கு 'இரை' கிடைத்தால் சரி. ஏன் இந்த நிலை? மறைமலையடிகளையும், திரு. வி. க. வையும் போற்றி ஏற்றும் இவர்கள், அவர்கள் காட்டிய வழியில் நடக்க வேண்டாவா?

சலுகை போனுல் போகட்டும் - என்
அலுவல் போனுல் போகட்டும்!
தலைமுறை ஒரு கோடிகண்ட - என்
தமிழ் விடுதலை ஆகட்டும்!

என்ற பாவேந்தர் பாரதிதாசன் கூற்றிற்கு இலக்கணமாக அல்லவா அவர்கள் நடந்தனர்! இவர்கள் நடக்க வேண்டாவா?

**கரணியம் என்ன?:** மொழித்துறையில் வையாபுரிகளின் எண்ணிக்கை பல்கிவிட்டமைக்குக் கரணியம் யாது? அறியாமையே என்று கூறிவிட முடியாது. அத்தகையார் நூலறி புலவர்கள்தாம்; மதி நுட்பம் நூலோடு உடையவர்கள்தாம்; உண்டாகும் சிக்கலை ''அலசி ஆராய்ந்து'' தீர்வு காணும் வல்லமை படைத்தவர்களே; அறியாது செய்கின்றனர் அல்லர் ஆனல் அவர்களுக்கு மூளை வளர்ந்திருக்கிற அளவுக்கு நெஞ்சம் பண்படவில்லை. பாதுகாப்பாக நாற்புறமும் வலைகளைப் பின்னி வைத்துவிட்டு நடுவிலேயே உட்கார்ந்து கொள்ள நினைக்கும் சிலந்தியைப்போல அவர்கள் வாழ நினைக்கின்றனர். மொழியைக் காசாக மாற்றும் விரகைக் கற்றுக் கொண்டிருக்கின்றனரே தவிர அம்மொழியின் மீது உண்மையான பற்றுடையராக இலர்.

அம் மொழிக்கு ஊறு வருங்கால் உயிரைக் கொடுத்தேனும் அதைத் துடைத்தல் வேண்டும் என்ற துடிப்பு அவர்க்கு இல்லை. இவ்வாறு சொல்வது சிலருக்கு வேம்பும் கடுவும்போல வெய்யதாகத் தோன்றலாம். ஆயினும் உண்மை இதுதான். உண்மைப் புலவர் ஒரு சிலர்க்கு மட்டும் அவ்வுணர்ச்சி இருந்து பயனில்லை. அது பெரும் அளவில் வெற்றிபெற முடியாது. ஆதலின் பெரும்பான்மையாகிவிட்ட வையாபுரிகள் மறையும் வரை தமிழ் தன் உரிமையை நிலைநாட்ட வழியில்லை.

நமது கடன்: இன்றைய நிலையில் நமது கடமை என்ன? மொழித்துறையில் வளர்ந்து கொண்டிருக்கும் வையாபுரிகளைத் திருத்தல் வேண்டும். திருந்த மறுத்தால் அடிவேரை அறுத்தல் வேண்டும். நம்மை நாமே காழ்ப்புக்கொண்டு வீழ்த்துவதா என்று தயங்கவேண்டியதில்லை புறப்பகையைவிட உட்பகை கொடியது.

> "எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
> உட்பகை உள்ளதாம் கேடு"

என்பது வள்ளுவர் கூற்று. தமிழுக்கு மாற்றரால் வரும் புறப்பகையை வீழ்த்த நாம் முயலும் நேரத்தில், நம்மவர்களாலேயே உண்டாகும் உட்பகையையும் இளைதாகக் கொல்வது இன்றியமையாததாகும். தமிழர்கள் உணர்ந்து செயல்படுவராக! *

---

## தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளி வரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு. | கொழும்பு. | வெளி நாடு. |
|---|---|---|---|
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு. |
| ஆண்டுக் கட்டணம். | 6 உருபா. | 7-25 உருபா. | 9 உருபா. |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம். | (இரு வண்ணம்) | 100 உருபா. |
| ,, ,, ,, | (ஒரு வண்ணம்) | 75 உருபா. |
| உள்ளே முழுப் பக்கம். | | 50 உருபா. |
| ,, அரைப் பக்கம். | | 25 உருபா. |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

# வான வெளிச் செலவு

அ. கி. மூர்த்தி, பி. எசி; பி. டி.

**இலக்கணம்:** வான வெளி என்பது எல்லையும் வரம்பும் இல்லாத அகண்ட பெரு வெளியாகும். இந்தப் பரந்த வெளியில் நடைபெறும் செலவே வானவெளிச் செலவு. அஃது ஈர்ப்பு, எடையின்மை, எடை மிகுதி, கதிர்வீச்சு முதலிய தடைகளுக்கு எதிராக நடைபெறுவது. வானவெளியில் குறிப்பிட்ட இடத்தி லிருந்து கிளம்பி, மற்றோர் இடத்திற்குச் சென்று, மீண்டும் கிளம்பிய இடத்திற்கே வந்தால்தான் அஃது உண்மை வான வெளிச் செலவு ஆகும். வானவெளியில் ''கிளம்புவது'' என்பது இரு இடங்களையே குறிக்கும். ஒன்று நிலவுலகும் மற்றொன்று வானவெளி நிலையமும் ஆகும். 'மற்றோர் இடத்தை அடைவது' என்பது திங்கள், செவ்வாய், வெள்ளி முதலிய கோள்களைக் குறிக்கும். ஆக, வான வெளிச்செலவு வான வெளியில் வலம் வரும் கதிரவன் குடும்பத்துக் கோள்கள், விண்மீன்கள் முதலிய வான வெளிப் பொருள்களுக்குச் சென்று திரும்பும் சீரிய முயற்சியே ஆகும்.

**வழியும் விரைவும்:** வானவெளிச் செலவிற்குரிய வழி இருப்புப் பாதை போன்று நேராக இராது. வளைவாகவே இருக்கும். வழிக்குத் தகுந்தவாறு விரைவும் அமையும். குறுகிய வழிக்குக் குறுகிய நேரமும், நீண்ட வழிக்கு நீண்ட நேரமும் ஆகும். பொதுவாக, நிலவுலகைச் சுற்றிவர ஒரு மணிக்கு 18,000 கல் விரைவும், திங்கள், செவ்வாய் முதலிய கோள்களை அடைய ஒரு மணிக்கு 25,000 கல் விரைவும் வேண்டும் இவ் விருவகை விரைவுகளையும் உருசிய, அமெரிக்க ஏவு கணைகள் பெற்றுள்ளன.

**காலம்:** நிலவுலகின் சுற்று வழியை ஏவுகணை தரையி லிருந்து கிளம்பிப் பத்து நிமையத்தில் எட்டிப் பிடிக்கும். திங்க ளுக்கு 30 மணி நேரத்தில் செல்லும். செவ்வாய், வெள்ளி முதலிய கோள்களுக்குச் செல்லக் காலம். நாள் கணக்கிலும் திங்கள் கணக்கிலும் ஆகும்.

**தடைகள்:** வான்வெளிச் செலவிற்கு விரைவாக்கம் (விரைவு வளர்தல்), ஈர்ப்பு, எடையின்மை, கதிர் வீச்சுகள், எடை மிகுதி, விண் கொள்ளிகள் ஆகியவை பெருந்தடைகள் ஆகும். இவற்றில் இனி வெல்லப்பட வேண்டியவை கதிர் வீச்சும், விண் கொள்ளிகளுமே.

**வானவெளிச்செலவின் நிலை:** வானவெளி ஆராய்ச்சியில் முன்னிலையில் உள்ள நாடுகள் உருசியாவும், அமெரிக்காவும் ஆகும். இந்தியா, பிரிட்டன், சப்பான், இசுரேல், பாக்கித்தான் முதலிய நாடுகள் முயல்வு நிலையில் உள்ளன.

உருசியாவும் அமெரிக்காவும் ஏவிய ஏவுகணைகள் அல்லது செயற்கை நிலாக்கள் இருவகைப்படும். ஒரு வகை, நில நிலாக்கள். இவை நிலவுலகை வலம் வருபவை. அமெரிக்க ''எக்சுபுளோர''ரும், உருசியப் ''பூத்துனிக்''கும் இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள். மற்றொருவகை கோள் நிலாக்கள். இவை திங்கள், செவ்வாய், வெள்ளி முதலிய கோள்களுக்குச் செல்பவை. அமெரிக்கப் ''பயனியர்'', ''இரேஞ்சர்'', ஆகியவையும்; உருசிய ''உலூனிக்கு''களும் இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள்.

அமெரிக்க ''மர்க்குரி'' நிலாக்கள் உலகை வலம் வந்தவை. இவற்றில் முறையே செப்பர்டு, கிரிசம், கிளன், கார்ப்பண்டர், சிரர், கூப்பர் ஆகிய வான்வெளி மறவர் சென்று நலத்துடன் திரும்பினர். இவர்களுள் செப்பர்டும் கிரிசமும் சென்ற ஏவுகணை உலகை வலம் வரவில்லை. வாணம்போல் மேல்சென்று கடலில் இறங்கியது.

உருசிய வான வெளிக் கப்பல்களில் முறையே காகரின், தித்தோவ், நிக்கலேயவ் பாப்போவிச், பைக்காவ்ஃசுகி தெரா சோவா (வான வெளிக்குச் சென்று மீண்ட முதல் பெண்), மிக்கய்லோவிச் யகரவ் பியாக்டிசுடவ் ஆகிய வான் வெளி மறவர்கள் சென்று நலத்துடன் மீண்டனர். அமெரிக்கா ஏவிய ''வேன்கார்டுகள்', நிலவுலகின் வடிவத்தை ஆராய்ந்தன. ''எக்சுபுளோரர்''கள் இரு கதிர் வீச்சு வளையங்கள் உலகைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருத்தலைக் கண்டறிந்தன. இவற்றையே உருசியப் ''பூத்துனிக்கு''களும் உறுதிப் படுத்தின. அமெரிக்க ''டிரான்சிட்டு''கள் கப்பல் போக்கு வரத்துக்குப் பயன்படுபவை. ''டிராசு''கள் வானிலை ஆராய்ச்சியில் ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. ''டெல்ஃசார்'' என்னும் நிலா உலக அளவில் எதிர் காலத்தில் செய்தித் தொடர்பு கொள்ளலாம் என்பதற்கு முன்னோடியாக உள்ளது. திங்களுக்குக் காந்தப் புலங்கள், கதிர் வீச்சு வளையங்கள் இல்லை என்பதை அமெரிக்கப் ''பயனியர்''களும், உருசிய ''உலூனிக்கு''களும் உறுதி செய்துள்ளன. இதுவரை இருநாடுகளும் நூற்றுக் கணக்கில் செயற்கை நிலாக்களை ஏவியுள்ளன. பல அரிய கண்டு பிடிப்புக்களைச் செய்துள்ளன.

மிகுந்த எடையுள்ள நிலாக்களை ஏவுவதிலும், புதிய இறங்கு நுணுக்கத்தைக் கையாள்வதிலும் உருசியா முன்னேறி

யுள்ளது. யார் திங்களுக்கு முதலில் செல்வது என்பதே இப்பொழுது இரு நாடுகளுக்குமுள்ள போட்டியாகும். இதைப் பொறுத்திருந்துதான் நாம் பார்த்தல்வேண்டும். கருவி நிலையில் திங்கள் செலவு என்றோ நிறைவேறிவிட்டது. உயிர் நிலையில் (மாந்தன் செல்லும் வகையில்) இனி நிறைவேறுதல் வேண்டும்; நிறைவேறும் என்பது உறுதி. திங்கள் செலவு நிறைவேறுமானால் செவ்வாய், வெள்ளி முதலிய கோள்களுக்கும் மாந்தன் சென்று வரலாம் என்பது உறுதியாகும். வானவெளிச் செலவு கட்டுக்கதையாக இருந்த காலம் மலையேறிவிட்டது; அறிவியலாக உள்ள காலம் இப்பொழுது மலர்ந்துள்ளது. எனவே; திங்கள் முதலிய கோள்களுக்கு மாந்தன் செலவு எளிதில் நிறைவேறும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

## வியத்தகு வான வெளி நிகழ்ச்சிகள்.

வான வெளியில் வழக்கத்திற்கு மாறாக நடைபெறும் செயல்களும், காட்சிகளும் வானவெளிப் பயணிகளைப் பெரு வியப்பில் ஆழ்த்துபவை. ஆதலின் இவற்றை வியத்தகு வான வெளி நிகழ்ச்சிகள் எனலாம்.

எடை: ஈர்ப்பு என்பது வான வெளி எங்கும் பரவியுள்ள ஒரு பேராற்றல். ஈர்ப்பும் எடையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. ஈர்ப்பு மிகுந்தால் ஒரு பொருளின் எடையும் மிகும். காட்டாக, நிலவுலகில் 100 பவுண்டு எடையிருக்கும் ஒருவர், வியாழனில் 300 பவுண்டு எடையுள்ளவராக இருப்பார். அதாவது அவருடைய எடை மூன்று மடங்கு மிகுதியாகும். நிலவுலகின் ஈர்ப்பைப்போல் வியாழனின் ஈர்ப்பு மூன்று மடங்கு. இவ்வுலகில் நாம் இயல்பான வாழ்க்கை நடத்த இந்த ஈர்ப்பு ஆற்றலே அடிப்படையாகும்.

எடை மிகுதி: நிலவுலகின் ஈர்ப்பைப்போல் ஒரு மடங்கு எடையே நம் உடலின் எடையாகும். இதை ஓர் ஈர்ப்பு என்று கொள்வோம். எடை இரு மடங்கானால், ஈர்ப்பும் இப்பொழுது இரு மடங்காகும். இதுபோல், எடையின் மடங்கு மிக மிக ஈர்ப்பின் எண்ணிக்கையும் மிகும். இந்த ஈர்ப்பு எண்ணிக்கை ஒன்று, இரண்டு, மூன்று என்னும் அளவில் வளர்தலையே 'எடை மிகுதி' என்கிறோம்.

ஏவுகணையில் செல்கின்றபொழுது நம் உடலின் எடை பன் மடங்கு மிகும். ஏவுகணைப் பொறி இயங்குவதால் உண்டாகும் அழுத்தத்தால், இந்த எடை மிகுதி ஏற்படுகிறது; நிலவுலகின் ஈர்ப்பு ஆற்றலால் அன்று.

காட்டாக, அமெரிக்க முதல் வான்வெளி மறவர் செப்பர்டின் இயல்பான எடை 160 பவுண்டு. ஏவுகணை இயங்கிய நிலையில் அவருடைய எடை 960 பவுண்டு. அதாவது இயல்பாக உள்ளதைப்போல் அவர் எடை ஆறு மடங்கு ஆயிற்று. இப்பொழுதுஏதோஒரு பெரியஆற்றல் நம்மை அழுத்துவதுபோன்று இருக்கும் நம தசைகள் இறுகும்; குரல் கம்மும். இது கிட்டத்தட்டப் பத்து நிமைய நேரமே இருக்கும். இந்த நேரம் ஏவுகணை நிலவுலகின் சுற்று வழியை அடைவதற்குரிய நேரமாகும். வான வெளி உடைகளை அணிவதன் மூலம் இதைச் சமாளிக்கலாம். ஆக, எடை மிகும் நிலையே எடை மிகுதி ஆகும்.

எடையின்மை: இஃது எடை மிகுதிக்கு நேர்மாறான நிகழ்ச்சியாகும். இதில் எடையே இருக்காது. இந்நிலைமை ஏவுகணை நிலவுலகைச் சுற்றி வரும்பொழுது ஏற்படும். இப்பொழுது ஏவுகணைப் பொறி இயங்காததால், இந் நிலைமை உண்டாகின்றது. இதில் மிதப்பது போன்ற உணர்ச்சி உண்டாகும்; பிடிப்பு இருக்காது; கைகால்கள் மிதக்கும். இருப்பினும், எல்லா வேலைகளையும் சரிவரச் செய்யலாம். உண்ணலாம்; உறங்கலாம்; ஓய்வு கொள்ளலாம்; எழுதலாம்; இன்ன பிற வேலைகளைச் செய்யலாம். பார்த்தல், கேட்டல் முதலிய தொழில்களும் இயல்பாகவே நடைபெறும். ஏவுகணைக்கு வெளியே செல்ல வேண்டுமானால், வானவெளிப் பயணி தம்மை ஒரு கயிற்றால் ஏவுகணையோடு கட்டிக்கொண்டு வெளியே செல்வார். இல்லாவிட்டால், வான வெளியில் அவர் அடித்துச் செல்லப் படுவார்.

வான வெளிப் பயணிகளுக்கு எடையின்மை இன்பமாகவே இருக்கும். இந்நாள் வரை, மிக நீண்ட நேரம் என்று கூறத்தக்க அளவுக்கு 5 நாட்கள் வான வெளியில் தங்கி எடையின்மையை நுகர்ந்தவர், உருசிய வான வெளி மறவரான வைக்காவ் விசுகி ஆவார். செவ்வாய் முதலிய கோள்களுக்குச் செல்லும்பொழுதும், செலவு நெடுக எடையின்மையே நீடிக்கும். இந்நிலைமையில் எவ்வளவு பெரிய பொருள்களையும் எளிதாகத் தூக்கலாம். ஏவுகணை மீண்டும் காற்று வெளியை அடைகின்ற பொழுது உடல் எடையைப் பெறும். மிதப்பு நிலை நீங்கிப் பிடிப்பு நிலை மீண்டும் உண்டாகும். இது மூச்சு விடுவதற்கேற்ற காற்றுள்ள வெளிப் பகுதிக்கு ஏவுகணை வரும் பொழுது ஏற்படும். அதுவரை ஏவுகணை இறங்குவதால், விரைவாக்கம் நீங்கி, உடலின் எடை பன்மடங்கு கூடும். ஆக, ஏவுகணை இயங்கும் பொழுதும், இறங்கும் பொழுதும் உடலின் எடை பன் மடங்கு கூடும். நிலவுலகைச்சுற்றி வரும்பொழுது எடையின்மை நிலவும்.

காலம்: நிலவுலகில் இரவு பகல் ஏற்படுவது போலவே ஏவுகணையிலும் இரவு பகல் ஏற்படும். ஏவுகணை நிலவுலகைச் சுற்றும் காலத்தைப் பொறுத்து, அதில் இரவு பகல் உண்டாகும். நிலவுலகு ஒரு சுற்று சுற்றுவதற்குரிய காலமான இருபத்து நான்கு மணி நேரத்தில் பகல் பன்னிரண்டு மணியாகவும், இரவு பன்னிரண்டு மணியாகவும் அமைகிறது. ஏவுகணை ஒரு சுற்றுக்கு ஒரு மணி எடுத்துக்கொள்ளுமானால், இரவு அரை மணியாகவும், பகல் அரை மணியாகவும் இருக்கும். ஏவுகணை பதினேழு தடவைகள் சுற்றினால் பதினேழு இரவு பகல்கள் உண்டாகும். பருவ காலங்களும் ஏவு கணையில் உண்டாகும். அமெரிக்க வான வெளி மறவர் கிளன் அமெரிக்காவின் மேலாகச் சென்ற பொழுது மாரிக்காலமும், ஆசுத்திரேலியாவின் மேலாகச்சென்ற பொழுது கோடைக்காலமும் தோன்றின.

இயக்கம்: வான வெளியில் மேல் கீழ் என்பதற்கே பொருள் இல்லை; திசையும் இல்லை. ஏவு கணையில் எந்நிலையிலும் தங்கலாம். காலடி அழுத்தத்தை உண்டாக்காது. எனவே, ஏவுகணையிலுள்ள பொருள்களைப் பிடித்துக் கொண்டே நடக்க வேண்டும். ஆனால், இயக்கம் எளிதாகவே இருக்கும்.

சமைத்தல்: வான வெளியில் சமைக்க இயலும். பொருள்களை ஏனங்களில்போட்டு மூடியே சமைத்தல்வேண்டும். இல்லாவிட்டால் சமையல் பொருள்களே, எடை இல்லாமையால் மிதக்கத் தொடங்கிவிடும். நிலவுலகில் சமையல் பொருள்களைப் பரப்பி வைத்துக்கொண்டு சமைப்பதுபோல் செய்தால் சமையல் பொருள்கள் பறந்து போய்விடும்! மின்காந்தக் கருவிகள் ஈர்ப்பு இல்லாத வான வெளியில் வேலை செய்யும். (இந்த ஈர்ப்பு இல்லாத நிலை ஏவுகணை இயங்காததால் ஏற்படுவது; இயல்பான உலகின் ஈர்ப்பு மறைவதால் அன்று; ஒரு பொழுதும் உலகின் ஈர்ப்பு மறையாது. மேலே செல்லச் செல்லத் தொலைவுக்குத் தகுந்தவாறு குறையும்.) அவற்றை எடையை உண்டாக்கும் பொறியில் வைத்துச் சுற்றிச் சமையல் செய்யலாம்.

உண்ணுதல்: உண்ண இயலும். உணவு மிக வெப்பத்தைத் தரும் நீர்ம உணவாக இருக்கும்; அல்லது பசையாகவும் இருக்கும். சூழ் நிலையில் குழாயில் அடைத்து வைக்கப்பட்ட உணவைப் பிதுக்கி வாய்க்குள் செலுத்தி உண்ணல் வேண்டும். மாவறட்டு (biscuit) முதலிய பொருட்களைப் பிட்டுத் தின்ன முடியாது. எடையில்லாததால், பிடும்பொழுது தூள்கள் மிதந்து மூக்கு, காதெல்லாம் புகுந்துவிடும்!

நிலவுலகில் குவளையில் நீரைக் குடிப்பதுபோல் வானவெளியில் குடிக்க இயலாது. குப்பியில் நீரை ஊற்றி உறிஞ்சியே

அதை உட்கொள்ளல் வேண்டும். தப்பித் தவறி நீர் வெளிப் படுமானால் அஃது உருண்டைகளாக மிதக்கத் தொடங்கிவிடும்! ஏவுகணையினுள் ஒட்டும் விசையைவிட இழுக்கும் விசையே மிகுதியும் இருப்பதால் நீர் உருண்டையாகின்றது. நீரை ஊற்றி முகம் கழுவ இயலாது. நீரில் நனைந்த துண்டினாலேயே முகத்தைத் துடைத்தல் வேண்டும்.

உருசிய வானவெளி மறவர் பைக்கா விசுகி கொஞ்சம் நீரைச் குப்பியிலிருந்து ஊற்றியபொழுது, அது மினு மினுக்கும் கொப்புளங்களாயிற்று. இதைத் தொலைக் காட்சி வாயிலாக, நிலவுலக மக்கள் கண்டு களித்தனர்.

**உயிர்ச் செயல்:** உயிர் நலத்துடன் இயங்கும். அதற் குரிய எல்லா ஏற்பாடுகளும் ஏவுகணையில் இருக்கும். நெஞ்சுத் துடிப்பு அளவில் மாறுபடும். நம் நெஞ்சு ஒரு நிமையத்துக்கு 72 தடவைகள் இயல்பாகத் துடிக்கிறது. வானவெளியிலோ, அது 52 முதல் 56 தடவைகள் வரை துடிக்கும். உருசிய வான வெளி மறமங்கை தெராசோவாவின் நெஞ்சுத் துடிப்பு 52 முதல் 54 ஆகவும்; வானவெளி மறவர் பைக்காவிசுகியின் நெஞ்சுத் துடிப்பு 50 முதல் 56 ஆகவும் இருந்தன.

**தீ உண்டாதல்:** வானவெளி வெற்றிடம் நிரம்பியது. அங்குக் காற்றோட்டம் இல்லை. காற்றோட்டம் இல்லாததால், பொருள்கள் எரிவதற்கு வேண்டிய உயிர்வளி இல்லை. எனவே, தீக்குச்சியைக் கிழித்தால் தலை பற்றும்; எரியாது. ஒரு கலத்தில் உயிர் வளியை நிரப்பிப், பொருள்களின்மேல் பீச்சி அவற்றை எரியவிடல் வேண்டும்.

**வானவெளிக் காட்சி:** ஏவுகணை அல்லது வான வெளிக் கப்பலில் பக்கத் தொளைகள் இருக்கும். அவற்றின் வாயிலாக வானவெளிப் பொருள்களின் எழில்மிகு கோலத்தைக் காணலாம். வானவெளிக் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். ஏவுகணை இரு நிமையத்துக்குள் காற்று வெளியைக் கடக்கும். அதுவரைதான் வானம் நீலமாகத் தெரியும். பின் கறுப்பாகும். ஆக, வானவெளி இருள் நிரம்பியே காணப்படும். நிலவுலகம் நீல நிற உருண்டையாகத் தெரியும். நில மகளின் உருண்டை வடிவத்தை முதன் முதலில் கண்டவர் காகரினே ஆவார். திங்கள், விண்மீன், கதிரவன் முதலியவை பன் மடங்கு ஒளிர் வுடன் தென்படும். தொடுவானம் சொல்லொணா அழகுடன் காட்சியளிக்கும். அதன் கிச்சிலி நிறம் நீல நிறத்தோடு இரண் டறக் கலப்பது கண்ணைக் கவரும். கண்டங்கள், திட்டுகள், கடல்கள், ஆறுகள் முதலியவற்றைப் பார்க்கலாம். இரவில் தெரு விளக்குகளைக் கூடப் பார்க்க இயலும். உழுத வயல்

களையும் உழாத வயல்களையும் வேறுபடுத்தி அறியலாம். கதிரவன் எழுவதும் படிவதும் பல தடவைகள் நடைபெறும்; பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வான வெளியில் குளிர் மிகுந்திருப்பதால் இழுவைப் பந்தும் (rubber ball) கண்ணாடிபோல் நொறுங்கும் பொருள்கள் இணைந்து ஒன்று சேரும். பார்க்கும் பொருள்களின் வடிவம் மாறுவதுபோல் தென்படும் ஆனால், உண்மையில் வடிவம் மாறுவதில்லை. இது பொய்த் தோற்றமே. பொருள்கள் நீண்டும், நாற்கோணமாகவும், பருத்தும், ஒழுங்கற்றும் இருப்பதுபோல் தென்படும் பார்க்கும் கோணத்திற்கு ஏற்றவாறு வடிவம் வேறுபடும்- பொருள்கள் முன் பின்னாகவும், பின் முன்னாகவும் காணப்படும். இருள், ஒளி ஆகியவை மாறி மாறி ஏற்படுவதால் இவ்வகை ஒளியின் பொய்த் தோற்றங்கள் ஏற்படும். கானல் நீர் என்பது நாம் யாவரும் நன்கறிந்த ஒளியின் பொய்த் தோற்றமே. இது போன்றே வான வெளியிலும் ஒளியின் பொய்த் தோற்றங்கள் ஏற்படும்

**கண்டு பிடிப்புகள்:** வான வெளி அறிவியல் பல அரிய கண்டு பிடிப்புகளை அறிவியலுக்கு நல்கியுள்ளது. அவற்றில் இன்றியமையாத சில பின்வருமாறு: நிலவுலகு பேரிக்காய் வடிவத்தில் உள்ளது. திங்களுக்கும் வெள்ளிக்கும் காந்தப் புலமோ கதிர்வீச்சு வளையமோ இல்லை. காற்றுவெளியின் எல்லை 200 கல்லிலிருந்து 500 கல் வரை பரவியுள்ளது. திங்களில் படிந்துள்ள புழுதி முன்பு கருதியவாறு அவ்வளவு தடிமன் இல்லை. மாந்தன் வானவெளியில் வாழலாம். *

---

## முகவர்கள் கவனத்திற்கு.

* ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
* படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
* தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

—அமைச்சர்.

---

துரை மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய தமிழ்ப் பாவியம்!
கொய்யாக்கனி
(விலை: 2-25.)
தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.
அஞ்சல் செலவு தனி.

முன்றில் பசுங்கொடி முல்லை முறுவலிக்கத்
தென்றல் மணக்குந் தெருவாயில்!-நன்றே
துலங்குபணி செய்க! சுடர்த்தொடீஇ! என்றூழ்
இலங்குமணி செய்ம்முன் எழுந்து.

சாய்க்கடை நீர்தேங்கல் தள்ள வருங்குப்பை
வாய்க்கடைசேர் குன்றுதல் வையாமல்-நோய்க்கடை
இன்னல் விரிக்காமல் ஏந்தெழிலாய்! இற்புறத்தைப்
பண்ணல் குடித்தனப் பாங்கு.

ஒட்டடையும் ஓட்டையும் உட்புறங்க ளெங்கங்கே
பட்டடையும் கேடு படியாமல்-மட்டடையும்
வண்டார் குழலாய்! வனைமனை ஆள்! அஃதன்றே
கண்டார் வியக்குங் கலை.

இழுக்குக் குடித்தனத்தை இங்கேபார் என்னும்
அழுக்குத் தலையணைகள் அந்தோ!-கொழுக்கும்
படிவைப்பார் பாங்கில் படியாதே; பாவாய்!
நெடிவைப்பார் மேலும் நினை.

எக்கலங்கள் எத்தேவைக் கென்றுய்ந்து நேர்தரவே
அக்கலங்கள் அத்தேவைக் காக்குதலை-மிக்கநலம்
தேடும் மனையாட்சி செய்கடமை நெஞ்சிழுக்க
ஆடும் கொடியே! அறி.

பசிநோய் மருந்து பதஞ்செய்யும் அட்டில்
கசியும் கசடு களைவாய்-ஒசியும்
இடையாய்! இயல்கலங்கள் ஏந்தவரும் தேவை
அடைவாய் இருக்க அமை.

வான்பொருள் சூழ்ந்திடினும் வாழ்வுண்டோ? அப்பொருள்
தான்தரும் சீர்தகவு தாவாக்கால்-தேன்தரும்
பூங்குழலாய்! புக்கமனை போற்றஉறும் துப்புரவு
தாங்கெழிலாய்ச் செய்யார் தமக்கு.

சிற்றில் எனினும் சிறப்புறல்நின் செய்வினைப்
பற்றில் விளையும் பயன்காண்பாய்-கற்றல்
களைகளைதற் கென்றே கருதும் நுதலாய்!
வினையுளத்தின் ஊக்கம் விரும்பு. *

புதுவை. முதுகண்ணன்.

# வள்ளுவர் அறிவுறுத்திய அரசியல்.

புலவர். வித்துவான்: **ஒண். கி. சந்திரசேகரன்,** எம்.ஏ;பி.டி;பிஓஎல்.

1. அரசுபொறையரிதாதல்

இல்லறத்தின்வழிப் படுவனவாகிய பொருளின்பங்களுள் பொருளே இருமைநலமும் பயப்பதாகும். அப்பொருட்கு அரசமுறைமையே துணைக்காரணமாகும் அரசமுறைமை யாவது நாடுகாவலை நாடாத்தும் முறைமையாம். இவ்வரசன் மலர்தலை யுலகிற்கு உயிரெனச் சிறந்தவனவன். உடுக்குழாங் கடாமே தண்சுடர்க் கடவுள்போல விண்சுடர் விளக்கமாக விளங்கல. அதுபோல மண்சுடர் வரைப்பின் மன்னர்போல மிக்க மக்களுமில்லை. ''ஒருமையாற் றுன்ப மெய்து மொருவனை யும்மையாலே, திருமையான் முயங்குஞ் செல்வச் செருக்கொடு திளைப்ப நோக்கி. யிருமையு மொருமையாலே யியற்றலின் இறைவன் போலப், பெருமையதுடைய தெய்வம் பிறிதினி யில்லை'' யென்றே பேசப்படும் இறைவன், நல்லியல்பு நற்செய் கைகளால் யாவரினும் இறப்ப வுயர்ந்தவனாதல் பெறப்படும். அவன் படைமுதலாறு உறுப்புகளையும் பெற்று, திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமும் எஞ்சாது நிற்க, உறுப்புகளைக் குறித்துச் செயத்தகுங் கருமங்களில் விரைவும், கல்வியும், ஒற்றனையும் பாராது கடிதிற்செய்யும் ஆண்மையுமுடையவனாய், ஓதல் முதலாகப் பகைத்திறந்தெரிதல் இறுவாயாகப் பொதுவுஞ் சிறப்புமாக வோதிய தொழில்களில் வழுவாதொழுகிச், கொலை களவு முதலாயின தன்னாட்டின் கண்ணும் நிகழாமற் கடிந்து அழியுநர் புறக்கொடை யயில்வேல் ஓச்சா மறத்தின் வழுவாது நின்று; பகைவரையழித்தலாகிய தொழில்களால் பொன், நெல்முதலாய பொருள்கள் வரும்வழிகளை மேன்மேலுளவாக்கி, அங்ஙனம் வந்தவற்றை யொருவழித் தொகுத்து, தொகுத்தவற் றைப் பகைவர்களவர் முதலியோர் கொள்ளாமற் காத்து, காத்த வற்றை அறப்பொருட்டாகக் கடவுளர், வறியோரென்றிவர்க் கும், பொருட்பொருட்டாக உறுப்புகட்கும் பகைவரின் பிரிக்கப் படுவார், தன்னொடு கூட்டப்படுவார் என்றிவர்க்கும், இன்பப் பொருட்டாக வாவியும் காவும் முதலாயின செய்தற்கும் விடுத்து; வலியரான் நலிவெய்தி முறை வேண்டினார்க்கும் வறுமையுற்று வந்து இரந்து நின்றார்க்கும் காண்டற் கெளியனாய் நாளவைக் கண் அந்தணர் சான்றோருள்ளிட்டாரொடு செவ்வியுடையனா யிருந்து, கேள்வியினும் வினையினும் கடியவாய சொல்லைக் கூறு தலல்லனாய்; இனியவாய சொல்லுடனே வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்து, தன் புறஞ்சூழ்வாரானும் பகைவரா னும் நலிவுபடாமற்காத்து, அறநூலும் முறைநூலும் சொல்லும் நெறிவழி முறை செய்து; இடிக்குந் துணையாயினார் சொற்களைத்

தன் செவி பொருதாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் சிறப்பு ணர்வுடைய வேந்தனது குடைநிழற்கண்ணேயே உலகம் தங்கும். ''மறந்தலை மயங்கி வையத்தொருவரை யொருவர் வாட்ட, இறந்தலையுருமை நோக்கி யின்னுயிர் போலக்காக்கும் அறந்தலை நின்றவேந்தர் அடிநிழலன்றி யார்க்குஞ் சிறந்த தொன்றில்லை'' யாகலானும், கண்ணிய கடாஅத்த வேழங் கவுளினுரிஞுப்பட்டுத், தண்ணிய தன்மை நீங்காச் சந்தனச் சாதிபோலப், புண்ணியக் கிழவர் கீழோர் பிழைத்தன பொறுப்ப வாயின், மண்ணியல் வளாகமெல்லாம் வழிநின்று வணங்கு'' மாதலானும், குடிமிசை வெய்யகோலும் கூற்றமும் பிணியும் நீர்சூழ் படிமிசையில்லையாயின்'' வானுள் யாரும் பயிறும் என்றாராகலானும்,

> "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானும் வேந்தர்க்கொளி" (390) என்றுரைத்தார்.

இதனால், அருந்தவமும் அரசுபொறையுமே யரியவாமென்றும், திருந்திய விரண்டுந் தத்தஞ் செய்கையிற்றிரியுமாயின் பெருந் துயர் விளைக்கும் என்றும் உணரப்படும். இவ்வருமை நோக்கியே, ''மரந்தலை பிணங்கிவான்றோய் மணிவளர் வயிரக்குன்ற, முரந்தனக்குயரவேந்தி யுய்த்திடு மொருவற் கேனும், அருந்தவமரசபாரம் அவை பொறையரிது'' என்று சான்றோர்கள் கொண்டனர் என்க.

## 2. ஆற்றலான் அரசனுகில் அரியதொன்றில்லை:

இத்துணைப் பொறையரிதாகிய அரசினையேற்பவன் யாவர்க்கும் உறுதிபயக்குங்கல்வி யறிவுடையனுதல் வேண்டும். கற்றவழி யதனின் அறிவு வலியுறுதல் வேண்டும்; கல்லாதவழியும் அதனை யுண்டாக்குதல் வேண்டும். கேட்கப்படும் நூல் பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டவழியே யிவை யுளவாம். கல்வி கேள்விகளினுய அறிவோடு இயற்கையறிவும் இன்றியமையாமல் வேண்டுவதாகும். இனி, அறிவால் நிரம்பியோன் தன்கண் நிகழலாகாமையாகிய குற்றங்களை அறிதலும் அறிந்தபின் அவற்றைக் கடிதலும் வேண்டும். மூவிரு குற்றமும் முறைமையிற் கடிந்து காவற் சாகாடு உகைப்போன் தனக்கும் தனதுறுப்புகட்கும், மாந்த. தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்குரியராயும், தான் தீ நெறிக்கண் சென்றுழி விலக்கி நன்னெறியின் நிறுத்தற்கு வேண்டிய பேரறிவும் உள்ளாரைத் தனக்குத் துணையாகக் கோடல்வேண்டும். அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கும் இயல்பிற்றுய சிறியோர் குழுவினைப் பொருந்தின் பெரியாரைத் துணைக் கோடலால் பயனின்றும். ஆதலின் சிற்றினத்தைச் சேராமல் பெரியோரைத் துணைக் கோடல் பயனுடைத்தாயவழி, அவரோடுங் கூடிச் செய்யத்

தகும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம் பெறல்வேண்டும். அத்திறங்களுள் ஒறுத்தலைக் குறித்தானாயின் அதற்குரிய நால் வகை வலியையும் அளந்தறியவேண்டும். இவ்வாறறிந்தோன் வலியான் பகைவரினும் மிகுதியுடையவனாயக்கால் அவர்மேற் செல்வான். அவ்வாறு செல்வான், அதற்கேற்ற வலியும் காலமும் நிலமும் அறிதல்வேண்டும். அம்மூன்றனையும் அறிந்து பகைமேற் செல்லுவானுக்குத் தானை வினையுற்றுச் செல்லுதற் பொருட்டும் அறைபோகாமல் ஆளுதல் பொருட்டும், தன் அமைச்சர் முதலா யினாரைப் பிறப்பு,பண்பு அறிவுசெயல் என்பனவற்றை அளவை களான் ஆராயந்து தெளிந்த பின்னர் அவ்வாறு தெளியப்பட் டாரை, அவரவர் செய்யவல்ல வினைகளை நன்கறிந்து அவற் றின்மேல் நிறுத்தி யாளுந்திறம்பற்றல் வேண்டும். வினைசெய் வாரை யொப்பத் தனக்கு இன்றியமையாத சுற்றத்தாரையும் தன்னின் நீங்காமல் தழீஇக்கொள்ளுதல் வேண்டும். இவையெல் லாம் நேர்ந்துழி உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலாகிய வினைகளி னும் சோர்வுறாமை வேண்டும். சோர்வில்லாத அரசனே யொருபாற்கோடாது முறைசெய்ய வல்லவனாவன். அம்முறை யைச் செய்யுங்காலத்து கொடுங்கோன்மை நிகழாமல் காத்துழி யும் குடிகள் அஞ்சுவதும் தானஞ்சுவதுமாகிய வினைகளை விலக் கித் தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறு அது, தன் நாடு செலுத்துங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் தன் பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தனவற்றை யொற்றரானறிந்து அவற்றிற்கு ஏற்ற வினை செய்வானுக்கு மனம் மெலிதலின்று வினை செய்தற்கண் கிளர்ச்சி யுறல் வேண்டும். ஒரோவழித்தன்மை வயத்தான் மடிவந்து கெடுத்தாலும் முயற்சியான் வினையை யாளுதல் வேண்டும். வினையின்கண் முயல்வான் தெய்வத்தானாகப், பொருளின்மை யானாக, மெய்வருத்தத்தானாகத் தனக்கு இடுக்கண் வந்துழி யதற்கு மனங்கலங்காமையும் வேண்டும். இத்துணையும் ஆற்றவல்லான் அரசனாகில் அவற்கு அரிதாவதியாதுமின்றாய் அவனொடு வைகலும் ஏமமெய்து மென்ப.

"ஆற்றல்மூன் றோத ப்பட்ட வரசர்கட் கவற்றின் மிக்க
ஆற்றல்தான் சூழ்ச்சியென்ப; ஆதலால் அதனை ஆயும்
ஆற்றலாரமைச்சராக வமைச்சரோடமர்ந்து செல்லும்
ஆற்றலான் அரசனாகின் அரியதொன் றில்லை யன்றே"
(சூளாமணி: மந்திரசாலைச் சருக்கம்: 12)

3. அரசியலை ஆற்றுமாறு.

1. குற்றங்கடிதல்.

அரசனாயினானுக்கு முதற்கண் செருக்கமுஞ் சினமும் அளவிறந்தகாமமுங் கூடா. அவையுண்டாயின் முறையல்லன

செய்விப்பதோடன்றி அவனுடைய செல்வம் நல்வழிப்படுதலும் நிலை வேறுடையவ தலும் பெருவாய் மேம்பாட்டினை இழக்கும். வேண்டும் வழிப்பொருள் கொடானாயினும், அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை வணங்கானாயினும், முடிக்கப் படாதாயினும் கருதியது முடித்தே விடுவனென்று மானம் பற்றினும், கழிகண்ணோட்ட முடையனாயினும் குற்றம் பயக்கும். சினனே காமங்கழி கண்ணோட்ட மென்னுமிவை யறந்தெரி போக்கிற்கு வழியடையாகுந் தீமைகளாதலை யறிந்த அவற்றைக் கடிந் தொழுகினன்றி முறை செய்தற்குரியவனாகான். மேலும், அறம் பொரு ளின்பங்கள் குறித்துச் செயற் பாலனவற்றைச் செய்தல் வேண்டும். அவற்றைப் பயவா வினைகளை நயப்பின் பழியுங் கேடும் வரும். தான் இறப்பவுயர்ந்தஞான்றும் மதத்தாற் றன்னை நன்கு மதியாமை வேண்டும். தன்னை வியந்துழி யிடமுங்காலமும் வலியும் அறியப்படா; அறனும் பொருளும் இகழப்படும்; தான் காதலித்த பொருள்களைப் பகைவர்க்கு அக்காதல் புலனாகாமை யுய்த்தல் தப்புவன். ஆகவே அவை வாயிலாகப் புகுந்து பகைவர் கரந்துவெல்லல் தப்பாதாம். எனவே, காமம் 'வெகுளி' கடும் பற்றுள்ளம் 'மானம்' உவகை, மதமெனப்படும் குற்றங் களாறனையும் தன் கண் நிகழாமல் கடிந்தொழுகுதற் பாலனாதல் வேண்டும். இத்திறத்தானுக்கு ஆகக்கடவ குற்றம் யாது மின்றாம்.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு.

## 2. பெரியாரைத் துணைக்கோடல்

மூவிருகுற்றமும் முறைமையிற் கடிந்து காவற்சாகாடுகைத் தற்குரியனாய அரசன் தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல்வேண்டும். இவ்வாறு கோடற்குரியார் அமைச்சரும் அந்தணருமாமென்ப. இவர் தெய்வத்தானாக மக்களானாகத் தம்மன்னற்கு வந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கிப் பின் அப்பெற்றியன வாரா வண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையராவர்.

தெய்வத்தான் வருந் துன்பங்களாகி மழையினதின்மை மிகுதிகளையும், காற்றுத்தீப்பிணி யென்றிவற்றையும் கடவுளர் தக்கோர்களை நோக்கிச் செய்யுங் கடன்களால் நீக்குவர். பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வாரென்றித் திறந்தா ரால் வருந்துன்பங்களைப் பொழுது வேற்றுமை கொடை ஒறுப்பு ஆகிய நால்வகை விரகுகளை ஏற்றதனால் நீக்குவர். தெய்வத்தான் வருவனவற்றை முன்னறி நிகழ்ச்சிகளானறிந்தும், அவை வாரா மற் காத்தற்குரிய கடன்களைச் செய்தலும் அந்தணர்க்கேயாம்! மக்களான் வருவனவற்றை அவர் தன்மை, நடைமுறை, ஊண்,

செயல் என்பனவற்றுலறிதலும், அவை வாராமற் காத்தற்குரிய விரகுகளை நாடிச் செய்தலும் அமைச்சர்க்கேயாம். ஆகவே அந்தணரையும் அமைச்சரையும் துணைக்கோடல் வேண்டும் இவர்கள் அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறிந்தவராய், அறிவானும், ஒழுக்கத்தானும், காலத்தானும் முதிர்ந்தவராய், முறைமையையும் உலகியலையும் நன்கறிந்தவராய் விளங்குவராதலின், இவரை நன்கு மதித்து உயரச் செய்து அவர்வரை நின்று, அவர் பிணிப்புண்ணுந் திறமாயின பிறவெல்லாம் பிழையற வறிந்து பேணிக்கொளல் வேண்டும்.

> "உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
> பெற்றியார்ப் பேணிக் கொளல்"

இவ்வாறு. அறிவொழுக்கங்களால் தக்காராய இனத்தையுடையனய், அறமுறைகளின் நெறி வழுவாமல் ஒழுகும் நீர்மையனய் அரசன் படிறு புரிதல், கூடினரைப் பிரித்தல் வேறு பகை விளைத்தலென்றிவற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பல திறத்தவாயினும் தானுமறிந்து, அறிவார் சொல்லுங் கொண்டொழுக வல்லனுவனுதலின், அவன் திறத்தில் பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமுமின்ரும். தமக்குக் கரிசுகளும் முறையல்லனவுமாய தீயவையிலராய், அரசர்கண் அன்புடையராய், அவனை நெறியினீங்கவிடாராய், தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந் தன்மையுடையாரைத் தனக்குச் சிறந்தாரென்ருளுமரசனைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவரிலராவர்.

> "இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
> கெடுக்குந் தகைமை யவர்"

[தொடரும்]

---

## பாவாணர்க்குப் பொருட்கொடை.

தென்மொழி தொடங்கிய பாவாணர் பொருட்கொடைத் திட்டத்தில் இத்தொகையையும் சேர்த்துக் கொள்ளுமாறு அண்மையில் சிங்கப்பூர் அன்பர் சிலர் உருபா நாற்பத்தொன்றை விடுத்துள்ளனர். பணம் பாவாணர்க்குப் பணவிடை வழி விடுக்கப் பெற்றது. பட்டியல்வருமாறு:

| | |
|---|---|
| ஆசிரியர் திரு. இசுடீபன் மாணிக்கம் | 8-00 |
| திரு. ஆ. செயராமன் (செம்பியன்) | 10-00 |
| ஆசிரியர். வி. கு. சாமிநாதன் | 6-00 |
| திரு. எசு. சவுண்டையா | 4-00 |
| திரு. இரா. தங்கராசு | 2-00 |
| ஆசிரியர். திரு. த. பா. சாமி | 2-00 |
| ஆசிரியர். திரு. பா. கேசவன் | 2-00 |
| திரு. மு. சுந்தரராசு | 2-00 |
| திரு. ச. து. தண்டபாணி | 2-50 |
| பிரேமா புத்தகசாலை | 2-50 |
| | 41-00 |

இனிப் பாவாணர்க்குப் பணம் விடுப்பார் நேராக அவருக்கே விடுக்கவும்.

—அமைச்சர்.

ஒன்பதாம் தொடர்.

# தொடரோவியம் போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்ஞர்டு சா. தமிழில்: வழுதி.

உலூக்கா: (கலக்கத்துடன்) பலகணி வழியாகப் பார்த்தால் நாம் நிற்பது தெரியும். இரெய்னு அம்மா கட்டாயம் உங்களை நோட்டம் பார்த்துக்கொண்டே யிருப்பார்கள்!

செர்சியசு: (அடியுண்டவன்போல் அதிர்ந்து, அவளை விட்டுவிட்டு) கவனமாகப் பேசு உலூக்கா நான் வேண்டுமானல் உயர்நிலைக் காதலுக்குத் தகுதியில்லாதவனுக இருக்கலாம்... ஆனல் அவளைமட்டும் ஒன்றும் சொல்லாதே, தெரிகிறதா?

உலூக்கா: (போலியான பணிவுடன்) சொல்லமாட்டேன் ஐயா; சொல்லமாட்டேன். சரி. எனக்கு வேலையிருக்கிறது... நான் போகலாமா?

செர்சியசு: (மீண்டும் அவளை அணைத்து) நீ பொல்லாத குறும்புக்காரி உலூக்கா! நீ என்மேல் காதலுற்றிருக்கிருய் என்று வைத்துக்கொள். அப்பொழுது பலகணி வழியாக என்னை நோட்டம் விடவேண்டுமென்று உனக்குத் தோன்றுமா?

உலூக்கா: வந்து,.. நீங்கள் ஒருவரல்லர், பலர் சேர்ந்த உருவம் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள்; அதனல் நான் கொஞ்சம் விழிப்பாகத்தானே இருக்க வேண்டும்.

செர்சியசு: (அவள் பேச்சில் மயங்கி)... அழகாயிருப்பது போலவே அறிவுள்ளவளாயும் இருக்கிருயே!... (அவளை முத்தமிட முயல்கிருன்)

உலூக்கா: (அவனை விலக்கி) ஊகூம், உங்கள் கொஞ்சல் குலவல்களெல்லாம் எனக்கு வேண்டா. பெருங்குடி மக்கள் எல்லாரும் ஒன்றுபோல்தான் இருக்கின்றீர்கள்... இரெய்னு அம்மாவுக்குத்தெரியாமல் நீங்கள் என்னிடம் காதல் புரிகிறீர்கள் அங்கே என்னவென்ருல் அவர்கள் உங்களுக்குத் தெரியாமல்...

செர்சியசு: (பதறி, ஓரடி பின்வாங்கி,) உலூக்கா!

உலூக்கா: உங்களுக்கு என்மீதில் எவ்வளவு அக்கறை என்பது இதிலிருந்தே தெரிகிறதே!

செர்சியசு: (விளையாட்டுப் பேச்சை விட்டுவிட்டு மிகவும் கடுமையான குரலில்) உலூக்கா விழிப்பாகப் பேசு.. பெருங்குடி மகன் ஒருவன் தான் மணந்து கொள்ளப்போகும் பெருமாட்டி ஒருத்தியின் நடத்தையைப் பற்றி, அவள் வேலைக்காரியோடு சொல்லாடிக் கொண்டிருக்க விரும்பமாட்டான் என்பதை நினைவில் வைத்துக் கொள்!

உலூக்கா: இந்தப் பெருங்குடி மக்கள் எது சரி என்று நினைக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லையே! நீங்கள் என்னை முத்தமிட முயன்றதிலிருந்து, இரெய்னா அம்மாவின்மீதில் உங்களுக்குள்ள ஈடுபாட்டை விட்டுவிட்டீர்கள் என்று நினைத்தேன்...

செர்சியசு: (அப்புறமாகத் திரும்பி நெற்றியில் அடித்துக் கொண்டே தோட்டத்தை நோக்கி வருகிறான்) பிசாசு! பிசாசு!

உலூக்கா: ஆ! ஆ! உங்களுக்குள்ளே இருக்கும் ஆறு உருவங்களில் ஒன்றாவது என்னைப் போலவே இருக்கிறதே,... ஏதோ நான் வேலைக்காரியானாலும்!... (அவனைக் கவனியாமல் தன் வேலையைக் கவனிக்க மிசைப்பலகையருகில் செல்கிறாள்.)

செர்சியசு: (தனக்குத் தானே) இந்த ஆறு பெயர்வழிகளில் எவன் உண்மையான மாந்தன்? இந்த வினாவே என்னைத் துன்புறுத்துகின்றது. ஒருவன் பெருமறவன். ஒருவன் கோமாளி; ஒருவன் ஏமாற்றுக்காரன். மற்றொருவன்...கிட்டத்தட்டக் கயவாளி என்று சொல்லிவிடலாம் (சற்று நிறுத்தி, உலூக்காவைத் திருட்டுத்தனமாகப் பார்த்துக்கொண்டே, மிகவும் கசப்பு நிறைந்த குரலில்) மற்றொருவனோ, கோழை... எல்லாக் கோழைகட்கும் உரிய வயிற்றெறிச்சல் உடையவன். மிசைப் பலகை அருகில் சென்று) உலூக்கா!

உலூக்கா: என்ன...?

செர்சியசு: எனக்குப் போட்டியாக இருப்பவன் யார்?

உலூக்கா: அதைமட்டும் என்னிடமிருந்து தெரிந்து கொள்ள முடியாது. உருட்டினாலும் சரி, மிரட்டினாலும் சரி.

செர்சியசு: ஏன்?

உலூக்கா: ஏனென்றெல்லாம் கேட்காதீர்கள். அதோடு, நான் சொன்னேன் என்று சொல்லி விடுவீர்கள்... என் வேலை போய்விடும்...

செர்சியசு: (தன் உறுதிக்கடையாளமாக வலக்கையை அவட்கெதிராக நீட்டி) சொல்லவேமாட்டேன் உண்மையாகவே .. ஒரு (தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றான். அவன் கை தளர்வுற்றுக் கீழே விழுந்து விடுகின்றது... இறுதியாக கசப்பும்

எள்ளலும் நிறைந்த குரலில் பேசுகிருன்)... அதாவது...,கடந்த சில நொடிகளில் நான் நடந்து கொண்டேனே, அத்தகைய நடத்தைக்குரிய மாந்தன் என்ற முறையில் நான் உறுதி கூறு கிறேன்; யார் அவன்?

உலூக்கா: எனக்குத் தெரியாது. நான் அந்த ஆளைப் பார்த்ததேயில்லை. இரெய்னவின் அறைக்குள்ளிருந்து அவன் பேச்சுக்குரல் வருவதை மட்டும் கேட்டேன்.

சொர்சியசு: அட, கெடுவாய்! என்ன துணிச்சல் உனக்கு?

உலூக்கா: (சற்று விலகி நின்று)... நான் கெடுதி நினைக்க வில்லை. நல்லதற்குத்தான் சொன்னேன் அதை நீங்கள் எப்படி, இவ்வளவு தவருக எடுத்துக் கொள்ளலாம்? பெரியம்மாவுக்கு எல்லாம் தெரியும். வேண்டுமானுல் பாருங்கள்; அந்த ஆள் மறுபடி எப்பொழுதாவது இங்கு வந்தால் இரெய்ன அம்மா அவரைத்தான் மணம் செய்து கொள்வார்கள்...... அவருக்கு விருப்பம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி...... உங்கள் இருவரின் உண்மையான இயல்பு வேறு; நீங்கள் ஒருவர் முன் ஒருவர் நடிக்கக்கூடிய நடிப்பு வேறு; இஃது எனக்கு நன்ருகத் தெரியும்.

சொர்சியசு: (கத்தியால் குத்தப்பட்டது போன்று நடுங்கு கின்ருன்.) முகத்தை இரும்பாக்கிக் கொண்டு கடுமையோடு, அவளருகில் சென்று இருகைகளாலும் அவள் தோள்களை இறுகப் பற்றுகிருன்)... இப்பொழுது சொல்கிறேன், கேள்.

உலூக்கா: (வலியால் முகத்தைச் சுளித்து)...... இறுகப் பிடித்தல் வேண்டா... வலிக்கிறது.

சொர்சியசு: வலித்தால் வலிக்கட்டும்...... ஒற்றுக்கேட்கும் உன் செயலுக்கு நீ என்னையும் உடந்தையாக்கி என் மானத் தைக் குலைத்துவிட்டாய். உன் தலைவியை வேறு காட்டிக் கொடுத்துவிட்டாய்.

உலூக்கா: (வலியால் துடித்து)... அருள் கூர்ந்து...

சொர்சியசு: உன்னை ஏதோ என்று நினைத்தேன்; பொழுது தெரிகிறது. சீச்சீ! நீ வெறுங் குப்பைத் தொட் தெருப் புழுதி...சீச்சீ, வேலைக்காரத் தன்மை உன்னை போகாது. (ஏதோ அழுக்கான பொருளை உதறு அவள் கையைத் திடுமென விட்டுவிட்டுக் கைகளைத் து கொண்டு திரும்புகிருன். சுவர் அருகிலுள்ள விசிப் அடைந்து தலையைத் திருப்பிக் கொண்டு உட்காருகி உள்ளத் தளர்வோடு எதையோ ஆழ்ந்து எண்ணி கின்ருன்)

**உலூக்கா:** (சினத்துடன் சினுங்கிக் கொண்டு அவனின் வலிவான பிடியால் கன்றிப்போன, இடங்களைத் தடவிக் கொண்டு) கையால் புண்ணாக்கியது போதாதென்று நாவாலும் புண்படுத்தத் தெரிந்திருக்கிறீர்கள்... சரி சரி அதனால் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நான் எப்படிக் குப்பைத் தொட்டியோ அப்படியே நீங்களும் குப்பைத்தொட்டிதான் என்று இப்பொழுது தெரிந்துவிட்டது... இரெய்னா...அவள் ஒரு பொய்க்கனி. அவளுடைய பண்பாடு கிண்பாடெல்லாம் வெறும் நாடகம், ஏமாற்று! அவளைவிட நான் எவ்வளவோ மேல்... (வலியை நீக்குவது போலக் கைகளைத் துடைத்துவிட்டு உதறுகிறாள்.) தலையை ஒரு திருப்புத் திருப்பிக்கொண்டு தன் வேலையைத் தொடர்கின்றாள்) செர்சியசு ஒரு வகையான தயக்கத்துடன் அவளைப் பார்க்கிறான். அவள் தட்டில் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டு உள்ளே எடுத்துப் போவதற்காகத் துணியால் மூடி விளிம்பை இழுத்து விடுகின்றாள். அதனைத் தூக்கக் குனிகையில் அவன் எழுகிறான்)

**செர்சியசு:** உலூக்கா! (அவள் நின்று அவனை எதிர்ப் புணர்ச்சியோடு முறைத்துப் பார்க்கின்றாள்,) எத்தகைய சூழ் நிலையிலும்கூட பெண் ஒருத்தியை இவ்வாறு காயப்படுத்துபவன் பெருமகன் அல்லன. (மிக ஆழ்ந்த பணிவுடன், தலையிலிருந்து கவிப்பை எடுத்துக்கொண்டு) என்னை மன்னித்து விடு!

**உலூக்கா:** இதுபோன்ற மன்னிப்புகளெல்லாம் வேண்டு மானால் உங்கள் நாகரிகப் பெருமாட்டிமார்களை நிறைவு செய்தல் கூடும். என்னைப்போல் வேலைக்காரிக்கு இதனால் எல்லாம் என்ன பயன்?

**செர்சியசு:** (தன் செய்கை மதிக்கப்படாமற் போகவே, சலிப்புடன் அதனைக் கைவிட்டுவிடுகிறான் கசப்புடன் சிரித்துக் கொண்டே சிறிது இளப்பமான குரலில் பேசுகிறான்) ஓகோ! .. காசு கேட்கிறாயா, காயம் பட்டதற்கு? (தன் தலைக்கவிப்பை அணிந்து கொண்டு பையிலிருந்து சிறிது பணத்தைை எடுக் கின்றான்.)

**உலூக்கா:** (அவளையும் மீறி வெளிப்பட்டுத் துளும்பி நிற்கும் கண்ணீருடன்) அஃது அன்று,...என் காயத்தை ஆற்ற ...ண்டும்.

...சர்சியசு: (அவள் குரலின் தன்மையுணர்ந்து, சுதாரித் ...ண்டு) எப்படி?

...ள் தன் சட்டையின் இடது கையைச் சுருட்டிக்கொண்டு ...ட இடத்தை வலது கையால் பிடித்துக்கொண்டு உற்று ...றாள். பின்பு தலையை உயர்த்தி, செர்சியசை நோக்கு ... இறுதியாக, தோளைத்தூக்கி; அதனை முத்தமிடுமாறு ...த முகக் குறிப்புக் காட்டுகின்றாள். அவன் திகைப்புற்று

அவளையும் தோளையும் மாறிமாறிப் பார்க்கின்றான். பின்பு மிகவும் பதறியவனாக...) அதுதான் முடியாது. (என்று கூறி விட்டு அவளைவிட்டு விலகிச் செல்கிறான். அவள் கை கீழே விழுகின்றது வாய் திறவாமல், ஒரு வகைப் பெருமிதத்தோடு தட்டைத் தூக்கிக் கொண்டு வீடு நோக்கிச் செல்கின்றாள். எதிரில் இரெய்னா வருகின்றாள். முந்திய ஆண்டு (1885) வியன்னா நகரில் நாகரிகத்தின் அடையாளமாக விளங்கிய பகட்டு உடையினையும் தலைக்கவிப்பையும் அணிந்திருக்கின்றாள். உலூக்கா அழுத்தலான செருக்குடன் வழிவிலகி நின்று அவளைப் போகவிட்டுப் பின்பு உள்ளே செல்கின்றாள்.)

இரெய்னா: இதோ நான் புறப்பட்டாயிற்று...... என்ன செய்தி?... (விளையாட்டுக் களிப்புடன்) உலூக்காவோடு காதல் பண்ணிக் கொண்டிருந்தீர்களா?...

செர்சியசு: (விறுக்கென) அதெல்லாம்... என்ன இது! நீ இப்படியெல்லாம் நினைக்கலாமா!

இரெய்னா: ..(தன் சொற்கு நாணி) என்னை மன்னித்து விடுங்கள் அன்பே, ஏதோ பகடியாகச் சொன்னேன். நான் இன்று மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றேன்.

(செர்சியசு விரைந்து அவளருகு சென்று ஒரு வகைக் கழி விரக்கத்தோடு அவளை முத்தமிடுகின்றான். காதரின் பெருமாட்டி படிக்கட்டின் உச்சியில் வந்துநின்று அவர்களை அழைக்கிறார்.)

காதரின்: (கீழே இறங்கி வந்து) என்ன செய்வது உங்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டியிருக்கிறது, பிள்ளைகளே! ஆனால் அவர் இந்தப் படை ஏற்பாட்டில் குழம்பிப் போயிருக்கிறார். அவற்றைப் பிலிப்பாப் பொலிசுக்கு எப்படி அனுப்புவதென்பது அவருக்குப் ஏறவேயில்லை. நான் சொல்லும் வழி எதையும் அவர் கேட்கவேமாட்டேன் என்கிறார். செர்சியசு, நீதான்போய் அவருக்கு உதவி செய்ய வேண்டும். நூல்நிலைய அறையில் உட்கார்ந்திருக்கிறார்.

இரெய்னா: (ஏமாற்றமடைந்து)... இப்பொழுதுதான் உலாவி வரலாம் என்று புறப்பட்டோம்!

செர்சியசு: ஒன்றும் நேரமாகாது இரெய்னா; இதோ ஐந்து நிமையத்தில் வந்து விடுகிறேன் (உள்ளே விரைகிறான்)

இரெய்னா: (படிக்கட்டு வரை அவன் பின்னே சென்று காதற்குறிப்புடன் அவனை நோக்குகின்றாள்:) நான் அப்படியே சுற்றிப்போய் நூல்நிலையப் பலகணிகளுக்கு எதிராக வெளியே நின்று கொண்டிருப்பேன். நான் அங்குநிற்பதை அப்பாவுக்குக் காட்டுங்கள். ஐந்து நிமையத்துக்கு ஒரு நொடி மிகுதியாகப் போனாலும் உங்களை அழைக்க உள்ளே வந்துவிடுவேன். உங்கள் படைஏற்பாடு எப்படிப் போனாலும் சரி.

செர்சியசு: (சிரித்துக் கொண்டே) ... சரி ... மிகவும் நல்லது... (உள்ளே செல்கிறான்)

இரெய்னா: அவன் கண்ணுக்கு மறையுமட்டும் அவனையே பார்த்துக் கொண்டிருக்கின்றாள். அவன் மறைந்ததும் அவளின் நாடகபாணியெல்லாம் மறைந்து விடுகின்றன வெறுமெனத் தோட்டத்தில் அங்குமிங்குமாக உலாவத் தொடங்குகின்றாள்.

காதரின்: (இரெய்னாவை நோக்கி) அந்த சுவிசுக்காரனை இவர்கள் இருவரும் எப்பொழுதாவது பார்த்து முழுக்கதையையும் தெரிந்துகொண்டால் எப்படியிருக்கும்! உன அப்பா வந்தவுடனே என்னிடம் கேட்டது அவருடைய அந்தப் பழைய குப்பாயத்தைப்பற்றித்தான். அதைத்தானே அந்த ஆளுக்குக் கொடுத்தோம்! இந்தச் சிக்கலெல்லாம் உன்னால் தான்.

இரெய்னா: (தரையிலுள்ள கூழாங் கற்களை உற்று நோக்கிக்கொண்டு ஆழ்ந்து எண்ணியபடு) குறும்புக்காரக் குரங்கு!

காதரின்: குறும்புக்காரக் குரங்கா? யாரடி குறும்புக்காரக் குரங்கு?

இரெய்னா: போய்ச் சொல்லி விட்டான் பார்! இப்பொழுது மட்டும் அந்த ஆள் இங்கே இருந்தால்... இனிமேல் வாயே திறக்காதபடி அவன் வாய்நிறைய நொறுவையைத் திணித்துத் திணறவைத்து விடுவேன்!

காதரின்: இப்படியெல்லாம் பேசாதே! என்னிடத்தில் உண்மையைச் சொல்லிவிடு இரெய்னா. நீ என்னை வந்து கூப்பிடுவதற்குமுன்பு அவன் எவ்வளவு நேரம் உன் அறையில் இருந்திருப்பான்?

இரெய்னா: (சடக்கெனத் திரும்பி எதிர்ப்புறமாக நடக்கத் தொடங்குகிறாள்)... அதெல்லாம் எனக்கு நினைவில்லை.

காதரின்: அதெப்படி நினைவில் இல்லாமற் போகும்? படைமறவர்களெல்லாரும் தேடிப்பார்த்துவிட்டுப் போனபிறகு அவன் ஏறிக் குதித்து வந்தானா, அல்லது அவர்கள் தேடும் பொழுதே அறைக்குள்தான் இருந்தானா?

இரெய்னா: ..இல்லை......, ஆமாம்,... அப்பொழுது அங்கேதான் இருந்திருப்பான் என்று நினைக்கின்றேன்.

காதரின்: நினைக்கிறாயா! என்னடி இரெய்னா, நீ ஒன்றைக் கூட ஒளிக்காமல் என்னிடத்தில் சொல்லமாட்டாய்...? செர்சியசுக்கு மட்டும் இது தெரிந்தால்... பிறகு அவ்வளவுதான் அவனோடு உன் திருமணம்...

(தொடரும்)

பத்து முறை சரிபார்த்த பின்னர், கப்பற் படையைச்சேர்ந்த இவ் விளம் அலுவலர் செயின் உலூயிசில் (St. Louis) 1879-ஆம் ஆண்டில், அமெரிக்க அறிவியல் முன்னேற்றக் கழகத்திற் சென்று, விசும்பில் ஒளியின் விரைவாற்றலைப்பற்றித் தம் புதிய முடிவை (ஒரு நொடியில் 1,86,508 கற்கள்) வந்திருந்த அறிஞர் குழாத்திற்கு அறிவித்தார். இத்தகைய வரலாற்றுப் புகழ்பெற்ற செய்தியுடன் இருபத்தாறே அகவையுடைய மைக்கல்சன் அமெரிக்க அறிவியலார்களின் முன்னணியில் ஒருவரானார். மிகப் பெரிய அறிவியல் ஒள்ளியர்களான சைமன் நியூ கோம்பு (Simon new comb) அலெச்சாண்டர் கிரகாம் பெல் (Alexander graham bell) போன்றோரின் ஊக்கவுரைகளைப் பெற்றார். 1882-ம் ஆம் ஆண்டில் மைக்கல்சன் மீண்டும் ஆய்வு நிகழ்த்தி ஒளியின் விரைவு நொடிக்கு 1,86,320 கற்கள் என்று திருத்தம் செய்து ஒளியின் விரைவை அறுதியிட்டார். அம்முடிவு 45 ஆண்டுக் காலத்திற்கு நிலைத்து நின்றது. மீண்டும் 1927-ஆம் ஆண்டில் அது திருத்தப்பெற்றது. அதைச் செய்ததும் மைக்கல்சன் அவர்களே.

**விசும்பும் காற்றும்:-** 1881-ஆம் ஆண்டில் மைக்கல்சன், ஒகியோ (Ohio) மாநிலத்தில் கிளீவுலாத்தில் (Cleave land) உள்ள, புதிய செய்முறை அறிவியல் பள்ளியில் இயல்பியல் பேராசிரியராகப் பணியாற்றும் பொருட்டுக் கடற்படையிலிருந்து பதவி விலக்குப் பெற்றார். இங்கே அவர் மிக்கக் கடினமான சிக்கலைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஒளியைப் பரப்புகின்ற, தொட்டுணரவியலாத ஒரு பொருள், விண்வெளி முழுமையும் புரவியுள்ளது என்றும், ஒலி அலைகள் காற்றில் இவர்ந்து பரவுதல் போல் ஒளி அலைகளும் இத்தகைய பொருள்மேல் இவர்ந்து விசும்பின்வழி பரவுகின்றது என்றும் பொதுவாக நம்பப்பெற்று வந்தது. ஆனால் விசும்பு என்று ஒன்றுள்ளதா? இது மைக்கல்சன் அவர்களின் வினா. அவ்வாறானால் இவ்வுலகமானது நொடிக்கு 18·6 கற்கள் மேனி கதிரவனைச் சுற்றி வரும் ஆண்டுப் பயணத்தினால் விசும்புக் காற்றையும் இயங்கச் செய்தல்வேண்டும். அவ்வாறாயின், ஒளி அலைகள் விசும்பினால் கடத்தப் பெறும் பொழுது, அவ்விசும்பு அவற்றுக்குச் சிறிதேனும் தடையை ஏற்படுத்தல் வேண்டும். ஆகவே ஒளிக்கதிர் காற்றின் வழி அல்லது அதற்கு எதிராகச் செல்லும் பொழுது அதனுடைய விரைவில் வேறுபாடு இருத்தல் வேண்டும். மைக்கல்சன் மிக மிக நுண்ணமைப்புடைய, புதுமையான, ஒளியியலைச்சார்ந்த ஒளியலை அளவுகருவி (Interfero meter) ஒன்றைக் கண்டுபிடித்தார். அக்கருவி, கண்ணாடியினால் எதிரொளிர்வு பெற்று ஒரே நேரத்தில் திரும்பிய இரண்டு ஒளிக் கற்றைகளின் கால அளவைக் குறிப்பதில் செயற்பட்டது.

ஓர் ஒளிக்கதிரானது காற்றிற்கு நேர் எதிர்ப்போக்கிலும் மற்ருென்று நேரிடையாக அதற்குள்ளும் செலுத்தப் பெற்றன. இதில், கால அளவில் சிறிதளவேனும் வேறுபாடு இருந்திருந் தாலும், இரண்டு ஒளி அலைகளும் ஒன்று கூடுகையில், தடை யின் விளைவு, அளக்கக்கூடிய படி தென்பட்டிருக்கும்.

மைக்கல்சனும், அவருடைய தொழிற்றுணைவரும், பல்கலைக் கழகப் பேராசிரியருமான, எட்வர்டு மோர்லே ( Edward Morley ) என்பாரும் 1887-இல் அவர்களுடைய ஆய்வுகளைத் தொடங்கினர். விசும்புக் காற்றில் மேல் நோக்கி யும் குறுக்கிலும் செலுத்தப்பெற்ற ஒளியின் விரைவில் வேறுபா டுள்ளதா என்றறிய மிக்க பளுவுள்ள ஒளியலை அளவு கருவியை முழுவட்ட அளவில் விரைந்து சுற்றி ஆய்ந்தனர். அவ்வாய்வா னது ஐயத்திற் கிடமேதும் வைக்கவில்லை. அப்பொறியும் செம்மையாக இயங்கும் நிலையில் இருந்தது. அவர்கள் ஒன்றை யும் அறிய இயலவில்லை. இறுதியில் அவர்கள் புரட்சித் தன்மை வாய்ந்த ஓர் உண்மையைக் கண்டுபிடித்து நிறைவு பெற்றனர். அது விசும்பு என்பது ஒன்றில்லை என்பதே!

வருவதும் போவதும்:- இவ்வாய்வானது மற்ருெரு வியப் பளிக்கக்கூடிய உண்மையை வெளிப்படுத்திற்று. அம் மைக்கல் சன்–மோர்லே ஆய் கருவியானது தனிச் சிறப்பும் நுண்ணமைப் பும் உடையதாயிருந்தது. அஃது, ஒளியானது இவ்வுலகம் சுற்றுகின்ற திசையை நோக்கியே சென்ருலும், அல்லது அதற்கு எதிர்புறத்தில் சென்ருலும் அதனுடைய விரைவை மிக எளிதாகக் கணக்கிடும். ஆனுல் அறிவியல் அறிஞர்கள் இவ் வளவையை மேற்கொண்டபொழுது எவ்வகையான விரைவு மாற்றத்தையும் அறிய இயலவில்லை. இக் கண்டுபிடிப்பிலிருந்து சிறப்புமிக்க ஓர் அடிப்படை உண்மை வெளியாயிற்று. ஒளியின் விரைவானது, அது சென்றுகொண்டிருந்தாலும் அல்லது வந்து கொண்டிருந்தாலும் எப்பொழுதும் ஒரே அள வாகவே இருக்கும்.

இக் கண்டுபிடிப்பானது பொது அறிவுக்கு முரணுகக் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக; விரைந்து வரும் ஒரு தொடர் வண்டிப் பொறியின் முகப்பு விளக்கிலிருந்து வரும் ஒளி, அவ் விளக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவரின் பார்வையில் படுகையில் ஒளியின் விரைவுடன் அப் பொறியின் விரைவுகளையும் சேர்ந்தே பாய்கின்றது என்று ஒவ்வொருவ ரும் கருதிக் கொண்டிருந்தனர். வேறு வகையாக நினைப்பதென் பது சற்றும் பொருந்தாதது போலவே தோன்றியது.

$E = Mc^2$ :- இக் கண்டுபிடிப்பால் மிகப் பல அறிவிய லறிஞர்கள் மனக்குழப்பமும் அதிர்ச்சியும் உற்றனர். ஆனுல்

சில ஆண்டுகட்குப் பிறகு செருமானிய இளைஞரான ஆல்பர்ட்டு ஐன்சுடீனுக்கு, மைக்கல்சன்-மோர்லே ஆய்வுகள் ஆர்வப் பரபரப்பினை ஊட்டின. ஒளியின் விரைவு நிலையானதாக இருக்குமாயின் காலம் வெளி பற்றிய வடிவியல் முறைக் கணக்கில் (Geometry) இவ் வடங்கா உண்மையைப் பொருத்தி இயைபு காணற்கு வியப்புக் குரிய புதிய கணக்கியல் வாய்பாடுகள் – சுறுக்க விதிமுறை தேவைப்படும் என ஐன்சுடீன் கருதினர். இவ் வாய்பாடுகள் காலம், வெளி இரண்டையும் நிலைமாறுந்தன்மை யுடையனவாக (Variybles) வே காட்டப் புகுகின்றன.

இஃது உண்மையாகவே வியப்புக்குரிய முடிவுகளை உண்டாக்குகின்றது. ஒரு பொருள் விரைவு எய்தும் பொழுது காலம் குறைகின்றது விரைவு மிகுந்தால் பொருளின் நீளம் சுருங்குகின்றது! உண்மையில் புடவியில் ஒளியின் விரைவாற்றலைத் தவிர வேறொன்றும் நிலையானது அன்று என்று இச் செருமானியப் பேரறிஞர் அறிவித்தார் காலமும், இயக்கமும் உட்பட எல்லாமே ஒன்றுக்கொன்று சார்புடையவை இதுதான் அவருடைய புகழ்சான்ற, தனிச் சிறப்பு வாய்ந்த சார்பு நிலைக் கொள்கையாகும்.

ஐன்சுடீன், பொருள் (Mass) ஆற்றல் (Energy), காலம் (Time), வெளி (Space) இவற்றிற்கிடையேயுள்ள, முரண்பாடுடைய மெய்ம்மைத் தொடர்பை நிலைநாட்டு முகத்தான் தொடர்ச்சியான சமன்பாடுகளை (Equations) விரிவு படுத்தினர். பெருவிளைவுக்குரிய அவர்தம் ஐந்தாம் சமன்பாடு ($E=Mc^2$) மிகச்சிறு அளவினதாகிய பொருள் வியத்தகு பேராற்றலைத்தரக் கூடும் என்பதை முன்கூட்டி உரைத்தது. 1965 சூலை 16-இல் மெக்சிகோவில் உள்ள 'அலமகார்டோ' (Alamogordo) வில் முதன் முறையாக அணுவைப் பிளந்த ஞான்று இஃது செய்யப் பெற்றது. அதன் பிறகுதான் பொதுமக்கள் சார்புநிலைக்கொள்கை மீதுள்ள ஐயப்பாட்டைக் கைவிட்டனர். ஆல்பர்டு ஐன்சுடீன், அறிவியல் மாநாடொன்றில் உடனுழைப்பாளருக்குப் பாராட்டுத் தெரிவிக்கையில் ''மேதகைமை வாய்ந்த மைக்கல்சன் அவர்களே! நான் மிகச் சிறுவனயிருந்த பொழுது தாங்கள் இப் பணியினைத் தொடங்கினீர்கள். தாங்கள்தாம் இயல்பியல் ஆய்வுத் துறையாளர்களை புதிய பாதையில் நடையிடச் செய்தீர்கள். தங்களுடைய மிகப்பெரிய ஆய்வுத் தொழிலினல் சார்பு நிலைக் கொள்கையை விரிவுபடுத்தும் வழியினையும் அமைத்தீர்கள். தங்களுடைய இப்பணி இல்லையேல் இக் கொள்கையானது ஏதோ சுவையுள்ள கருது கோளாகவே இருந்திருக்கும்'' என்று கூறினர்.

முதுபெருங் கிழவர்: மைக்கல்சன், தம் வாழ்நாளின் பின் பகுதியில், தம் வியத்தகு ஒளியலை அளவுகருவியின் ஆற்ற

லைப் புடவியிலுள்ள (Universe) பிற பொருள்களை அளவிடு வதில் பயன்படுத்தினர். இதைக்கொண்டு மிகச் சிறிய ஒற்றை நிறமம்கொண்ட ஒளியின் அலை நீளங்களையும் அளந்தார். மிகப் பெரிய, 36 இலக்கம் கற்கள் குறுக்களவுள்ள மிகத் தொலைவி லுள்ள 'பெட்டல்குசு' (Betelgeuse) என்ற உடுவினையும் (Star) அளந்தார்

1929-ஆம் ஆண்டில் மைக்கல்சன் அமெரிக்காவின் மிக முதிர்ந்த அறிவியல் ஒள்ளியராக விளங்கினர். அவர் 37 ஆண்டுகள் சிக்காகோ பல்கலைக் கழகத்தின் இயல்பியல் துறை யின் தலைமையேற்றிருந்தார். 1907-இல், இயல்பியலில் சரியான அளவு முறைகளுக்கான வழிமுறை அமைத்தமைக்காக நோபல் பரிசு அவர்க்களிக்கப் பெற்றது. அவர்தாம் அப் பரிசைப் பெற்றுக்கொண்ட முதல் அமெரிக்கர். ஆனல் அவர் இத்தகைய பாராட்டுதல்கட்கு நன்றி சொல்லக்கூடக் காலத் தைச் செலவிடாமல் தம் புதிய பணிகளில் தொடர்ந்து மேற் சென்ருர். மைக்கல்சன் மேலும் ஒளியின் விரைவு அள்வுகளைத் துல்லியமாக்கும் பணிகளில் ஈடுபட்டார். இம் முறை ஒரு கல் நீளமுள்ள வெற்றிடம் கொண்ட குழாய்க்குள் முன்னும் பின்னும் எதிரொளிர்கின்ற (Reflect) ஒளியினல் விரைவை அளக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். அப்பொழுதுதான் அவர் (1931இல்) தம் 79-ஆம் அகவையில் உயிர் நீத்தார்.

இத்தகைய இவ்வருஞ் செயல்களைச் செய்யுமாறு அவரைத் தூண்டிய ஆற்றல் என்னவாக இருக்க முடியும்? "இயற்கை யன்னை தன் நோக்கங்கட்கேற்ப வழிமுறைகளை இயைபுபடுத்திச் செல்லும் வியத்தகு நிகழ்வுகள், என்றும் மாருத இயற்கைச் சட்டங்கள், வெளிப்படையாக மிகவும் ஒழுங்கற்றனவதாகவும் சிக்கல் நிறைந்தவாகவும் தோன்றுகின்ற இயற்கையின் இயக்கங் களில் ஊடுருவி நிற்கும் ஒழுங்கு முறை, இவற்றின் பேரழகினை விஞ்சுவது எது?" என்று அவரே அதுபற்றிக் கூறியுள்ளார்.

## தமிழ் நானூறு.

இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் உயிர் துறந்தாரைப் பற்றியும், சிறை சென்ருர் பற்றியும் ஆங்காங்குள்ளவர்களை எழுதியனுப்புமாறு வேண்டியிருந்தோம். இன்னும் பலரைப் பற்றி எந்தச் செய்தியும் வரவில்லை. அந்தகைய தடந்தோள் மறவர்களைப் பாராட்டித் 'தமிழ் நானூறு' என்ற பனுவல் நூல் உருவாக்கப் பெறுவது யாவரும் உணர்ந்ததே! இவ்வருந்தமிழ்ப் பணிக்குத் துணை நின்று ஆவன செய்யு மாறு அனைவரையும் வேண்டுகின்ருேம்.

– பெருஞ்சித்திரன்.